திருக்கோயில்

திங்கள் வெளியீடு

மாலை 1] விளம்பி கார்த்திகை - 1958 டிசம்பர் [மணி 3

திருக்கோயில்களும் உருவவழிபாடும்

தமிழ்நாட்டில் திருக்கோயில்கள் இல்லாத ஊர்கள் இல்லை என்றே சொல்லலாம். ஊர் தெரியுமுன்பே வானளாவிய கோபுரங்கள் தொலைவிலேயே காட்சியளிப்பதைக் காண்கிறோம். 'கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' 'திருக்கோயில் இல்லாத ஊர் திருவிலூர்' என்பது நமது கொள்கை. மிகச்சிறிய ஊர்களில்கூட ஒரு அரசமரத்தடிப் பிள்ளையார் அல்லது அம்மன் கோயில் இருக்கும். கோயில் என்ற சொல்லுக்கே அரசன் வீடு என்பது பொருள். சாதாரணமாக அரசர்கள் வாழும் மாளிகைகளை அரண்மனைகளென்றும் அரசர்களுக்கெல்லாம் அரசனாக விளங்கும் இறைவன் உறைவிடங்களையே கோயில்கள் என்பதும் தமிழன் மரபு. ஆதியில் மரங்களின் அடியிலேயே ஆலயங்கள் தோன்றின என்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். 'ஆலமர் செல்வன்' என்று கடவுளை வழிபட்டனர். பின்பு மரத்தைச் சுற்றி மதில்கள் எழுப்பினர். படிப்படியாகக் கற்கோயில்கள் கட்டப்பட்டன. புதைபொருள் ஆராய்ச்சியின் மூலம் பண்டைக் கோயில்கள் பருத்த சுவர்களைக் கொண்ட சிறு அறைகளில் ஆதியில் தோன்றியதாகவும் அவற்றின் மேல் மாடிகள் இருந்திருக்கலாமென்றும் அவ்வமைப்பே பிற்காலத்தில் கோபுரங்களாக மாறியுள்ளன என்றும் கூறுகின்றனர். பல கோயில்களில் இன்னும் தலவிருக்ஷங்கள் உள்ளன.

ஆலமர்கடவுள் வழிபாட்டினின்றும் ஆலயங்கள் தோன்றியதால் ஆல் ஐயன் இடம் ஆலயம் என்பாருமுளர். ஆலயம் என்ற சொல் ஆ=ஆன்மாக்கள் லயம்=ஒடுங்குமிடம். அதாவது ஆன்மாக்கள் தங்களைப் பந்தித்த மலங்கள் ஒடுங்கப்பெற்று மனம் மொழி மெய்களால் நினைந்து வாழ்த்தி வணங்கி அருள் ஞானம் பெற்று இறைவன் திருவடியில் ஒடுங்குவதற்குச் சாதனமான இடம் என்று பொருள் படும். 'ஆ' என்பதற்கு அனைத்தும் என்ற பொருளும் கொள்ளலாம். இறைவன் எங்கும் வியாபகமாயிருப்பினும் ஆன்மாக்கள் சுகதுக்கங்களால் சூழப் பெற்று மனத்தில் எண்ண அலைகள் மாறி மாறி வந்து கொண்டேயிருக்கும் இயல்பினராயிருத்தலால் ஒரு தனியிடத்தில் தங்களிலும் சிறந்த பலர் உறவுகொண்டுஒன்றியிருந்து ஒரு ஒழுங்குக்

குக்கட்டுப்பட்டு இறைவனை வழிபடுவதற்கென அமைக்கப்பெற்ற பொது இடமே திருக்கோயில். எல்லாச் சமயத்தினரும் தங்கள் கோட்பாடுகளுக்கு இயைந்தவாறு ஆலயங்கள் அமைத்துக் கொண்டனர். தத்துவங்களை எல்லாம் கடந்து அணுவுக்கணுவாய் அப்பாலுக்கப்பாலாய் மனோவாக்குக்காயங்களுக் கெட்டாத பரம் பொருளை வழிபடுவதற்குப் பொது இடம் மாத்திரம் போதாது. மனத்தை ஒருநிலைப் படுத்தி இறைவனை வழிபடுவதற்கு இறைத் தத்துவங்களை விளக்கும் கவர்ச்சிகரமான உருவங்களை நம் முன்னோர் அமைத்துள்ளனர். உருவ வழிபாட்டின் உண்மை நிலையை உணராத ஒரு அறிஞர் எல்லாம் வல்ல இறைவனை ஒரு சிறிய உருவத்தில் வழிபடுவது முறையா என்று கேட்டபோது அவரிடம் மறு கேள்வியாக 'சர்வ வல்லமையுள்ள இறைவனுக்கு இவ்வழகிய பிம்பத்தில் காட்சியளித்து அருள் செய்யும் வல்லமை இல்லையா? சர்வ வியாபியான இறைவன் இச்சிறு உருவத்தில் இல்லையா?' என்று கேட்டால் என்ன விடை சொல்ல முடியும்.

> ' மரத்தை மறைத்தது மாமதயானை
> மரத்தில் மறைந்தது மாமதயானை '

என்பது போல் மரத்தால் செய்த யானையின் வடிவத்தை ஆராயும்போது யானை தான் தோன்றும்; மரத்தின் நினைவு இராது. மரத்தின் இயல்பை ஆராயும் போது யானையின் நினைவு இராது. அது போல் இறைவன் தத்துவங்கள் நிறைந்த உருவங்களை அந்த இறைவனாகவே பாவித்து வழிபடுவோர்க்கு இறையருளும் இறையன்பும் இறைத் தத்துவங்களும் தோன்றுமேயன்றி அவ்வுருவங்கள் செய்வதற்குப் பயன்பட்ட பொருள்களில் மனம் செல்லாது. மனத்தின் இயல்பு அவா அல்லது பற்று. அந்தப் பற்று இறைவன்பால் செல்லுதற்கு மார்க்கம் வகுத்ததே சமயம் ஆலயம் மூர்த்திகள் எல்லாம் அம் மார்க்கத்தின் முக்கிய சாதனங்கள்,

> ' பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
> பற்றுக பற்றுவிடற்கு '

என்றார் வள்ளுவர்.

> ' அற்றது பற்றெனில் உற்றது வீடு '

என்றார் நம்மாழ்வார்.

நமது கோயில்களில் உள்ள உருவங்கள் எல்லாம் சிறந்த உண்மைத் தத்துவங்களைப் போதிப்பனவாகவே அமைந்துள்ளன. அவைகளை விளக்கிக் கட்டுரைகள் மாதந்தோறும் வெளிவரும். முதன்மையாக விநாயகர் (கணபதி), விசுவக்சேனர் (சேனைமுதல்வர்) உருவங்களைப் பற்றிய குறிப்புக்கள் தரப்படுகின்றன. தனிக் கட்டுரைகளில் விளக்கம் காண்க.

1. விநாயகர் ஓங்கார சொரூபி. நாத தத்துவத்தை விளக்கும் உருவினர்.

> அகரமுதலஎழுத் தெல்லாம்ஆதி
> பகவன் முதற்றே உலகு '

2. விநாயகர் ஞான சொரூபி. அறிவுக் கடவுள். ஞானக்கொழுந்து. கல்வியின் பயன் உயிர்க்குறுதியாகிய இறைவன் திருவடியடைதலே.

> ' கற்றதனா லாயபயனென் கொல்வாலறிவன்
> நற்றாள் தொழாஅர் எனின் '

3. விநாயகர் நினைப்பவர் மனம் கோயிலாகக் கொண்டவர். சிறு குழந்தைகள் முதல் மூதறிஞர் வரை மனத்தால் நினைக்க எளிதாகவும் மறக்க முடியாத

தாகவும் உள்ள உருவம் யானையேயாதலால் அன்புடன் நினைவாரது உள்ளக் கமலத்தில் நினைப்பவர் நினைந்த வடிவோடு விரைந்து சேரும் 'மலர்மிசை ஏகினன்' என்ற உயிர்க்குயிராய் விளங்கும் இறைத் தத்துவத்தை விளக்கும் உருவம்.

4. 'வேண்டுதல் வேண்டாமையிலான்' என்பது இறைவன் இயல்பாகவே பாசங்களின் நீங்கியவன்என்ற குணத்தை குறிக்கும். அவருடைய ஐங்கரங்களும் ஐந்துமலங்களையும் அழிக்கும். அரவக் கச்சும் பாசம் அங்குசம் என்னும் ஆயுதங்களும் அஞ்ஞான வடிவான மூஞ்சுறு வாகனமும் ஆணவம் அறியாமை முதலி மலங்களை அவர் அடக்கி ஒடுக்கும் ஆற்றலைக் குறிக்கும்.

5. அறியாமையாகிய இருள் காரணமாக ஏற்படும் இருவினைகளும் ஞான சொரூபியாகிய இறைவனால் பெற்ற உபதேசப் பொருளொடு பொருந்திய புகழ் தங்கினவரிடத்து என்ற குறளை நினைப் பூட்டும் வகையில் அமைந்தது ஞானத்தின் திருவுருவமாகிய விநாயகர் உருவம்.

6. 'வைராக்கியம்' 'ஞானம்' என்னும் அருங்குணங்களை வடிவாகக் கொண்ட விநாயகர் ஐம்புலன்களையும் அடக்கும் ஒழுக்க நெறியைக் காட்டுகின்றார்.

7. விநாயகர் என்ற பெயரே 'தனக்குவமையில்லாதவர்' என்ற பொருள் படும்.

8. 'அறவாழி யந்தணன்' அல்லது அறக்கடல் வடிவு தாங்கி எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்ட இறைவன் பேரருளுடைமையை விநாயகர் நீண்ட துதிக்கையும் மோதகமும் குறைகளைக் கேட்க உதவும் பெருங்காதுகளும் விளக்கும்.

9. விநாயகருடைய பெருவயிறும் பெருங்காதும் அவருடைய சர்வ வியாபக சக்தியைக் குறிக்கும்.

10. பிள்ளையாரென்ற திருப்பெயர் அவர் என்றும் பிள்ளையாக இருக்கும் ஆதியும் அந்தமுமில்லாத நித்தியத்துவத்தைக் குறிக்கும்.

11. உயர்திணை அஃறிணை என்ற பாகுபாட்டுக் கப்பாற்பட்டவராய் ஆண் பெண் அலி என்ற வகைகளில் அடங்காதவராய் அவன் அவள் எனும் மூவகைப் பொருள்களையும் கொண்ட உருவினராய் விளங்குகிறார் விநாயகர். ஆண் யானைக்கு இரு கொம்புகள் உண்டு. இவர் ஒற்றைக் கொம்பர். பெண் யானைக்குக் கொம்பு கிடையாது. அலி என்றால் மதம் கிடையாது. விநாயகர் மும்மதத்தார்.

12. விநாயகரது திருமுடியில் இலங்கும் பிறைச் சந்திரன் அமுத கலையுடன் கூடிய ஞானசந்திரகலை அவருடைய வரம்பிலின்பமுடைமையைக் குறிக்கும்.

13. மாயையைத் தன் விருப்பத்துக்கு இயக்குபவர் என்பதும் பாசம் அங்குசங்களால் உயிர்களின் ஆணவமாகிய யானையை அடக்குபவர் என்பதும் அஞ்ஞானமாகிய மூஞ்சுறை தன் அடிக்கீழ் அமுக்கி வைப்பவர் என்பதும் அவர் உருவில் அமைந்துள்ளன.

14. அவர் சோதி சொரூபர் என்பது சூரியன் சந்திரன் அக்கினி மூன்றையும் முக்கண்களாகவுடைய திருக்கோலமும் செம்மேனியும் விளக்குகின்றன.

விநாயகர் வணக்கத்துடன் சைவர்கள் எல்லா காரியங்களையும் துவக்குவது போல வைணவ ஆலயங்களில் விசுவக்

சேனர் அல்லது சேனைமுதல்வர் வணக்கத்துடன் காரியங்கள் துவக்கப் பெறுகின்றன. சேனைமுதல்வர் உருவம் மகா விஷ்ணுவின் உருவம் போன்றே சங்கு சக்கரத்துடன் விளங்கக் காண்கிறோம். விநாயகர் சிவாம்சமாய் விளங்குவது போன்று விசுவக் சேனரும் விஷ்ணு அம்சமாகவே விளங்குகிறார்.

'திருக்கோயில்' இதழ்களில் திருத்தலங்கள், நாயன்மார்கள், ஆழ்வார்கள், திருக்கோயில்களில் வணங்கப் பெறும் மூர்த்திகளின் தத்துவார்த்தங்கள், விழாக்களின் தத்துவங்களெல்லாம் விளக்கப்பெறும்.

நவராத்திரி, கந்தசஷ்டி, தீபாவளி எல்லாமே அசுர குணத்தைப் போக்கி தெய்வ குணத்தைப் பெறுவதற்கு இறையருள் துணை வேண்டுமென்பதையே வலியுறுத்தக் காண்கிறோம். கோயில்கள், அமைப்பும் சரீர அமைப்பு இருதய அமைப்பு என இருவகைப்படும் இவற்றை விளக்கத் தனிக் கட்டுரைகள் வரும்.

'ஒருநாமம் ஓருருவம் ஒன்று மிலார்க்கு ஆயிரம்
திருநாமம் பாடிநாம் தெள்ளேணம் கொட்டாமோ'

'யாவையும் யவரும் தானு
யவரவர் சமயந்தோறும்
தோய்விலன் புலனைந்துக்கும்
சொலப்படா னுணர்வின்மூர்த்தி'

அ. உத்தண்டராமன்.
2—12—58

"கடவுள் உண்டு"

'வாதங்கள் பல உண்மைகளைச் சாதிக்கும். உண்மையல்ல என்று பல விஷயங்களை நிரூபிக்கும். நாஸ்திகன் ஒருவன் வாதித்து என்னை தோல்வியுறச் செய்யலாம். ஆனால் என் புத்தியை முந்திக்கொண்டு என் பக்தி பறந்தோடுகிறது. உலகமெல்லாம் இல்லை யென்றாலும் நான் கடவுள் உண்டு, கடவுள் உண்டு, கடவுள் உண்டு, என்றும் உண்டு, என்று சொல்லுவேன்."

"நம்மைப் பற்றி அவன் அறிவான்"

"நம்மை நாம் அறிவதில்லை. நம் உள்ளங்கள் நமக்குப் பூரணமாகத் தெரிவதில்லை. அவன்தான் நம் உள்ளங்களை அறிவான். நம்மைப் பற்றி நாம் சொல்வதை அவன் ஒப்புக் கொள்ள மாட்டான். நம்மைப் பற்றியும் நம் எண்ணங்களைப் பற்றியும் பேசும்பொழுது நாம் உண்மை பேசுவதில்லை. உண்மையைமாற்றிச் சொல்கிறோம். அவனே உண்மையைக் கண்டு கொள்கிறான்.

—காந்திஜி

சைவம்

திரு. K. வச்சிரவேலு முதலியார், B.A., L.T.,

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

தமிழும் சைவமும்

வடமொழி தென்மொழி இரண்டினும் கடவுள் நெறியை விளக்கும் நூல்கள் பலவும் சிவபிரானையே சமஷ்டிரூப முழுமுதலாக வைத்துக் கூறுதலில் ஒருப்பாடுடையன என்பது மேலே காட்டப்பட்டது. தமிழின் கண் உலகியல் கருதி எழுந்த தொல்காப்பியம், திருக்குறள் என்னும் பெரு நூல்களும் சங்கச் செய்யுட்களும் சங்க காலத்து இறுதியில் தோன்றிய சிலப்பதிகாரம், மணிமேகலை என்னும் பெருங் காப்பியங்களும் இவ்விதிக்கு விலக்காக இல்லை.

உப நிடதங்களும் பிரம சூத்திரமும் பரப்பிரமத்திற்கு [1] இலக்கணங் கூறுமிடத்து, எல்லாப் பொருள்கட்கும் முன்னே நிற்பதாய், அவற்றின் தோற்றம், நிலை, இறுதி முதலியவற்றிற்குக் காரணமாய் நிற்பது பரப்பிரமம் எனக் கூறும். சைவ நூல்கள், இதனைச் சிவபெருமான் மேல் வைத்து உணர்த்துதற் பொருட்டு சிவபெருமானே எல்லா உலகங்களையும் ஒருங்குடன் ஒடுக்கி, அம்முற்றழிப்புக் காலத்தில் தான் ஒருவனேயாய் நின்று ஆடுவன் எனக் கூறும். இக்கருத்துப்பற்றியே சிவபெருமானுக்குச் "சுடலையாடி" என்பதொரு பெயர் வழங்குவதாயிற்று. எட்டுத் தொகை நூல்களுள் ஒன்றாகிய கலித்தொகையில் கடவுள் வாழ்த்துச் செய்யுள் இக்கருத்தையே கொண்டதாகவுள்ளது. இதனால் "உலகம் யாவும் யாண்டு ஒடுங்கும், அவை ஆண்டு நின்றே தோன்றும்" என்னும் நியாயத்தால் சிவபிரானது முதன்மை தெளியப்படும் என்பது சான்றோர்களது துணிபு. இக் கருத்தைச் சிவஞானபோத முதற் சூத்திரம்

> "ஒடுங்கி மலத்து உளதாம்;
> அந்தம்ஆதி என்மனார் புலவர்"

என்பதனாற் பெற வைக்கின்றது.

இதனை, தொல்காப்பியர், காஞ்சித்திணையின் பொருட்பகுதியை விரிக்கும்போது,

> "மலர்தலை உலகத்து மரபுநன் கறியப்
> பலர்செலச் செல்லாக் காடு வாழ்த்து"

என்பதனாற் குறிப்பிக்கின்றார்.

இதன்கண் வரும் காடு என்னும் இடப் பெயர் இடத்தின் நிகழ்பொருளாகிய முதல்வனைக் குறிக்கும். காஞ்சித்திணை என்பது வெறும் நிலையாமையை மட்டும் உணர்த்துவதன்றி, வீட்டின்பம் ஏதுவாக அதனைச் சான்றோர் சாற்றும் நன்னெறியை யுடையது எனவே உரையாசிரியர்கள் கொள்ளுவர். ஆதலின், அத்திணை வீடருளவல்லோனாகிய சிவபிரானது மூவாச்சாவாச் செம்பொருட்டன்மையின் வைத்து முடிக்கப்பெறுதல் அறிந்தின்புறுதற்கு உரியது. இன்னும் சைவ சித்தாந்தத்துட் கூறப்படும் பொருட்பற்றி ஆய்வுக்கு வேண்டப்படும் இன்றியமையாத அடிப்படை உண்மைகளெல்லாம் தொல்காப்பியத்துட் கூறப்படுவனவாக இருத்தல் சிவஞானசித்தி முதலிய அருணூல்களின் உரைகளால் விளங்கும்.

இனி, திருக்குறளும் சைவசித்தாந்தச் செம்பொருள் தெருட்டுவதாகவே உள்ளது. அறத்துப்பால் இறுதியில் அறத்தின் பயனாகிய ஞானம் கூறப்படுகிறது. அது நிலையாமை, துறவு, மெய்யுணர்தல், அவா வறுத்தல் என்னும் நான்கு அதிகாரங்களாற் கூறப்படுகின்றது. சைனம் முதலாகப் பிற சமயம் பற்றி எழுந்த நூல்கள், இவற்றுள் நிலையாமை என்னும் அதிகாரத்து வரும் பொருளையே இளமை நிலையாமை, செல்வம் நிலையாமை, யாக்கை நிலையாமை என விரித்துக் கூறும்; புறத்துறவை வற்புறுத்தும்; மெய்யுணர்தல் எனவரும் அதிகாரத்துப் பொருளை விரித்துக் கூறாமலே விட்டுவிடும். ஆனால் சைவ சித்

1. பரப்பிரமம்—மேலாகிய முதற் கடவுள்.

தாந்த நூல்களோ அவை யெல்லாவற்றை யும் ஒருங்கெடுத்துக் கூறுவதோடு, **மெய் யுணர்தல்** அதிகாரத்துப் பொருளே மிக விரி வாகவும் தெளிவாகவும் கொண்டு விளக் கும்.[1]

> **"ஐயுணர்(வு) எய்தியக் கண்ணும் பயமின்றே**
> **மெய்யுணர்(வு) இல்லா தவர்க்கு"**

என்னும் பாட்டின் பொருளே,

"ஈண்டு இவ்வான்மாக்களுக்கு முற் செய்தவத்தான் ஞானம் நிகழும் என்றது, மேற்சரியை கிரியா யோகங்களைச் செய்துழி நன்னெறியாகிய ஞானத்தைக் காட்டியல்லது மோக்ஷத்தைக் கொடா ஆகலான்"[2] என்பத ளுல் மெய்கண்ட தேவரால் விரித்துக் கூறப் பட்டது.

> **"ஓர்த்(து) உள்ளம் உள்ள(து) உணரின் ஒருதலையாப்**
> **பேர்த்(து) உள்ள வேண்டா பிறப்பு"**

என்னும் பாட்டின் பொருளேயே

> **"ஊனக்கண் பாசம் உணராப் பதியை**
> **ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி"**

எனச் சிவஞான போதம் ஒன்பதாஞ் சூத்திரம் விரித்துக் கூறுகின்றது. பிறவும் இவ்வாறே உணர்ந்துகொள்ளக் கூடுமாகலின், இங்கு விரிக்கப்படவில்லை.

மேற்காட்டிய குறட்பாவில் வந்துள்ள உள்ளது என்னும் சொல்லும்,

> **"பிறப்பென்னும் பேதமை நீங்கச் சிறப் பென்னும்**
> **செம்பொருள் காண்ப தறிவு"**

என்பதில் வரும் **செம்பொருள்** என்னும் சொல் லும் சாந்தோக்கியம் முதலியவற்றுள் பிர யோகிக்கப்படுகிறது என மேற்காட்டிய சத் தென்னும் சொல்லின் பரியாயமாகக் கூறப் பட்டிருத்தல் அறியத்தக்கது.

இனிச் சங்கச் செய்யுட்களும் சிலப்பதி காரம், மணிமேகலை என்னும் பெருங்காப்பியங் களும் அக்காலத்து மக்கள் சிவபிரானது முதன்மையினையே முதன்மையாகக் கொண் டிருந்தனர் என்பதை விளக்க மேற்கோள்கள் காட்டப்புகின் மிக விரியும். அன்றியும் அவை யெல்லாம் **பிறரால்** காட்டப்பட்டுள்ளன. அந் நூல்கள் எவற்றுள்ளும் முதற்பொருளின் வியட்டி நிலையைக் குறித்து, நிலமும் காலமும் காரணமாகத் தோன்றி நடக்கும் கருப் பொருள்களுள் ஒன்ருக வைத்துக் கூறப் படும் நிலத் தெய்வமாக (மாயோன், சேயோன், வருணன், வேந்தன், காடுகாள், என்பது போல)ச் சிவபிரானைக் கூறும் வழக்கு இல்லை என்பதும், அவை யாவும் சிவபிரானைக் கூறு மிடத்தெல்லாம், அவனை எல்லாத் தெய்வங் களுக்கும் முற்பட வைத்து, அவன்றன் சமட்டிரூப முழுமுதற் செம்பொருட்டன்மை யைத் தெளியுமாறு இறையோன், பெரி யோன், உயர்ந்தோன், அந்தணன், ஒருவன் எனப் பிரித்து வைத்து உயர்வு கூறி வரு வதும் சிந்தித்தற்கு உரியவை.

இவற்றை யெல்லாம் உற்று நோக்கின், சிவநெறியும் அந்நெறியின் அடிப்படை உண் மைகளும், செந்தமிழ்ச் சுவையாகவும் அதன் பயனாகவும் உள்ளவை என்பது இனிது விளங்கும். இதனல், **சைவ சமயமும் சைவ சித்தாந்த மதமும் தமிழ் நாட்டில் நெடுங்கால மாய்ப் பயின்று வருகின்றன. இவ்விரண்டும் தமிழ் நாட்டிலே தோன்றித் தமிழர்களாலே ஆதி யில் வளர்க்கப்பட்டன என்பதற்கு நியாயம் பலவுண்டு"**[1] என்ருற் போல அறிஞர்கள் துணிந்துரைக்க முன் வருவாராயினர். ஆயி னும், சிவநெறி **காஷ்மீரம், நேபாளம், கூர்ச்சரம்** முதலிய வடநாடுகளிலும் இருத்தலாலும், ஆங்குச் சிவாகம வழக்கு உண்மையாலும், சைவ சித்தாந்தக் கொள்கைகளை உணர்த் தும் நூல்கள் பல வடமொழிக் கண்தோன்று தொட்டு இயற்றப்பட்டு நடைபெறுவதாலும், தொல்காப்பியம், திருக்குறள், சங்கச் செய்யுள் என்பவை நால்வேத நெறியினையும் நான்மறை

1. இதன் விரிவை "திருக்குறளின் உட் கிடை சைவ சித்தாந்தமே" என்னும் ஆராய்ச்சி நூலுட் காண்க.

2. சிவஞா. 8–ஆம் சூத். முதலதிகரணம்—வார்த்திகம்.

1. சிவநெறிப் பிரகாசப் பதிப்பின் முன் னுரை—திரு. சு. அனவரத விநாயகம் பிள்ளை M.A.L.T.

வழக்கையும்[2] தழுவியே உள்ளன என்பது மேற்காட்டப்பட்டமையாலும் இந்நெறியைத் தமிழ் நாட்டிற்கே உரியதெனக் கூறுதல் பொருத்தம் அன்று. இவ்வாறு முடிபு கூறுதற்கண் ஒரு வெளிப்படையான உண்மையை மறைத்தல் இயலாது. "சிவவழிபாடும் சிவநெறி முடிபுகளும் இருமொழியிலும் இருப்பினும், அவை தூய்மையும், நிறைவும், தெளிவும், பெற்று விளங்குவது செந்தமிழ் மொழியில் தான்" என்பது. தென்னாடுடைய சிவனே போற்றி! எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!" எனத் "திருவாதவூர் மகிழ் செழுமறை முனிவர்" அருளியது இக்கருத்தேபற்றிப் போலும்.

மேலும் ஒரு கருத்து இங்குக் குறிப்பிடத்தக்கது. சிவநெறியின் தொடக்கம் நமது ஆராய்ச்சியில் அகப்படுதல் இன்றி, வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட பழைமையில் மறைந்து விடுகிறது. அப்பழைமை வேத காலத்துக்கு முற்பட்டதென்றும், இக்காலத்து உள்ள இந்துமத அடிப்படை உண்மைகளும் கொள்கைகளும் ஆரியர்கள் இந்நாட்டிற்கு வருவதற்கு முற்பட்ட காலத்தே இங்கிருந்த மக்களிடையே தோன்றி வளர்ந்தவையே என்றும் ஆராய்ந்து முடிவு காணும் அறிஞர்களும் உளர்.[1] அம்முடிபின் உண்மை எதுவாயினும், இக்காலத்து நம்மிடையே உள்ள நாகரிகமும் பண்பாடும் பல மக்கள் இனங்களின் கூட்டுறவால் வந்துள்ள கலப்பு நாகரிகப் பண்பர்டுகளே என்பதில் ஐயமில்லை. கங்கையும் யமுனையும் வேறு வேறு தோன்றி ஒழுகிவரினும், அவை பிரயாகையில் கலந்து ஒன்றுனபின், கங்கையின் நீர் இது, யமுனையின் நீர் இது என எங்ஙனம் பிரித்துக் காணுதல் இயலும்? இதுபோன்றதே தமிழ் ஆரிய நாகரிகப் பண்பாடுகளின் கலப்பு என்றலே அமைவுடையது.

"பா அல் புளிப்பினும் பகலிருளினும்
நா அல் வேத நெறி திரியினும்
திரியாச் சுற்றமொடு முழுதுசேண் விளங்கி
நடுக்கின்றி நிலியரோ அத்தை"
(புறம்-2, 17-20)

"அறங்கரை நாவின் நான்மறை முற்றிய
அதங் கோட்டா சாற்கு அரில்தபத்
தெரிந்து"-(தொல். சிறப்புப் பாயிரம்)

என வருதல் கர்ண்க.

---

1. எடுத்துக் காட்டாக, சர். ஜான்மார்ஷல் என்பவர் கூறுவதைக் காணலாம்:—"It is likely that the Sanskrit word Siva bears phonetic resemblance to the pre-Aryan name for this God". "Many of the basic features of Hinduism are not traceable to an Indo-Aryan source at all. They come into view not in the earliest Vedas, Brahmanas, Upanishads and Epics......when the Vedic Aryans had long since amalgamated with the older races and absorbed to some measure of their culture and teachings."

(தொடரும்)

வார வழிபாடு

தஞ்சை ஜில்லா நன்னிலம் தாலுக்கா மாப்பிள்ளைக்குப்பம் கைலாசநாதர் கோயிலில் 27—10—58 முதல் திரு. ரா. கி. சுந்தரமூர்த்திப் புராணிகர் அவர்களால் "வழிபாட்டின் மேன்மை" என்ற சொற்பொழிவுடன் வார வழிபாடு தொடங்கப் பெற்றது.

தஞ்சை ஜில்லா சீகாழி தாலுக்கா திருப்புன்கூர் சிவலோகநாத சுவாமி கோயிலில் நவராத்திரிவிழாவும், 17—10—58ல் திருக்கருகாவூர் திரு. கோ. சிவஞானம் அவர்களின் தொடக்கச் சொற்பொழிவுடன் வார வழிபாடும் நடைபெற்றன.

வைணவம்

[திரு. T. A. சீனுவாசாச்சாரியார்]

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

ஆசாரியர்கள் உதவி

குருடனுக்குக் குருடன்வழிகாட்ட இயலாது. வழிகாட்டுபவன் கண் தெரிந்தவனாகவும் வழி தெரிந்தவனாகவும் இருக்கவேண்டும். அப்படியே பகவத் விஷயத்திலும், சாஸ்திர ஞானமும் அநுஷ்டானமும் உடையவரே பிறருக்கு வழிகாட்ட இயலும். இப்படிப்பட்டவர்களே ஆசாரியர்கள் என்பர். சாஸ்திர ஞானத்தைத் தாமும் ஆசரித்துக் காட்டி, சிஷ்யரையும் ஆசரிப்பிக்க வல்லவர்கட்கே ஆசாரியர் என்பது பெயராம். இவர்கட்குக் குரு, தேசிகர் முதலிய பல பெயர்கள் வழங்கும். ஸ்ரீமத் நாராயணனே யாவர்க்கும் முதல்வனான ஆசாரியன் ஆவன். வேதத்தைப் பிரம்மாவுக்கு அருளியமையும், கீதையைச் சீடனான அருச்சுனனுக்கு அருளியமையும் பகவானே பரமாசாரியன் என்பதை உணர்த்தும். பெரிய பிராட்டி ஆசாரியர்களில் இரண்டாமவர் ஆவர். பின்னர் விஷ்வக்ஸேநர் மூன்றாவது ஆசாரியர் எனப்படுவர். இதற்குப் பிறகு பூலோகத்திலே ஆசார்ய பரம்பரை தொடங்குகிறது. மானிட வர்க்கம் ஒரே காலத்தில் தோன்றி மறைந்து விடுவதன்று. பரம்பரை பரம்பரையாக வாழைஅடி வாழை போல வந்து கொண்டே உள்ளது. ஆகையால், மக்களுக்கு எக்காலத்தும் இருந்து உய்தி பெறுவதற்கான உபாயத்தை உபதேசிக்கும் பொருட்டு ஆசாரிய பரம்பரை இவ்வுலகிலே இருந்தே தீரவேண்டும் என்பது தெளிவாம். இதனால் குரு பரம்பரையின் அவசியத்தை நாமறியலாம். பூலோகத்திலே சிறந்த ஆசார்யராவார் நம்மாழ்வார். இவர் வைகுண்டத்திலிருந்து எழுந்தருளி வந்த விஷ்வக்ஸேநரால் பஞ்ச சம்ஸ்காரம் செய்தருளப் பெற்றவர். இதனால் நம்மாழ்வார் ஆழ்வார் கோஷ்டியிற் போலவே ஆசார்ய கோஷ்டியிலும் முதன்மை பெற்று விளங்குபராவர்.

இவருக்கு அடுத்த ஆசார்யர் ஸ்ரீமந் நாதமுனிகள். ஸ்ரீமந் நாதமுனிகள், நம்மாழ்வாருக்குப் பல நூற்றாண்டுகள் பிந்தியவரே ஆயினும், இவரது யோக நிலையிலே நம்மாழ்வார் காட்சி புரிந்து திவ்யப் பிரபந்த உபதேசம் புரிந்து ஆசார்யனார் என்பர். அல்லாமலும், நம்மாழ்வார் திருவடிகளில் நேரே தொண்டு புரிந்த ஸ்ரீ மதுரகவிகளிடமிருந்து அவர் வம்சத்தவரான ஸ்ரீ பராங்குச தாசர் மூலமாக நாதமுனிகளுக்குச் சம்பிரதாயம் வந்தபடியாலும் நம்மாழ்வார் ஆசார்யரானார் என்னலாகும். ஸ்ரீமந் நாதமுனிகளுக்குப் பிறகு முறையே உய்யக்கொண்டார், மணக்கால் நம்பி, ஆளவந்தார் ஆகிய இவர்கள் ஆசாரியரானார்கள். ஆளவந்தார் என்பவர், நாதமுனிகளுடைய பௌத்திரர் ஆவார். இவரும் ஆசாரிய பரம்பரையில் முக்கியமானவராவர். இவர் அருளிச் செய்த ஸ்ரீ ஸூக்திகள், ஸ்ரீ பாஷ்யகாரருடைய ஸ்ரீ ஸூக்திகட்கு மூலமாயின. ஆளவந்தாருடைய சிஷ்யர் பெரிய நம்பிகள்.

பெரிய நம்பிகளுடைய சிஷ்யரே ஸ்ரீ வைஷ்ண சித்தாந்தப் பிரவர்த்தகராகிய ஸ்ரீ பாஷ்யகாரர். இவருக்கு எம்பெருமானார், உடையவர், இராமாநுஜர், எதிராஜர் முதலிய பல திருநாமங்கள் உண்டு. இவர் அருளிச் செய்த கிரந்தங்கள் ஒன்பது ஆகும். அவை, ஸ்ரீ பாஷ்யம், தீபம், ஸாரம், வேதார்த்த சங்கிரகம், ஸ்ரீ கீதா பாஷ்யம், சிறிய கத்யம் பெரிய கத்யம், ஸ்ரீவைகுண்ட கத்யம, நித்யம் என்பனவாம். இவற்றுள், ஸ்ரீ பாஷ்யம் தலை சிறந்தது.

ஸ்ரீ பாஷ்யகாரருடைய திருவடிகளில் ஆச்ரயித்தவர்களில் திருக்குருகைப் பிரான்

பிள்ளான் முக்கியமானவர். இவர் திருவாய் மொழிக்கு ஆருயிரப்படி வியாக்கியானம் இட்டருளியவர். இவருக்குப் பின்னர் கடாம் பியாச்சான், எங்களாழ்வான், நடாதூர் அம் மாள், கடாம்பி அப்புள்ளார் ஆகியவர்கள் ஆசாரியர்களாயினர்.

கடாம்பி அப்புள்ளாருடைய திருவடிகள் ஸ்ரீ நிகமாந்த மஹா தேசிகர். இவர் அப்புள் ளாருக்கு மருமானும் ஆவர். ஸ்ரீ தேசிகர் வடமொழி தென்மொழிகளில் வல்லவர். ஸ்ரீ வைஷ்ணவ சம்பிரதாயத்துக்கு எவ்வளவு கிரந்தங்கள் தேவையோ அவ்வளவையும் உபய பாஷைகளினுலும் இவர் செய்தருளியுள் ளார் என்று சுருக்கமாகக் கூறலாம். இவரு டைய சம்பிரதாயம் வடகலை சம்பிரதாயம் எனப்படும். இது மர்க்கட நியாயம் என்று பேசப்படும் இயல்புடையது. இவருக்குப் பிறகு சம்பிரதாய முறைகளின்படி ஆசார்ய பரம்பரை வேறு படலாயிற்று.

இவரைத் தொடர்ந்து தென்கலை சம்பிர தாயம் ஏற்பட்டது. தென்மொழியில் ஆழ் வாராதியர்களால் அருளிச் செய்யப்பட்ட நாலாயிர திவ்யப் பிரபந்தத்துக்கு ஏற்றங் கொடுக்கலான ஸ்ரீ வைஷ்ணவர்கள் தென் கலையார் எனப்பட்டனர். வடமொழிக் கலைக்கு ஏற்றங் கொடுக்கலுற்ற வடகலையார் ஸ்ரீ வேதாந்த தேசிகர் அருளிச் செய்த ரஹஸ் யங்களை அநுஷ்டிக்கலுற்ருற் போலவே, தென் கலையார் பிள்ளை லோகாசாரியர் அருளிச் செய்த நூல்களையும், ஸ்ரீ மணவாள மாமுனி கள் அருளிச் செய்த தமிழ் விரிவுரைகளை யும் அநுஷ்டிக்கலாயினர். இதனுல் இவ்விரு திறத்தினருக்கும் பொதுக் கொள்கை ஒன்ரு யிருப்பினும் சிற்சில வேறு பாடுகள் விளைந் தன. பிள்ளை லோகாசாரியர், தமிழிலேயே நூல்களை எழுதுவதென்ற துணிவு பூண்டு மணிப் பிரவாள நடையிலே ரகசியங்கள் என் னும் பெயரால் பதினெட்டு நூல்களை அருளிச் செய்யலுற்ருர். மேலும் உண்மைப்பொருள் களைச் சித், அசித், ஈசுவரம் என்று பெய ரிட்டு வழங்கலானுர். ஸ்ரீ வசன பூஷணம், முமுக்ஷுப்படி முதலிய நூல்கள் இவரருளிய வேறு சிறந்த நூல்களாகும். ஸ்ரீ பிள்ளை லோகாசாரியர் தம்பியார் ஸ்ரீ அழகிய மண வாளப் பெருமாள் நயினுர் ஆவர். இவர் இயற்றிய நூல்களில் ஆசார்ய ஹ்ருதயம் என்பது ஒன்ருகும். திருப்பாவை ஆருயிரப் படி வியாக்கியானம் இவர் அருளியதென்பர். பாண்டி நாட்டில் சிக்கில் கிடாரம் என்னும் கிராமத்தில் திருமால் மனத்த அண்ணர் என் பவரது திருக்குமாரராக அவதரித்தவர் அழ கிய மணவாளர் ஆவர். இவர் திருவாய் மொழிப் பிள்ளையிடம் சமாச்ரயணம் பெற்ற வர். இவரே மணவாள மாமுநிகள் ஆவர். இவருக்கு வரவர முனிவர் என்பதும் பெய ராம். இவர் ஈடு முப்பத்தாருயிரம் அருளியவர். முப்பத்தாருயிரப் பெருக்கு எனவும் கூறி இவரைச் சிறப்பிப்பர். தென்கலை சம்பிர தாயத்தைச் சிறப்புறுத்தியவர் இவர். நிர் ஹேதுக கடாக்ஷம் புரிபவர் பகவான் என்பது தென்கலை சம்பிரதாயத்தின் முக்கிய கொள் கையாகும். இதனை மார்ச்சால நியாயம் என உவமிப்பர். பகவானிடம் பக்தி பூண்டவர் யாவரும் சமம் என்பதும் ஒரு சிறந்த கொள்கை ஆகும்.

இதுகாறும் தென்னுட்டு ஸ்ரீ வைஷ் ணவ சித்தாந்தக் கொள்கையும் குரு பரம் பரைகளும் சுருக்கமாகக் கூறப்பட்டன. இனி வட நாட்டிலும், பிற இடங்களிலும் ஸ்ரீ வைஷ் ணவம் எந்த நிலை உடையதென்பதையும் காணலாம். ஸ்ரீ மத்வர், சைதன்யர், இராமா னந்தர், மாலுக்தாஸ், ஸ்ரீ வல்லபாசாரியர், மீராபாய் இவர்கள் மேற்கொண்டதும் வைஷ் ணவமே ஆகும். ஸ்ரீ இராமாநுஜர் கண்ட மதமே ஸ்ரீ வைஷ்ணவ சித்தாந்தமதம் எனப் படுவது. வட நாட்டில் ஸ்ரீ வைஷ்ணவத்தை ஸ்ரீ சம்பிரதாயம் என்பர். வைணவரை ஸ்ரீ சம்பிரதாயிகள் என்பர். சுமார் இருபது வகை யான வைணவ சமயங்கள் ஆங்குள்ளன என் பர். வங்காளத்து வைணவம் ஏறக்குறைய ஏனைய வைணவ சமயங்களையே ஒத்திருப்பது. அதில் இராதாவின் பக்தி மார்க்கம் பெரிதா கப் பேசப்படும். நிம்பார்க்கர், சைதன்யர், வல்லபர்கள் இராதா பக்தியையே விதந்துள் ளனர். ஜயதேவர் இயற்றிய கீத கோவிந்தம் இதனையே கூறுவதாகும். சைதன்ய சரிதாம் ருதம், வித்யாபதி பாடல்கள் சண்டிதாஸர் பாடல்கள் ஆகிய இவைகளும் உண்மையான வைணவ பக்தியை விளக்கும் இயல்பின ஆகும். இரவீந்திரநாத தாகூரின் கருத்துக் களும் மேற் கூறப்பட்டவர்களுடைய பக்தி முறையைத் தழுவியவையே ஆகும். மஹா ராஷ்டிரத்தில் இராதாவுக்குப் பதில் ருக்

மணிப் பக்தி முறைக்கு ஆதாரமாகக் காட்டப்படுவர். ஞானேசுவர், முக்தாபாய், நாமதேவர், ஏகநாதர், துக்காராம் ஆகிய இவர்களுடைய நூல்களும் பாடல்களும் ருக்மணி பக்தியை உதாரணப்படுத்தி விளக்கும் திறத்தனவாகும். மஹாராஷ்டிர வைணவமும் சாதி மதத் தடைகளைக் கடந்த நிலையையே போதிப்பதாகும். பூமியின்மேல் எவர் நடந்தாலும் அது தீட்டுப்படாது; கங்கை நதியில் எவர் முழுகினாலும், அது அசுத்தம் அடையாது. அப்படியே விஷ்ணு பக்தியை எவர் அடைந்தாலும் ஒன்றே என்பர். கபீர்தாசர் போதனை மத வேறுபாடு கருதாத நிலையையும் போதிப்பதாகும். "The inner veil of the temple of Macca—Is in man's heart, if the truth be known"—என்பது இவரது கொள்கை ஆகும். துளசிதாசர் பக்தியானது திரிகரண சுத்தியை வற்புறுத்துவதாகும். உதயபுரி மீராபாய் நம் நாட்டு ஆண்டாள் நாச்சியார் போல்பவர். உண்மையான வைணவம் இன்னபடி இருக்க வேண்டும் என்பதை "வைஷ்ணவ ஜனதோ" என்ற பாடல் காட்டும். இதுவே நம் காந்தியடிகளுக்கு விருப்பமான பாடல் ஆகும் என்பதை எவரும் அறிவர். கர்நாடக ஹரிதாசர்கள் பாடல்கள் கன்னட உபநிஷதம் எனப் போற்றப்படுவனவாம். மத்வ மரபினர் இவற்றைச் சிறப்பாகக் கொள்வர். புரந்தரதாசர், கனகதாசர் பாடல்கள் பக்திச்சுவை பெருக்கும் தன்மை உடையவை.

இஃது ஒருபுறமிருக்க, மேலே சொல்லப்பட்ட நடாதூர் அம்மாளை ஆச்ரயித்தவர் ஆதிவண் சடகோப ஜீயர் ஆவர். இது அகோபில மடத்து ஆசாரிய பரம்பரைக்கு ஆரம்பமாவது. மற்றும் ஸ்ரீவைஷ்ணவ சம்பிரதாய வேறுபாடுகளை ஒட்டிப் பற்பல பரம்பரைகள் உள்ளன. தென்னாசாரிய சம்பிரதாய பரம்பரை, ரகஸ்ய கிரந்த பரம்பரை, திவ்யப் பிரபந்த வியாக்யான பரம்பரை, ஸ்ரீ பாஷ்ய பரம்பரை, தென்கலை வானமாமலை மடத்துப் பரம்பரை, மேற்கூறப்பட்ட அகோபில மடத்து வடகலை சம்பிரதாய பரம்பரை, பரகால சுவாமி மடத்துப் பரம்பரை, முனித்திரய சம்பிரதாய பரம்பரை, மத்வாசாரிய பரம்பரை ஆகிய இவை யாவும் வைணவ சமயக் கொள்கைகளையே உலகிடைப் பரப்புதற்கு அமையப் பெற்றவையாகும். இவைகளின் விரிவுகளை அவ்வவற்றின் வரலாறுகளால் அறிதல் தக்கதாம்.

(தொடரும்)

வடபழனியில் கந்தர்சஷ்டி விழா

சென்னை வடபழனியில் 11-11-58 முதல் 16-11-58 வரை கந்தர்சஷ்டி விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. எட்டு இலட்சத்து ஆறுயிரம் அர்ச்சனைகள் நடந்தன. காஞ்சி திரு. அ. விநாயக முதலியாராலும், சைதைத் திருப்புகழ்க் கோஷ்டியாராலும், திரு. மஜீத் அவர்களாலும் திருப்புகழ்ப் பாராயணம், இசையரங்குகள் முதலியன நடைபெற்றன. நாள்தோறும் பல்லாயிரக்கணக்கான மக்கள் ஆண்டவனைத் தெரிசித்தனர். அற நிலையப் பாதுகாப்புத் துறை துணை ஆணையர் திரு. S. V. இராஜன் அவர்கள் நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டார்கள்.

காஞ்சிபுரம்

தமிழ் மூதாட்டியான ஔவைப்பிராட்டி "தொண்டை நன்னாடு சான்றோருடைத்து" என்று போற்றினர். அந்நாட்டின் தலை நகரான காஞ்சி வரலாற்றுப் பெருமையுடையது. பதஞ்சலி முனிவர் மகா பாஷ்யத்தில் இந்த நகரைக் குறிப்பிடுகிறார். ஐம்பெருங் காவியங்களில் ஒன்றான மணிமேகலையில் மணிமேகலை துறவு பூண்டு இங்கு அறங்கள் பல செய்ததாகக் கூறப்படுகிறது. சங்க நூல்களில் ஒன்றான பெரும்பாணாற்றுப்படை தொண்டைமான் இளந்திரையன் காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்ததையும், அந்நகர் திருமாலின் திருவுந்திக் கமலத்தைப்போன்ற சிறப்புடையதென்பதையும், திருவெஃகா என்னும் திருத்தலத்தில் பாம்பணையில் பள்ளிகொண்ட பரமன் திருக்கோலத்தைக் காணலாம் என்பதையும் கூறுகிறது. அந்த திருவெஃகா, இப்போது யதோத்காரி அல்லது சொன்னவண்ணம் செய்த பெருமாள் கோயில் என்று வழங்குகிறது. "நகரேஷு காஞ்சி" என்று காளிதாசர் சொல்லியிருக்கிறார். "முத்திதரும் நகரேழில் முக்கியமாம் காஞ்சி"யென்றும், "காசி முதலான நன்னகரெலாம் கச்சிக் கொவ்வா" என்றும் வேதாந்த தேசிகர் புகழ்கிறார். "கல்வியிற் கரையிலாத காஞ்சி" என்று அப்பரும், "தேசமெல்லாம் புகழ்ந்தாடும் கச்சித் திருவேகம்பன் செம்பொற் கோயில்" என்று மாணிக்கவாசகரும், "கவிகள் என்னுரைப்போர் தம்முள் காஞ்சியைப் புகழாரில்லை" என்று சிவஞான முனிவரும் போற்றுகின்றனர்.

முத்திநகர் ஏழாவன காசி, காஞ்சி, அவந்திகை, அயோத்தி, மதுரை, மாயை, துவாரகை. அவைகளில் ஆறு வட நாட்டிலுள்ளன. காஞ்சி யொன்று மாத்திரம் தென்னாட்டிலுள்ளது. மேலும், ஏழில் மூன்று சிவனுக்கும், மூன்று திருமாலுக்கும், காஞ்சியான ஒன்று மட்டும் சிவன் திருமால் இருவருக்கும் சம்பந்தப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

தொண்டை நாட்டிற்குக் காஞ்சியைத் தலை நகராகக்கொண்டு மூன்றும் நூற்றாண்டு முதல் ஒன்பதாம் நூற்றாண்டுவரையில் பல்லவ மன்னர்களும், பத்தாம நூற்றாண்டுமுதல் பதிமூன்றும் நூற்றாண்டு வரைச் சோழ அரசர்களும், பதினாலு முதல் பதினேழாம் நூற்றாண்டுவரை விஜய நகர மன்னர்களும் ஆண்டு வந்திருக்கின்றனர். சோழராட்சியில் இந்நாட்டிற்கு ஜெயங்கொண்ட சோழ மண்டலம் என்று பேர் வழங்கியிருக்கின்றது. இந்த மூன்று குலமன்னர்களும் காஞ்சி நகரில் செய்த திருப்பணிகள் அளவிடற்கரியன; போற்றுந்தகையன.

காஞ்சிபுரத்திற்கு சீன யாத்திரிகரான யுவான்சுவாங்கு கி. பி. 640-ல் வந்து சில காலம் தங்கியிருந்தார். அவர், திராவிடநாட்டைத் 'தலோபிது' என்றும், காஞ்சியைக் 'கிஞ்சிபுலோ' என்றும், நகர் ஏழு மைல் சுற்றளவுடையதாக இருந்தது என்றும், பல கோயில்களும் பௌத்த பள்ளிகளும் நிறைந்திருந்தன என்றும், அசோக ஸ்தூபி இருந்ததென்றும், மக்கள் பக்தியும், கல்வியும் வீரமும் உடையவர்களாக இருந்தனர் என்றும் கூறியுள்ளார்.

பௌத்தம், சமணம், சைவம், வைணவம் இந்த மதங்களெல்லாவற்றிற்கும் இந்நகர் இடந்தந்துள்ளது. திந்நாகர், போதிதர்மர், தர்மபாலர் என்ற பௌத்தமதத் தலைவர்கள் காஞ்சியைச் சேர்ந்தவர்களே. திந்நாகரும், தர்மபாலரும் நாளந்தா பல்கலைக் கழகத்தில் பேராசிரியர்களாகத் திகழ்ந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. காஞ்சியின் ஒரு பகுதியான திருப்பருத்திக்குன்றத்தில் புஷ்பசேனர் என்ற சமணப் பெரியாரால் ஜைனக் கோயில்கள் அழகுபடுத்தப்பட்டன. அகளங்கர் என்ற ஜைன குரு இங்குதான் பௌத்தர்களை

வாதில் வென்று சமண சமயத்தை நிலைநாட்டினார் என்று கூறப்படுகிறது. சங்கரர், இராமானுஜர் இவர்கள் காலத்தில் சைவமும் வைணவமும் சிறந்தோங்கியதால் பௌத்தமும், சமணமும் நல்நிலை மாறிவிட்டன.

வைணவர்களுக்கு முக்கிய மானவை மூன்று தலங்கள். அவை கோயில் என்ற திருவரங்கம், திருமலை என்ற திருவேங்கடம், பெருமாள் கோயில் என்ற காஞ்சிபுரம். ஆழ்வார்களால் மங்களசாசனம் பெற்ற திவ்விய தேசங்கள் பதினான்கு இந்நகரிலுள்ளன. முதலாழ்வார் மூவரில் முதல்வரான பொய்கையாழ்வார் இங்கேதான் அவதரித்தார். திருமழிசையாழ்வார் தம் சீடன் மேல் வைத்த அன்பால் பெருமாளைத் தாம் சொன்னபடி நடக்கவும் செய்தது இப்பதியில்தான். வேதாந்த தேசிகர் அவதாரத்தலமும் இதுவேயாம். இராமானுஜர், திருக்கச்சிநம்பிகள், ஆளவந்தார், நடாதூரம்மாள், கடிகாசலம் அம்மாள், மணவாளமாமுனிகள் முதலிய வைணவப் பெரியோர்கள் காஞ்சியை இருப்பிடமாகக் கொண்டிருந்தனர்.

சைவர்களுக்கு முக்கியமான பஞ்சபூதத் தலங்களில் காஞ்சிபுரம் பிருதிவிலிங்க க்ஷேத்திரம். தேவார மூவர்களால் பாடப்பெற்ற பதிகள் ஐந்து இந்த நகரில் உள்ளன. சுந்தரர் பதிகம்பாடி, இழந்த கண்களில் ஒன்றைப்பெற்றது இப்பதியில்தான். திருக்குறிப்புத் தொண்ட நாயனாரும், சாக்கிய நாயனாரும், ஐயடிகள் காடவர் கோனாயரும் இத்தலத்தில் தான் வீடுபெற்றனர். காடவர்கோன் க்ஷேத்திரத் திருவெண்பா பாடியுள்ளனர். பட்டினத்தடிகளும், அருணகிரிநாதரும் இப்பதியைப் பற்றிப் பல பாடல்கள் பாடியுள்ளனர். கச்சியப்ப சிவாச்சாரியார் இயற்றிய கந்தபுராணமும், கச்சியப்ப முனிவர் இயற்றிய காஞ்சிப் புராணமும் இங்கேதான் அரங்கேற்றப்பட்டன. பல தனிப் பாடல்களும் இத்தலத்தைப் பற்றியுள்ளன. பூண்டி அரங்கநாத முதலியார், 'கச்சிக்கலம்பகம்' என்ற அரிய நூலை இயற்றியிருக்கிறார். சக்தி பீடங்களில் ஒன்றான காமகோடி பீடத்தை ஆதி சங்கரர் இங்கே அமைத்தார். தேவீபாகவதத்தில் கூறப்படும் அறுபத்துநான்கு சத்திபீடங்களில் ஒன்றாக திருக்காஞ்சியிலுள்ள அன்னபூரணிபீடம் இடம் பெறுகிறது. காஞ்சியில் **உருத்திரகோட்டம் (ஏகாம்பரநாதர் கோயில்),** புண்ணியகோட்டம் (வரதராஜப் பெருமாள் கோயில்), காமகோட்டம் (காமாட்சியம்மை கோயில்) இம்மூன்றும் உள்ளன என நூல்கள் கூறுகின்றன. இவற்றுடன் குமரகோட்டம் என்ற முருகன் கோயிலும் சேர்ந்து இந்நகரை அணி செய்கின்றது.

நகர அமைப்பு நிபுணரான **கெடீஸ்** (Geddes) என்பவர் காஞ்சி நகர் பண்டைக் காலத்தில் மிகவும் ஒழுங்காகவும், அழகுபெறவும் அமைக்கப்பட்டிருப்பதாகப் புகழ்ந்து கூறியிருக்கிறார். சாதாரணமாக நகரத்தை சின்ன காஞ்சிபுரம் பெரிய காஞ்சிபுரம் என்று வழங்குகின்றனர். சமயக் கண்கொண்டு நோக்கிய பெரியோர் சிவகாஞ்சி, விஷ்ணுகாஞ்சி, ஜைன காஞ்சி என்று மூன்று பகுதிகளாகப் பிரித்திருக்கின்றனர்.

காஞ்சிபுரம் என்ற பெயருக்குப் பலவாறு காரணங்கள் கூறப்படுகின்றன. கச்சிப்பேடு, கச்சி, காஞ்சி, காஞ்சிபுரம் என்றாயது என்பது ஒரு சாரார் கூற்று. 'க' என்ற பிரமன், அஞ்சித் திருமாலை வழிபட்ட காரணத்தால் **காஞ்சி** என்று பேர் வந்தது என்பர் மற்றொரு சாரார். பெண்கள் இடுப்பில் அணியும் ஒட்டியாணம் போன்ற ஒன்றுக்கு காஞ்சி என்று பேர். நம் நாட்டிற்கு அவ்வணிகலன் போல் இருப்பதால் இந்நகருக்கு இப்பேர் வந்தது என்று கூறுவோரும் உளர். காஞ்சிச்செடிகள் நிறைந்திருந்தமையால் இப்பேர் வழங்கியிருக்கலாம் என்பது இன்னும் சிலர் துணிபு. பொன் மயமாக மின்னியபடியால் காஞ்சனபுரம் என்று பேர் பெற்று அதுமருவி காஞ்சிபுரம் என்றாயிற்று என்பது வேறு சிலர் கருத்து. சங்க நூல்களில், 'பொன் எயிற் காஞ்சி' 'பொன்னகர்க் காஞ்சி' என்று கூறப்பட்டிருக்கிறது. காஞ்சிப் புராணத்தில், காஞ்சி, முப்புவனசாரம், காமபீடம், தபோமயம், மும்மூர்த்திவாசம், துண்டீரபுரம், இலயசித்து, பிரமபுரம், விண்டுபுரம், சிவபுரம், சர்வசித்திகரம், கன்னிகாப்பு என்ற பன்னிரண்டு பெயர்கள் உண்டென்று கூறப்படுகிறது. இன்னும் தட்சிண காசி, தபோவனம், பிரம்மசாலை, சத்தியவிரதக்ஷேத்திரம் என்ற பேர்களும் உண்டு. இத்தகைய பெருமை பெற்ற நகரில் 108 சிவாலயங்களும், 18 விஷ்ணுகோயில்களும் இருப்பதாக ஆன்றோர் கூறியிருக்கின்றனர். அவைகளில் மிகவும் முக்கியமான சிலவற்றைப்பற்றி இங்கே கூறப்படும்.

ஏகாம்பரநாதர் கோயில்



ஏகாம்பரநாதர் கோயில்

கச்சிஏகம்பம், திருவேகம்பம் என்ற பேர்களுண்டு. கம்பை அல்லது வேகவதி நதிக்கரையில் இருப்பதால் இப்பெயர் வந்ததென்பர். ஏகம்=ஒன்று +ஆம்ரம்=மாமரம் என்று ஒரு மாவடியின் கீழ் இறைவன் எழுந்தருளியுள்ளதால் இப்பெயர் பெற்றதென்பர். காளமேகப் புலவரும் "கச்சி ஒரு மாவின் கீழரை என்றோது" என்று கூறி யிருப்பதும் காண்க. மூவரும் தேவாரம் பாடி யிருக்கின்றார்கள். மாணிக்கவாசகரும் புகழ்ந்துள்ளார். உமாதேவி இருநாழி நெல்லைக்கொண்டு 32 அறங்களும் செய்ததாகச் சொல்லப்படுகிறது. இறைவி கம்பை நதிக்கரையில் இறைவனைப் பூசிக்கும்பொழுது ஆற்றில் வெள்ளம் வர, இலிங்கத்தைத் தழுவிப் பிடித்துக்கொள்ள சிவபெருமான் தேவியைத் திருமணம் புணர்ந்து தமது இடப்பாகத்தை அருளினார். மூலலிங்கம் பிருதிவிலிங்கம். அம்மையின் திருநாமம் ஏலவார்குழலி என்பது. மாமரம் ஸ்தல விருட்சம். அதனடியில் இறைவனும் தேவியும் அமர்ந்திருக்கும் காட்சி கண்ணை விட்டகலாது. மாமரத்திற்கு நான்கு கிளைகள்; அவைகளின் காய்கள் நால்வகைச் சுவைகளையுடையன. நான்கு வேதங்களையும் அந்த நான்கு கிளைகள் குறிக்கின்றன. மாவடியைச் சுற்றி 136 சிவலிங்கங்களும், 108 சிவலிங்கமுள்ள ஒரு லிங்கமும், 1008 சிவலிங்கமுள்ள ஒரு லிங்கமும் உள்ளன. 'காஞ்சிமாவடி வைகும் செவ்வேள் மலரடி போற்றி' என்று கந்தபுராணம் கூறும் முருகவேள் கோயில் மாவடியின் பக்கத்திலுள்ளது. இன்னும் அகத்திசர், வெள்ளைக்கம்பர், நல்லக்கம்பர், கள்ளக்கம்பர், வாலீசர், மத்தளமாதவீசர், இடபேசுவரர், விண்டுவீசர் முதலிய சந்நிதிகளுமுண்டு. பிரளயங்காத்த அம்மன் சந்நிதி தனி. காஞ்சிபுரத்திலுள்ள சிவலாயங்களில் அம்பிகைக்குத் தனிக்கோயில் கிடையாது என்பது குறிப்பிடத்தக்கது. இக்கோயிலினுள்ளே, 'மைப்படிந்த கண்ணாளும் தானும் கச்சிமயானத்தான்' என்ற தேவாரப் பாடலுடையதிருக்கச்சிமயானம் என்பதும் இருக்கின்றது. திருமங்கையாழ்வாரால் மங்களசாசனம் பெற்ற நிலாத்திங்கள்துண்டப்பெருமாள் கோயிலும் ஏகாம்பரநாதர் ஆலயத்துக்குள்ளே இருக்கின்றது. கந்தபுராணத்தில் "திகடச் சக்கரச் செம்முகம் ஐந்துளான்" என்று தொடங்கும் காப்புச் செய்யுளில் குறிக்கப்படும் விகடசக்கரவிநாயகர் ஆயிரக்கால் மண்டபத்தில் வீற்றிருக்கின்றார். இங்குதான் கந்தபுராண அரங்கேற்றம் நடைபெற்றது போலும். இத்தலத்தின் தீர்த்தங்கள் கம்பை நதி, சிவகங்கை. பங்குனித் திருவிழாவில் திருக்கலியாண மகோற்சவம் பிரபலம்.

இக்கோயிலின் தெற்குக் கோபுரம் 188 அடி உயரம் உள்ளது; கிருஷ்ணதேவராயரால் கட்டப்பட்டது. இங்குள்ள அற்புதச் சிற்பங்கள் எண்ணில. காமதகனச்சிலையும், கரிகாற்சோழன் உருவச்சிலையும் அவசியம் பார்க்கத் தக்கவை. கோயில் ஐந்து பிரகாரங்களையுடையது. ஆமை மண்டபம், திருக்கலியாண மண்டபம், பதினாறுகால் மண்டபம், ஆயிரக்கால் மண்டபம் இவைகளும் உள்ளன. கோயில் முப்பது ஏக்கர் நிலப்பரப்பில் உள்ளது. பல கல் வெட்டுக்களும் உள்ளன.

"ஏகம்பத்துறை யெந்தாய் போற்றி
பாகம் பெண்ணுருவானாய் போற்றி"

கைலாசநாதர் கோயில்

கைலாசநாதர் கோயில்

காஞ்சியில் மிகப் பழைய கோயில்; வரலாற்றுப் புகழ்படைத்தது. ஏழாம் நூற்றாண்டில் இராஜசிம்ம பல்லவன் என்ற இரண்டாம் நரசிம்மவர்மனால் கட்டப்பட்டது. இராஜசிம்மேசுவரம் என்ற பெயருடையது. இதிலுள்ள இலிங்கம் மிகவும் அழகுடையது. கல்வெட்டுக்களில் திருக்கற்றளி மகாதேவர் என்று குறிக்கப்படுகிறது. கர்ப்பக்கிரகத்தின் மேலேயே விமானம் இருக்கிறது. தனியே வாயில்கோபுரம் இல்லை. கர்ப்பக்கிரகத்தைச் சுற்றி உட்பிரகாரத்தில் வருவதை சொர்க்கப் பிரதட்சணம் என்பர். முழந்தாளிட்டுப் போக வேண்டிய ஒரு குறுகிய வாயிலில் நுழைந்து மார்பால் நகர்ந்து வெளி வர வேண்டியது. 'புனரபி மரணம் புனரபிஜனனம்' என்பதை இது குறிக்கும் என்பர். கர்ப்பக்கிரகத்தின் எதிரில் மற்றொரு சிவாலயமும் உண்டு. மூன்றும் மகேந்திர வர்மனால் கட்டப்பட்டதால் மகேந்திரேசுவரம் என்ற பெயருடையது. இக்கோயிலிலுள்ள அர்த்தநாரீசுவரர் உருவத்தில் பாதி இறைவன் இடப வாகனத்தில் அமர்ந்திருப்பதையும், மற்றொரு பாதியில் தேவி வீணை வாசிப்பதையும் காணலாம். இங்குள்ள சுவர்களில் சிவபெருமான் நடன வகைகளைக் குறிக்கும் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. அழகிய நந்தியும், திருக்குளமும் கோயிலின் முன்னே இருக்கின்றன. பெரிய புராணத்தில் பூசலார் நாயனார் புராணத்தில் "காடவர் கோமான் கச்சிக்கற்றளி எடுத்து முற்றமாடெலாஞ் சிவனுக்காகப் பெருஞ்செல்வம் வகுத்தல் செய்வான்" என்று கூறியிருப்பது இந்த கைலாசநாதர் கோயில்தான் என்று சில ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். சிவராத்திரி விழா இங்கு சிறப்பாகக் கொண்டாடப் பெறுகிறது. காஞ்சிக்குச் செல்பவர்கள் இக்கோயிலை அவசியம் பார்க்கவேண்டும்.

திருக்கச்சிநெறிக்காரைக்காடு: சத்திய விரததலம். இப்போது திருக்காலி மேடு என்ற பெயரால் வழங்குகிறது. சத்தியவிரதேசுவரர் கோயில் கொண்டுள்ளார். காரை வனமாக இருந்தபடியால் இப்பெயர் வந்தது. இந்திர தீர்த்தம் உள்ளது. தட்சிணாமூர்த்தி, அருணாசலேசுவரர் இவர்களின் திருவுருவங்கள் பார்க்க வேண்டியவை. திருஞானசம்பந்தர் ஒரு பதிகம் பாடி யுள்ளார்.

திருக்கச்சி அநேகதங்காபதம்: கைலாசநாதர் கோயிலுக்கருகில் உள்ளது. சுவாமி பெயர் அநேகதங்காவதேசுவரர். கல்லெழுத்துக்களில் அணையதங்கஉடைய நாயனார் என்று கூறப்பட்டிருக்கிறது. சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஒரு பதிகம் ஓதியுள்ளார்.

திருக்கச்சிமேற்றளி: காஞ்சிக்கு மேற்குப் பக்கத்தில் உள்ளதால் இப்பெயர் பெற்றது. மேற்றளிநாதர் மேற்கு நோக்கியுள்ளார். அப்பர், சுந்தரர் இவர்களால் பாடப்பெற்றது. சம்பந்தர் பாடியதால் திருமால் உருகி சிவ லிங்கமானதாகவும், அவருக்கு ஓதஉருகீசர் என்ற பெயர் வந்ததாகவும் கூறப்படுகிறது. அவர் சந்நிதி இக்கோயிலில் கிழக்கு நோக்கியுள்ளது. சந்நிதித் தெருவில் கோயில் எதிரில் சம்பந்தர் கோயிலும் இருக்கிறது. ஆளுடைய பிள்ளையாரான சம்பந்தர் இங்கு வந்தமையால் பிள்ளையார் பாளையம் என்று இப்பகுதிக்குப் பேர் வந்ததென்பார். ஆனால் சம்பந்தர் பாடல் கிடைக்கவில்லை.

திரு ஓணகாந்தன் தளி: ஓணன், காந்தன் என்ற இரண்டு அசுரர்கள் வழிபட்ட தலம். இதைச் சார்ந்து ஜலந்தரன் பூசித்த ஜலந்தரேசர் சந்நிதியும் உண்டு. ஓணேசர், காந்

தேசர் என்ற இரண்டு சந்நிதிகள் இருக்கின்றன. சுந்தரமூர்த்தி நாயனார் பதிகம் ஒன்றுண்டு. அவருக்குப் பொற்காசு இறைவனால் அளிக்கப்பட்டது இத்தலத்தேதான்.

மேற்கண்ட பாடல் பெற்ற பதிகளையன்றி வேறு பல சிவன் கோயில்களும் உள்ளன. மணிகண்டீசுவரர், மாதங்கீசுவரர், முக்தீசுவரர், வழக்கறுத்தீசுவரர், காயாரோகணேசுவரர், வீரட்டானேசுவரர், பணாதரேசுவரர், ஆதிபசுபதீசர், பராசரேசர், காரணீசுவரர், பணமணீசுவரர், சோளேசுவரர், சோழநாதேசுவரர், சித்தீசுவரர், ஜ்வரஹரேசுவரர், திரிகால ஞானேசுவரர், புண்ணியகோடீசுவரர், கச்சபேசுவரர், திரிபுராந்தகேசுவரர், அயிராவதேசுவர், மகாகாளீசுவரர், காசி விசுவேசுவரர், அமரீசுவரர், தான்தோன்றீசர், வன்னீசர், அகத்தீசர், கற்கீசர், வாணேசுவரர், இராமநாதேசுவரர், அனந்தபதுமனாபேசுவரர், இரணியேசுவரர், வன்மீகநாதர், மகாசாத்தான், பிறவாத்தானம், இறவாத்தானம் முதலிய இன்னும் பல கோயில்கள் உள்ளன. காமாட்சியம்மை கோயில், குமரகோட்டம் இவைகளைப்பற்றித் தனிக் கட்டுரைகளில் காண்க.

வரதராஜப் பெருமாள் கோயில்: காஞ்சியில் சிறந்த திருமால்கோயில். அஸ்திகிரி, அத்தியூர், சத்திய விரதக்ஷேத்திரம் என்ற திருநாமங்களுடையது. அஸ்திகிரி என்றால் யானைமலை என்று பொருள். ஐராவதம் என்னும் யானையே மலையுருவாகி எம்பெருமானைத் தாங்கியதால் இப்பெயர் பெற்றது. ஆழ்வார்கள் பாசுரங்களில் பொதுவாகக் கச்சியென்று குறிக்கப்படுமிடங்களில் இத்தலம் கொள்ளப்படுகின்றது. அத்திகிரியை உத்தர வேதியாகக் கொண்டு பிரமன் அசுவமேத யாகம் செய்ய, அதில் தோன்றிய புண்ணிய கோடி விமானத்தில் எம்பெருமான் எழுந்தருளி வரம் கொடுத்தபடியால் வரதராஜன் என்ற திருப்பெயர் ஏற்பட்டது. தேவராஜன், கரிவரதன், மாணிக்க வரதன், பிரணதார்த்திகரன், அருளாளன் என்று வேறு திருநாமங்களும் உண்டு. தாயாருக்குப் பெருந்தேவி என்றும், மகாதேவி என்றும் பெயர் வழங்கும்.

ஆழ்வார்களால் பாடல்பெற்ற 108 திருப்பதிகளில் இது ஒன்று என்பது பிள்ளைப்



தேவராஜர் கோயில்

பெருமாளையங்கார் இயற்றிய நூற்றெட்டுத் திருப்பதியந்தாதியில் கீழ்க்காணும் பாடலால் தெரிகிறது:—

"பொருளாசை மண்ணாசை பூங்குழலர் போகத்து
இருளாசை சிந்தித்திராதே—அருளாளன்
கச்சித் திருப்பதியாம் அத்தியூர் கண்ணன்தாள்
இச்சித் திருப்பதியாம் என்று"

இன்னும், திருக்கச்சிநம்பிகளின் தேவராஜாஷ்டகம், கூரத்தாழ்வாரின் வரதராஜஸ்தவம், வேதாந்த தேசிகரின் வரதராஜ பஞ்சாசத், ந்யாஸதசகம், அப்பையதீட்சிதரின் வரதராஜஸ்தவம், அரசாணிபாலை வெங்கடாச்சாரிய சுவாமியின் ஹஸ்திகிரி சம்பூ என்ற வரதாப்யுதயம் என்ற வடமொழி நூல்களும், வேதாந்த தேசிகரின் ஹஸ்திகிரி மாஹாத்ம்யம் என்ற மணிப்பிரவாள நூலும், இன்னும் அவரே இயற்றிய அடைக்கலப் பத்து, வைஷ்ணவதினசரி, அர்த்த பஞ்சகம், திருச்சின்னமாலை, பன்னிரு திருநாமம் என்ற தமிழ்நூல்களும், பொன்விளைந்த களத்தூர் வீரராகவ முதலியார் இயற்றிய ஸ்ரீ பெருந்தேவித்தாயார் பதிகம், வரதராஜப் பெருமாள் பஞ்சரத்னங்கள் என்ற நூல்களும் இத்தலத்தைப்பற்றியனவே. அத்திகிரியந்தாதி, வரதன் கலித்துறை யந்தாதி என்ற வேறு நூல்களும் உண்டு.

கோயிலுக்கு மாடவீதி, ஆழ்வார்திரு வீதி, யமுனைத்துறைவர் திருமுற்றம், சேனையர்கோன் திருமுற்றம், மலைமேலுள்ள பிர

காரம் ஆக ஐந்து பிரகாரங்கள் உண்டு. கோயிலில் முக்கியமான சந்நிதிகள் மூன்று. அவை அத்திகிரியின் மேலுள்ள வரதராஜர், அக்குன்றின்கீழ் அமைந்த யோக நரசிம்மர், பெருந்தேவித் தாயார் என்பன. பூவராக சுவாமி சந்நிதியும் பிரசித்தமானது.

முதல் பிரகாரத்தில் அற்புத சிற்ப வேலைப்பாடுகள் அமைந்த நூற்றுக்கால் மண்டபம் உள்ளது. அதற்குப் பக்கத்தில் அனந்த தீர்த்தம் இருக்கிறது. அதன் நடுவில் ஒரு மண்டபத்தின் கீழ் நீரின் அடியில் அத்தி வரதர் சயனித்துக் கொண்டிருக்கிறார். சேவை செய்ய முடியாது. நாற்பது ஆண்டுக்கொருமுறை இவரை மக்கள் தெரிசிப்பதற்காக வெளியே எடுப்பார்கள். இப்பிரகாரத்தில் அநேக ஆழ்வார்கள் சந்நிதிகள் உள்ளன.

அத்திகிரி மலைக்குப் போகும்போது முதலில் நாம் பார்ப்பது குக நரசிம்மர் சந்நிதி. பெருமாள் அழகிய சிங்கர்; அரித்திராதேவித் தாயார். ஒலிமுகவாசல் வழியாகச் சென்று குன்றின்மேல் ஏறவேண்டும். 24 படிகள் உள்ளன. இவை இருபத்து நான்கு தத்துவங்களையும், காயத்திரி மந்திரத்தின் இருபத்து நான்கு எழுத்துக்களையும் குறிக்கும் என்பர். மேல் ஏறியதும் ஐந்தாம் பிரகாரத்தை யடையலாம். அதற்கு வையமாளிகை என்று பேர். அங்கேதான் தேவாதிராஜனுடைய திவ்விய சேவை. மலர்ந்த திருமுக மண்டலம், அஞ்சேல் என்று அருள் செய்யும் அபயகரம், அகன்ற திருமார்பு, சக்கரம்,சங்கு,கதை இவைகளையுடைய மற்ற திருக்கரங்கள் இவைகள் காண்போர் உள்ளத்தைக் கொள்ளை கொள்வன. பிரகாரத்தில் வைய மாளிகைப் பல்லி என்ற ஒரு தங்கப்பல்லி யிருக்கிறது. அதைத் தொட்டுக் கண்ணில் ஒத்திக் கொண்டால் நிரம்ப புண்ணியம்.

அனந்த தீர்த்தம், பொற்றாமரை, பிரம தீர்த்தம் என்ற மூன்று தீர்த்தங்கள் உள்ளன. வைகாசி மாதக் கருட உற்சவம் மிகப் பிரபலம். தை மாதத்தில் பெருமாள் பழைய சீவரம் என்ற ஊருக்கு எழுந்தருளுவதும் சிறந்த திருவிழா. தெப்ப உற்சவம், தவன உற்சவம் முதலியவைகளும் நடைபெறுகின்றன.

கி. பி. 1688-ல் மகம்மதியர் படையெடுத்தபோது கோயிலிலுள்ள விக்கிரகங்களை மறைத்து எடுத்துக் கொண்டுபோய் உடையார்பாளையத்தில் வைத்திருந்தனர். கி.பி. 1710-ல் ஆத்தான் ஜீயர் என்ற வைணவப் பெரியாரின் முயற்சியால் அவைகள் மீண்டும் எடுத்துவரப்பட்டன. கிளைவ் பிரவு ஒரு நவரத்தின மகரகண்டிகையும், ப்ளேஸ் என்ற செங்கற்பட்டு மாவட்ட கலெக்டர் பல விலையுயர்ந்த அணிகளையும் பெருமாளுக்குக் காணிக்கையாகக் கொடுத்திருப்பது போற்றத்தக்கது.

"வாழி அருளாளர் வாழி அணி அத்திகிரி
வாழி எதிராசன் வாசகத்தோர்—வாழி
சரணாகதி யென்னும் சார்வுடன் மற்றொன்றை
அரணாகக் கொள்ளாதார் அன்பு"

—வேதாந்த தேசிகர்.

வைகுண்டப் பெருமாள் கோயில்:—பழைய வரலாற்றுப் பெருமையுடையது; பரமேச்சுர விண்ணகரம் என்ற பேருடையது. நந்திவர்ம பல்லவனால் இரண்டாம் பரமேச்சுரவர்மனின் பேரால் கட்டப்பட்டது. திருமங்கையாழ்வார் மங்களசாசனம் செய்திருக்கிறார். எம்பெருமான் பரமபதநாதன்; தாயார் வைகுந்தவல்லி கோயிலில் மூன்று விமானங்கள்; மூன்று திருக்கோலங்கள். கீழே நின்ற திருக்கோலம்; மேலே பள்ளிகொண்ட திருக்கோலம்; அதற்கும் மேலே பரவாசுதேவர் நின்ற திருக்கோலம். கோயிலின் சுற்றுச் சுவர்களில் பல்



வைகுண்ட பெருமாள் கோயில்

லவ மன்னர்களின் வரலாற்று நிகழ்ச்சிகளைச் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டிருக்கின்றன.

அட்டபுயகரம்:—அஷ்டபுஜம் என்றும் பேர். எம்பெருமானுக்கு எட்டு திருக்கைகள் உள்ளன. ஆதிகேசவப் பெருமாள்; அலர் மேலுமங்கைத் தாயார். திருமங்கையாழ் வாரும், பேயாழ்வாரும் பாடியுள்ளனர். வேதாந்ததேசிகர் "பக்தர்களுக்கு அருள நான்கு கைகள் போதாதென்று இன்னும் நான்கு கைகளையும் பெற்றார்" என்று கூறுகிறார்.

திருத்தண்கா:-(விளக்கொளிப் பெருமாள் கோயில்). வேதாந்த தேசிகர் அவதரித்த திருப்பதி. தீபப்பிரகாசர், திவ்வியப் பிரகாசர்; மரகதவல்லித் தாயார். திருமங்கையாழ்வார் மங்களசாசனம். தண்கா என்பதை "அம்பூந்தேனிளஞ்சோலை" என்று பாசுரம் பேசுகிறது.

வேளுக்கை: (முகுந்த நாயகர் கோயில்) எம்பெருமான் முகுந்தமூர்த்தி; வேளுக்கை வல்லித் தாயார். திருமங்கையாழ்வார், பேயாழ்வார் இவர்கள் மங்களசாசனம் செய்துள்ளார்கள்.

நிலாத்திங்கள் துண்டம்: ஏகாம்பரநாதர் கோயிலுக்குள் உள்ளது. நிலாத்திங்கள் துண்டத்தான்; நேரொருவரில்லாவல்லி. திருமங்கை மன்னன் பாசுரம் அருளியுள்ளார்.

திருவெஃகா: யதோத்காரிப் பெருமாள் அல்லது சொன்னவண்ணம் செய்தபெருமாள் கோயில் என்றும் பெயர். பெரும்பாணாற்றுப் படையில் கூறப்பட்டிருக்கிறது. பொய்கையாழ்வார் அவதாரம் செய்த திருப்பதி. வேகவதியாற்றின் வெள்ளத்தைத் தடுக்கக் குறுக்கே சயனித்ததால் வேகணை, வெஃகணை வெஃகா என்றாயிற்று. கணிகண்ணன் என்ற மாணவருக்காக திருமழிசையாழ்வாருடன் சென்றபடியால் சொன்னவண்ணம் செய்த பெருமாள் என்ற பெயர் உண்டாயிற்று. தாயார் கோமளவல்லிநாச்சியார். திருமழிசையாழ்வார், திருமங்கையாழ்வார், பொய்கையாழ்வார், பேயாழ்வார், நம்மாழ்வார் இவர்கள் மங்களசாசனம் செய்துள்ளார்கள்.

திருஊரகம்: உலகளந்த பெருமாள் கோயில். எம்பெருமான் திருக்கோலம் கண்கொள்ளாக் காட்சியுடையது. அமுதவல்லி நாச்சியார். இக்கோயிலுக்குள் **திருக்காரகம், திருக்கார்வானம், திருநீரகம்** என்ற திவ்விய தேசங்களும் உள்ளன. திருமங்கையாழ்வார், திருமழிசையாழ்வார் மங்களசாசனம் செய்திருக்கின்றனர்.

திருக்கள்வனூர்: ஆதிவராகப் பெருமாள்; அஞ்சிலைநாச்சியார். காமாட்சியம்மன் கோயிலுக்குள் இந்த சந்நிதியுள்ளது. திருமங்கையாழ்வாரின் மங்களசாசனம் பெற்றது.

திருப்பாடகம்: (பாண்டவதூதப் பெருமாள் கோயில்) இக்கோயில் கல்வெட்டுக்களில் எம்பெருமான் பெயர் தூதஹரி என்று குறிக்கப்படுகிறது. திருமழிசையாழ்வார், திருமங்கையாழ்வார், பேயாழ்வார், பூதத்தாழ்வார் இவர்களுடைய மங்களசாசனம்.

திருப்பவளவண்ணம்: பவளவண்ணப் பெருமாள்; பவளவல்லிநாச்சியார். திருமங்கை மன்னரின் பாசுரம் உடையது. பச்சைவண்ணப்பெருமாள் கோயில் இதன் அருகில் உள்ளது.

சித்திரகுப்தர் கோயில்: எமதர்மனுக்குக் கணக்கெழுதும் சித்திரகுப்தருக்குரியது. தொழுபவரையும், பொழுது போக்குபவரையும் "எழுதும் கீழ்க் கணக்கு இன்னம்பரீசனே" என்ற அப்பர் தேவாரப் பாடல் நினைவுக்கு வருகிறது.

திருப்பருத்திக்குன்றம்: (ஜைன காஞ்சி). திகம்பர சமணர்களுக்கு ஒரு முக்கியதலம். இது மிகப் பழைய சமணப்பதியும்கூட. எட்டாம் தீர்த்தங்கரரான சந்திரப்பிரபருக்கு ஒரு ஆலயம் இருக்கிறது. இதில் 17-ஆம் தீர்த்தங்கரரான குந்துநாதரின் மூர்த்தியும் உள்ளது. இன்னுமொரு பெரியகோயில் 24-ஆம் தீர்த்தங்கரரான திரைலோக்கிய நாதர் என்ற மகாவீர வர்த்தமானருக்குரியது. இருசப்பர் என்ற விஜயநகர அமைச்சர், புஷ்பசேனர் என்ற சமணமுனிவரின் விருப்பத்திற் கிணங்க இங்கே சங்கீத மண்டபம் கட்டியுள்ளார். இங்குள்ள கோயில்களின் சிற்ப அழகு போற்றுதற்குரியது. பல சமண முனிவர்கள் இங்கிருந்து சமண சமயப்

குமரகோட்டம்



குமரகோட்டம்

''காஞ்சியில் வசிக்க முத்தி'' என்ற பழமொழியுண்டு. அக்காஞ்சி நகரில் தலை சிறந்த கோட்டங்கள் நான்கு. புண்ணியகோட்டம்-வரதராஜர் கோயில், உருத்திரகோட்டம் - ஏகாம்பரநாதர் கோயில், காமகோட்டம்-காமாட்சியம்மை கோயில், குமரகோட்டம்-முருகன் கோயில் என்பவை. குமரகோட்டம், ஏகாம்பரநாதர் கோயிலுக்கும், காமாட்சியம்மன் கோயிலுக்கும் நடுவே அமைந்திருக்கிறது. சச்சிதானந்த ரூபமாயுள்ள சோமாஸ்கந்த மூர்த்தத்தில் இறைவனுக்கும் தேவிக்கும் நடுவில் கந்தன் இருப்பதை குமரகோட்டக் கோயில் அமைப்பு நினைவுறுத்துகிறது. ஓங்காரத்தின் பொருள் சொல்ல முடியாது மயங்கிய பிரமதேவனைக் குட்டிச்சிறையிலடைத்தார் குமரன். சிவபெருமான் அவரை விடுவிக்கும்படி முருகனுக்கு ஆணையிட, அதற்கு மறுத்தார் செவ்வேள். அந்த குற்றத்திற்காக தேவ சேனாதிபதி ஒரு லிங்கத்தை இப்பதியில் அமைத்து வழிபடுகிறார் என்று புராணம் கூறுகிறது. ஆதலின் இக்கோயிலுக்கு தேவசேனாபதீச்சரம் என்று பேர். "உருகும் உள்ளத்தான்'' என்ற திருநாமத்துடன் திருமாலும் தன் மருகருடன் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கிறார்.

காஞ்சி, கச்சி, கச்சிக்கச்சாலை, கம்பை நகர், கம்பைமாவடி, கவுரி திருக்கொட்டு என்ற பேர்களை வைத்து அருணகிரிநாதர் பல திருப்புகழ்ப் பாடல்களைப் பாடியுள்ளார். குமரகோட்டம் என்ற பெயரை அமைத்து 'அறிவிலாப் பித்தர்' என்று தொடங்கும் ஒரு பாடல் அருளியுள்ளார். அப்பாட்டின் ஒரு பகுதி பின்வருமாறு:—

"இறைவர்மாற் றற்றசெம்பொன் வடிவம்வேற்
றுப்பிரிந்து
இடமேற் கச்சிவந்த உமையாள்தன்

பிரசாரம் செய்திருக்கின்றனர். அவர்களில் அகளங்கர் என்பவர் தலைசிறந்தவர்.

திருமடங்கள் : காஞ்சியில் பல மடாலயங்கள் உள்ளன. அழகிய மணவாள ஜீயர் மடம், அகோபில மடம், ஆத்தான் ஜீயர் மடம், சங்கர மடம், உத்திராதி மாத்வமடம், உத்திராதி வைணவ மடம், கோசுவாமி மடம், சைவ சித்தாந்த மடம், ஞானப்பிரகாசர்மடம், திருவாவடுதுறை ஆதீனமடம், நால்வர் குரு பூஜை மடம், அறுபத்து மூவர் மடம், இராம கிருஷ்ண மடம், பிரதிவாதி பயங்கரமடம் இவைகள் முக்கியமானவை.

இத்தகைய பெருமையும், மகிமையும் வாய்ந்த காஞ்சியம் பதியிலுள்ள கோயில்களை வணங்கி வழிபட்டு இறைவன் திருவருளுக்குப் பாத்திரமாவோமாக.

இருளைநீக் கத்தவஞ்செய் தருளநோக்
கிக்குழைந்த
இறைவர்கேட் கத்தகுஞ்சொல் உடையோனே
குறவர்கூட் டத்திலன்று கிழவனுய்ப் புக்குநின்று
குருவியோட் டித்திரிந்த தவமானைக்
குணமதாக் கிச்செறிந்த அழகுகாட் டிப்புணர்ந்த
குமரகோட் டத்தமர்ந்த பெருமாளே.”

கச்சியப்ப சிவாச்சாரியார் கந்தபுராணம் பாடுவதற்கு முருகன் திருவருள் புரிந்த தலம் இதுவேயாகும். ‘கச்சித்தாய் உச்சியை மோந்து கண்ணோடு அணைக்கும் திருத்தாளா’ என்று திருப்போரூர்ச்சந்நிதி முறையில் சிதம்பர சுவாமிகளும், “குமரகோட்டம் என உள்ளியோர் பிறப்பறுக்கும் ஆச்சிரமம்” எனச் சிவஞான சுவாமிகளும் போற்றுகின்றனர்.

இக்கோயிலில் ஐப்பசியில் கந்தசஷ்டி விழாவும், வைகாசியில் விசாகப் பிரமோற்சவமும் சிறப்பாக நடைபெறுகின்றன. இத்தலத்தின் சிறப்பை

“ஈறுசேர் பொழுதினும் இறுதி யின்றியே
மாறிலா திருந்திடும் வளங்கொள் காஞ்சியில்
கூறுசீர் புனைதரு குமர கோட்டம் வாழ்
ஆறுமா முகப்பிரான் அடிகள் போற்றுவாம்”

என்ற கந்தபுராணச் செய்யுள் புகழ்ந்து கூறுகிறது.

கச்சியப்பசிவாச்சாரியர் :— காளத்தியப்பச் சிவாச்சாரியார் என்பவர் குமரகோட்டத்து அருச்சகருள் ஒருவர். அவர் திருமகன் கச்சியப்ப சிவாச்சாரியார். வடமொழியும் தென் தமிழும் கற்றுத் துறைபோய உத்தமர். அவர் கனவில் ஒருநாள் முருகன் தோன்றி, ‘கந்த புராணத்தைத் தமிழிலே பாடக்கடவாய்’ என்று ஆணையிட்டு “திகடச் சக்கரச் செம் முகம் ஐந்துளான்” என்று அடியெடுத்துக் கொடுத்து மறைந்தான். அன்று தொட்டு நாள் ஒன்றுக்கு நூறு பாடல்களாகப் பாடிக் கந்தபுராணத்தை முடித்தார். அந்நூலை அரங்கேற்றும்போது முதல் காப்புச் செய்யுளில் ‘திகடசக்கரம்’ என்பது திகழ்+தசக்கரம் என்று பிரித்து விளங்குகின்ற பத்து கைகள் என்று கச்சியப்பசிவாச்சாரியர் பொருள் கூறினர். திகழ்+தசக்கரம், திகடசக்கரம் என்றாவதற்கு இலக்கணம் இல்லை என்று சபையிலுள்ள புலவர் ஒருவர் ஆட்சேபித்தார். முருகன் அடியெடுத்துக்கொடுத்த அச்சொற்றொடர்க்கு மறுநாள் பொருள் கூறுவதாக மொழிந்தார் சிவாச்சாரியார். அன்றிரவு முருகன் அவர் கனவில் “நாளை சோழதேசத்துப் புலவன் தான் இயற்றிய வீரசோழியம் என்ற இலக்கணத்துடன் வந்து சந்திப்புணர்ச்சி விதி கூறுவான்” என்று சொல்லி மறைந்தார். மறுநாள் சபை கூடியது. சோழதேசப் புலவர் அங்கே வந்தார்; வீர சோழியத்தில் சந்திப்படலத்தில் திகழ் தசம் என்பது திகடசம் என்பதற்கு விதியிருத்தலைக் காட்டி விளக்கம் செய்தார்; ‘ஆட்சேபம் ஒழிந்ததா’ என்று கூறி புலவர் திருவுருக்கரந்தார். முருகப்பெருமானே அப்படிச் செய்தார் என்று யாவரும் பேரானந்தம் அடைந்தனர். நூலும் தொடர்ந்து அரங்கேற்றப்பெற்று ஒரு ஆண்டில் முடிவுற்றது. தொண்டைநாட்டின இருபத்து நான்கு கோட்டத்துள்ள வேளாளர்கள் சேர்ந்து, கச்சியப்ப சிவாச்சாரியரையும் கந்தபுராணத்தையும் தந்தச் சிவிகையிலேற்றி ஊர்வலம் வந்து பெருமை செய்தார்கள். இதை தொண்டை மண்டல சதகம் பின்வரும் செய்யுளில் கூறுகிறது:—

அந்தப் புரமு மறுநான்கு
கோட்டகத் தாருமொன்றாய்க்
கந்தப் புராணம் பதினாயிரஞ்
சொன்ன கச்சியப்பர்
தந்தப் பல்லக்குச் சிவிகையுந்
தாங்கியச் சந்நிதிக்கே
வந்தப் புராண மரங்கேற்றினர்
தொண்டை மண்டலமே”

சைவசமயத்திற்கு முக்கண்களாக திருத்தொண்டர் புராணம் (பெரிய புராணம்), கந்த புராணம், திருவிளையாடற் புராணம் இவைகளை ஆன்றோர் கூறுவர். கந்தபுராணம் பரந்த கடல் போன்றது. அதில் ஆறு காண்டங்களில் 141 படலங்கள் உள்ளன. மொத்த பாடல்கள் 10345.பக்திச்சுவைப் பாடல்களும், சமயக் கருத்துக்களும் நிறைந்திருக்கின்றன. ‘எந்தப் புளுகும் கந்தபுராணத்தில் காணலாம்’ என்று ஒரு தவறான பழமொழி நம்நாட்டில் வழங்குகிறது. “எந்தப் பொருளும் கந்த புராணத்தில் காணலாம்” என்பதே சரி

காமாட்சியம்மை

பெண்களின் கண்களுக்கு இலக்கணம் கூற வந்தவர்கள் அவை அகன்றும், நீண்டும், அழகாகவும் இருக்கவேண்டும் என்று சொன்னார்கள். அந்த இலக்கணத்தை அமைத்தே உலகீன்ற அம்மைக்கும் பெயரிட்டார்கள். விசாலாட்சி, மீனாட்சி, காமாட்சி என்பன அவை. நம் நாட்டுப் பழமொழியொன்று, "காஞ்சி காமாட்சி, காசி விசாலாட்சி, மதுரை மீனாட்சி" யென்று அன்றாட வழக்கில் பேசப்படுவதைக் காண்கிறோம். முதலில் கூறப்பட்டிருப்பது காமாட்சியம்மையைத் தான். காமம், அட்சி என்ற இரு சொற்களால் ஆனது அப்பெயர். காமம் என்றால் விரும்பப்படும் தன்மையுள்ள அழகான என்றும், அட்சி என்றால் கண்ணையுடையவள் என்றும் பொருள். வசீகரிக்கும் தன்மையுடைய விழிகளையுடையவள் என்று கூறலாம். உயிர்கள் விரும்பினவற்றைக் கொடுப்பவள் என்றும் கூறுவர். கா-கலைமகள், மா-இலட்சுமி, க்ஷி-பார்வதி என்ற இம்மூவரையும் கண்களாக உடைய பராசக்தி எனவும் கருதுகின்றனர்.

விசாலாட்சி விசுவநாதருடனும், மீனாட்சி சொக்கநாதருடனும் கோயில் கொண்டெழுந்தருளியுள்ளனர். ஆனால் காமாட்சியோ தனிக் கோயிலில் வீற்றிருந்தருளுகிறாள். காஞ்சிபுரத்தில் நான்கு கோட்டங்கள் உள்ளன. உருத்திரகோட்டம் ஏகாம்பரர் கோயில், புண்ணிய கோட்டம் வரதராஜர் கோயில், குமரகோட்டம் முருகன் கோயில், காமகோட்டம் காமாட்சியம்மை கோயில். காமாட்சியம்மை கோயில் நகருக்கு நடு நாயகமாக திகழ்கிறது. நான்கு அழகிய கோபுரங்கள், உயர்ந்த மதில்களுடன் கிழக்கு நோக்கியுள்ளது. கோயிலைச் சுற்றிலும் நான்கு இராஜ வீதிகள் உள்ளன. எல்லாக் கோயில் திருவிழாக்களிலும் காமாட்சியம்மையைச் சுற்றியுள்ள வீதிகளில் சுவாமி வலம் வருதல் வழக்கமாக இருக்கிறது. காஞ்சிபுரத்திலுள்ள கோயில்களிலுள்ள பிரதான கோபுரங்களெல்லாம் காமாட்சியம்மையை நோக்கியே அமைந்திருக்கின்றன. நம் நாட்டிலுள்ள சிவாலயங்களிலெல்லாம் பிரகாரத்தில் அம்பிகைக்குத் தனிக் கோயில் இருக்கும். ஆனால் காஞ்சி நகரிலுள்ள எந்த சிவாலயத்திலும் அம்மன் சந்நிதி தனியே கிடையாது. எல்லா சக்திகளையும் காமாட்சியம்மை தன்னுள் அடக்கி வைத்திருக்கிறாள் என்பதே இதன் கருத்தாகும்.

இந்த கோட்டத்திற்கு திருக்காமகோட்டம், ஸ்ரீபுரம், பத்மநாபகம், ஜீவன் முக்திபுரம், காமகோடி என்ற பெயர்களுமுண்டு. தேவிக்கு காமாட்சி, மகாதேவி, திரிபுரசுந்தரி, இராஜேசுவரி என்ற திருநாமங்கள் வழங்குகின்றன. இறைவன் கொடுத்த இரு நாழி நெல்லைக்கொண்டு முப்பத்திரண்டு அறங்களையும் செய்து வழிபாட்டில் அம்மை நிற்கிறாள் என்று புராணம் கூறுகிறது. வசிஷ்டரால் இராமனுக்கு உபதேசிக்கப்பட்ட சிந்தாமணி என்னும் தந்திர நூலில் பஞ்சபூத பீடங்களில் ஒன்றான ஆகாச பீடம் இக்காமகோட்டமே என்று கூறப்பட்டிருக்கிறது. காமாட்சி விலாசம் என்ற நூலில் 51 சக்தி பீடங்கள் உண்டென்றும், அவைகளில் முக்கியமான மூன்றில் ஒன்றான வாக்பவகூடம் என்னும் காமராஜ பீடம் காஞ்சிகாமாட்சி சந்நிதியில் இருக்கிறதென்றும் கூறப்பட்டிருக்கிறது,

கோயிலில் காயத்திரி மண்டபம் மிகவும் முக்கியமானது. காமாட்சியம்மையும், சக்கரப்

யானது. கந்தபுராண அரங்கேற்றம் குமரகோட்டத்தில் முருகன் திருமுன் நடைபெற்றதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஏகாம்பரநாதர் ஆலயத்தில் ஆயிரக்கால் மண்டபத்தில் 'விகடசக்கர விநாயகர்' வீற்றிருக்கிறார். 'திகடசக்கரம்' என்று தொடங்கும் காப்புச் செய்யுளில் வரும் 'விகடசக்கரன்' அவர்தான். ஆகையால் கந்தபுராண அரங்கேற்றம் இந்த ஆயிரக்கால் மண்டபத்தில் நடந்திருக்கலாம் என்று தோன்றுகிறது. சிதம்பரம் ஆயிரக்கால் மண்டபத்தில் பெரியபுராண அரங்கேற்றம் நடைபெற்றது ஈண்டு நினைவு கூர்தற்குரியது.

அறுமுகச் செவ்வேள் அடிமலர் வாழ்க!

பிரதிஷ்டையும், பிலாகாசமும் உள்ள கர்ப்பக் கிரகமும், அர்த்தமண்டபமும் காயத்திரி மண்டபத்தை ஆதாரமாகக் கொண்டிருக்கின்றன. அம்மண்டபத்து காயத்திரி மந்திரத்தையொட்டி இருபத்து நான்கு தூண்கள் உள்ளன.

கர்ப்பக்கிரகச் சுவரின் ஒரு பக்கத்தில் கள்வர் என்ற திருமால் எழுந்தருளியிருக்கின்றனர். திருமங்கையாழ்வாரால் மங்களசாசனம் பெற்ற திருக்கள்வனூர் இதுவே.மேலும் சொரூப லட்சுமி, அரூபலட்சுமி, வராகி இவர்களின் திருவுருங்களும் உள்ளன. இவையன்றி அன்னபூரணி, சாஸ்தா, (சாத்தனர்), அஷ்டபுய சரசுவதி, ஆதிசங்கரர் இவர்களின் சந்நிதிகளும் உள்ளன.

கோயிலில் ஐந்து காமாட்சிகள் (1) பிலாகாசம். (2) ஸ்ரீசக்கரம், (3) மூலகாமாட்சி, (4) தவக்காமாட்சி, (5) பங்காருகாமாட்சி. மகம்மதியர் படையெடுப்பில் மறைத்துவைப்பதற்காக பங்காரு (சொர்ண) காமாட்சி உடையார் பாளையத்திற்கு 300 ஆண்டுகளுக்கு முன் எடுத்துச் செல்லப்பட்டது. பின்னர் தஞ்சை மன்னரால் தஞ்சாவூருக்கு எழுந்தருளுவிக்கப்பட்டு அங்கு தனிக்கோயிலில் விளங்குகிருள். காமாட்சியம்மையின் எதிரிலுள்ள பீடத்தில் அஷ்டலட்சுமியுடன் சக்கரத்தை ஆதிசங்கரர் அமைத்தார்.

இந்த கோயிலில் பஞ்சதீர்த்தம் என்ற உலகாணி தீர்த்தம் இருக்கிறது. நவராத்திரி விழா, மாசி மாதத்தில் பிரமோற்சவம் இவைகள் நடைபெறுகின்றன.

அம்மையின் மகிமையைப்பற்றி காமாட்சி லீலா பிரபாவம், தேவி பாகவதம், காமாட்சி விலாசம், காஞ்சிப்புராணம் முதலிய நூல்கள் கூறுகின்றன. பாகவதத்தில் பலராமர் தீர்த்த யாத்திரையைக் கூறுமிடத்தில் காஞ்சிமாநகர் "காமகோடிபுரி" என்று குறிக்கப்பட்டிருக்கிறது. லலிதா சகஸ்ரநாமம், த்ரிசதி நாமா, லலிதா அஷ்டோத்தரம் இவைகளில் காமாட்சியைப்பற்றிய பதங்கள் வருகின்றன. லலிதோபாக்யானம் என்ற நூலில் அகஸ்தியர் காஞ்சி நகரையடைந்து வரதராஜரையும், ஏகாம்பரநாதரையும் வணங்கி, பாவங்களைப் போக்கும் காமாட்சியையும் வழிபட்டார் என்று கூறப்பட்டிருக்கின்றது. காமாட்சி விலாசம் என்ற நூலில் இக்கோயிலில் நடக்க வேண்டிய பிரதிஷ்டை, பூஜை, உற்சவம் முதலியவைகளையெல்லாம் சொல்லப்பட்டிருக்கிறது. ஆதி சங்கரர் அருளிய சௌந்தர்யலஹரியிலும் அம்பாளைப்பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. சிலப்பதிகாரத்தில் அடியார்க்கு நல்லார் உரையில் மேற்கோளாகக் காட்டப்பட்ட கீழ்க்காணும் வெண்பாவில் காமாட்சியம்மையை **வளைக்கைச்சி** என்று குறிக்கப்பட்டிருக்கிறது:—

"கச்சிவளைக் கைச்சி காமகோட்டங்காவல்
மெச்சியினிதிருக்கும் மெய்ச்சாத்தன்-
கைச்செண்டு
கம்பக்களிற்றுக் கரிகாற்பெரு வளத்தான்
செம்பொற் கிரிதிரித்த செண்டு."

வேண்டுவார் வேண்டியாங்கு கொடுத்தருளும் காமக்கண்ணியின் கழல் தொழுதுய்வோமாக.

***

ஸ்ரீ கபாலீஸ்வரர் தேவஸ்தான நூல் நிலையத் திறப்பு விழா

22—10—1958 விஜயதசமியன்று மாலை 6-மணிக்கு ரூபாய் 5,000 செலவில் கட்டியுள்ள புதிய கட்டிடத்தில் நூல் நிலையத்தை சென்னை உயர் நீதி மன்ற நீதிபதி கனம் ஸ்ரீ ஏ. எஸ். பி. அய்யர், ஐ. சி. எஸ். அவர்கள் தலைமையில் அற நிலையப் பாதுகாப்புத்துறை அமைச்சர் கனம் ஸ்ரீ எம். பக்தவத்சலம், பி. ஏ., பி. எல்., அவர்கள் திறந்து வைத்தார்கள். நூல் நிலையம் 1000 நூல்களுடன் ஆரம்பிக்கப்பட்டது. கனம் மந்திரி அவர்கள் ஆலயங்களில் நூல் நிலயங்களின் அவசியம் பற்றி விளக்கினுர்கள்.

சுந்தரர்

"பேரூரும் பரவை மனப் பிணக்கற எம்பெருமானை
ஊரூரும் பலபுகல ஓரிரவில் தூதனெனத்
தேரூரும் திருவாரூர்த் தெருவுதொறு நடப்பித்தாய்
ஆரூர! நின்பெருமை அயன்மாலும் அளப்பரிதே"

—இராமலிங்க அடிகள்.

சைவ சமய நூல்கள் இரண்டு வகை. ஒன்று சாத்திரம்; மற்றொன்று தோத்திரம். சாத்திர நூல்கள், சமயச்சிறப்பு, கடவுள், உயிர், உலகம் என்பவைகளைப்பற்றிய ஆராய்ச்சியில் அறிவிற்கு விருந்தாக நிற்பவை. தோத்திர நூல்கள், ஆண்டவனை அன்பினால் வழிபட்டு அவன் அருள் பெறுவதற்குப் பெருந்துணை புரிபவை. சாத்திர நூல்கள் பதினான்கு; தோத்திரங்கள் பன்னிரண்டு. தோத்திரங்களைப் பன்னிரு திருமுறைகளாக ஆன்றோர் வகுத்தனர். முதல் மூன்று திருமுறைகள் சம்பந்தர் பாடிய தேவாரச் செய்யுள்கள்; இரண்டாவது மூன்று திருமுறைகள் அப்பர் அருளிய பாசுரங்கள்; ஏழாவது திருமுறை சுந்தரரின் தேவாரப் பாடல்கள். அந்த சுந்தரரின் வரலாறு சுருக்கமாக இங்கு கூறப்படுகிறது.

திருக்கயிலை மலையில் சிவபெருமான் அணுக்கத் தொண்டருள் ஒருவர் ஆலால சுந்தரர். அவர் பூக்கொய்யச் சென்றபோது நந்தவனத்திற்கு வந்த பார்வதிதேவியின் பணிப்பெண்களாகிய அனிந்திதை, கமலினி என்பவரைக் கண்டு காதலுற்றார். அவர்களும் இவர்மேல் ஆசைகொண்டனர். இதையறிந்த ஆண்டவன் ஆலாலசுந்தரரை நோக்கி "நீ தென்னாட்டில் மனிதனாகப் பிறந்து அப்பெண்கள் இருவருடனும் இன்பம் அனுபவிப்பாயாக" என்று திருவாய்மலர்ந்தருளினார். அது கேட்டு மனங்கலங்கிய தொண்டரைப் பார்த்துத் தாமே வந்து தடுத்தாட் கொள்வதாக இறைவன் திருவருள் புரிந்தார்.

தமிழகத்தின் திருமுனைப்பாடி நாட்டிலுள்ளது திருநாவலூர். அவ்வூர் ஆதிசைவர் குலத்து சடையனாருக்கும் அவர் மனைவியாருக்கும் திருமகனாக ஆலாலசுந்தரர் 'தீதகன்று உலகம் உய்யத் திரு அவதாரம் செய்தார்". அக்குழந்தைக்கு நம்பி ஆரூரர் என்று திருப்பெயரிட்டனர். அந்நாட்டின் மன்னரான நரசிங்கமுனையர் ஆரூரரை அபிமான புத்திரராக வளர்த்து, சகல கலைகளையும் பயிற்றுவித்தார். நம்பியும் மணப்பருவமடைந்தார். புத்தூர் சடங்கவியாரின் பெண்ணைப் பேசி முடிவு செய்தனர். எல்லோரும் நம்பி ஆரூரரைத் திருமணக் கோலம் கொள்ளச் செய்து புத்தூருக்குச் சென்றனர். இறைவன் ஒரு கிழ அந்தண வடிவில் மணப்பந்தருக்கு வந்து "நம்பியாரூரன் என் அடிமை; எனக்குப் பணி செய்யவேண்டும்" என்றார். இவர்கள் வழக்கைத் திருவெண்ணெய் நல்லூரில் தீர்ப்பதென முடிவு செய்யப்பட்டது. அங்கு இருவர் சாட்சியங்களைக் கேட்ட அந்தணர்கள் ஆரூரர் முது கிழவருக்கு அடிமை என முடிவு செய்தனர். முதியவர் வீடு எங்கேயென்று கேட்க அவர்களை அழைத்துக் கொண்டுபோய் திரு அருட்டுறை ஆலயத்து நுழைந்து மறைந்தனர். யாவரும் திகைத்தனர். இறைவன் அம்மையுடன் இடப வாகனத்தமர்ந்து காட்சி கொடுத்து, "நாம் முன் கயிலையில் சொன்ன வண்ணம் தடுத்தாட் கொண்டோம்" என்று திருவாய்மலர்ந்தருளினார். நம்பியாரூரரும் "பித்தாபிறைசூடி" என்று தொடங்கும் திருப்பதிகம் பாடினார். பின்னர் திருநாவலூர், திருத்துறையூர் முதலிய பதிகங்களைப்பாடி, திருவதிகைக்கு அண்மையிலுள்ள சித்தவட மடத்தில் தங்கினர். இறைவன் திருவடி தீட்சை செய்தனர். "தம்மானை அறியாத...என்ற பாட்டில் "கறை கொண்ட கண்டத் தெம்மான் தன் அடிக் கொண்டென் முடிமேல் வைத்திடும்" என்று குறிப்பிட்டுப் பாடினார். பின்னர் பல தலங்களை வணங்கிப் பதிகங்கள் பாடித் திருவாரூர் சேர்ந்தார். கயிலையிலிருந்த கமலினியார் அங்கு உருத்திர கணிகையர் குலத்தில்

பிறந்து பரவையார் என்ற பெயருடன் வளர்ந்து மணப்பருவம் அடைந்தார். ஆரூரரும் பரவையாரும் திருவாரூர்க் கோயிலில் சந்தித்துபோது ஒருவர் மேல் ஒருவர் காதல் கொண்டனர். சிவபெருமான் திருவருளால் இருவருக்கும் மணம் முடிந்தது.

ஒருநாள் கோயிலுக்குச் சென்றபோது இறைவன் "தில்லைவாழ் அந்தணர்" என்று அடியெடுத்துக் கொடுக்க திருத்தொண்டத் தொகையை ஆரூரர் பாடினர். குண்டையூர்க் கிழார் கொடுத்த நெற்குவியல்களைப் பூதங்களின் உதவியால் திருவாரூரில் கிடைக்கப் பெற்ருர். திருநாட்டியத்தான்குடியிலுள்ள கோட்புலியாரின் இரு பெண்களாகிய வனப்பகை, சிங்கடி இவர்களை அடிமைகொள்ள வேண்டுமென்று அவர்கள் தந்தையார் வேண்ட, ஆரூரர் அவர்களைத் தம் மக்கள் என்று சிறப்பித்துப் பாடினர். திருப்புகலூரில் ,'தம்மையே புகழ்ந்து" என்ற பதிகம் பாடி, பொற்பாளங்கள் பெற்றுப் பரவையாருக்குப் பங்குனி உத்திரச் செலவுக்காகக் கொடுத்தனர்.

பல தலங்களை வணங்கி, திருமுதுகுன்றத்தில் இறைவன் பொன் கொடுக்க, மணிமுத்தா நதியிலிட்டுத் திருவாரூர்க்குளத்தில் எடுத்தார். தொண்டை நாட்டுத் தலங்களை வழிபட்டுத் திருவொற்றியூர் அடைந்தார். கயிலையிலிருந்த அனிந்திதை ஞாயிறு கிழார் என்பவருக்கு மகளாய்ப் பிறந்து சங்கிலியார் என்னும் பெயருடன் பூத்தொண்டு புரிந்து வந்தனர். ஆரூரர் அந்த அம்மையைக் கோயிலில் கண்டனர்; காதல் கொண்டனர். இறைவன் ஆணையின்படி சங்கிலியாரைப் பிரிவ தில்லை என்று சபதம் செய்து திருமணம் செய்துகொண்டனர். திருவாரூர் வசந்த உற்சவத்தை எண்ணித் திருவொற்றியூரைவிட்டு நீங்கினர். சபதம் தவறினமையால் கண்களை இழந்தார். திருவெண்பாக்கத்தில் இறைவன் "உளோம் போகீர்" என்று சொல்லி ஊன்று கோல் கொடுத்தார். பல தலங்களை வணங்கி காஞ்சிபுரத்தில் இடக்கண் பெற்றுத் திருவாரூர் சேர்ந்தார். பிறகு வலக்கண்ணையும் பெற்றனர். பரவையார் பிணக்கை இறைவன் தூது சென்று தீர்த்தார். சிவபெருமானைத் தூதுசெல்ல வைத்தது தகுதியற்றது என்று ஆரூரரின் மேல் கலிக்காமர் எனபவர் கோபம் கொண்டிருந்தர். சூலைநோய் வாய்ப்பட்ட அவரை ஆரூரர் காணச்செல்ல, அது தெரிந்த கலிக்காமர் வாளால் வயிற்றைக் கிழித்துக்கொண்டு மாண்டார். இதைக் கண்ட நம்பியாரூரரும் தாமும் அவ்வாறே செய்துகொள்ள முற்பட்டார். இறைவன் அருளால் கலிக்காமர் எழுந்து ஆரூரர் கையைப்பற்றிக் கொண்டனர். இருவரும் நட்பினர் ஆயினர்.

ஆரூரருக்குச் சேரமான் பெருமாள் நாயனர் நட்பினர் ஆயினமையின் அந்த சேரநாட்டிற்குச் சென்று சில காலம் அவருடன் தங்கினர். திருவாரூரை நினைந்து திரும்பினர். வழியில் அவிநாசியில் முதலையால் விழுங்கப் பெற்ற தம்மைந்தனின் நினைவால் வருந்திய பெற்ருேரின் நிலைமைக்கு இரங்கி ஆரூரர், "உரைப்பார்" என்று தொடங்கும் பாடலில் "கரைக்கால் முதலையைப் பிள்ளைதரச் சொல்லு காலனையே" என்று பாடி முதலை விழுங்கிய மதலையை வரவழைத்துக் கொடுத்தனர். திரும்பியும் சேரமானுடன் சில காலம் வதிந்தனர். திருவஞ்சைக்களத்தைப்பாடி, வாழ்க்கையினின்றும் நீக்கித் திருவடி சேர்ப்பிக்க வேண்டுமென்று விண்ணப்பித்தனர். சிவபெருமான் வெள்ளையானையை அனுப்ப அதன் மீதேறிக் கயிலாயம் அடைந்தார். இது கேட்ட சேரமானும் குதிரைமீதேறிக் கயிலையை யடைந்தார். பரவையாரும், சங்கிலியாரும் கமலினி அனிந்திதையாகிக் கயிலை சேர்ந்தார். அணுக்கத் தொண்டர்களாக மீண்டும் இறைபணி நின்றனர். சுந்தரர் கயிலை சேர்ந்தது ஆடி மாதம் சுவாதி நட்சத்திரத்தில் என்பர்.

சுந்தரர் வரலாற்றைச் சேக்கிழார் பெரிய புராணத்தில் பரக்கக் காணலாம். காவிய இலக்கணத்துக்கேற்பப் பெரிய புராணத்திற்கு சுந்தரமூர்த்தி நாயனரைக் கதைத் தலைவராக்கி நூலில் முதலிலும், இடையிலும் கடையிலும் வைத்து மற்ற நாயன்மார்களின் வரலாறுகளை அதன் உள்ளடக்கிப் பாடியிருக்கும் தனிச் சிறப்பு சேக்கிழாருக்கே உரியது. ஒவ்வொரு சருக்கத்திலும் சுந்தரரைப் பாடி முடிக்கிருர். அவர் வரலாற்றைத் திருமலைச் சிறப்பு, தடுத்தாட் கொண்ட புராணம், ஏயர்கோன் கலிக்காம நாயனர் புராணம், கழறிற்றறிவார் புராணம், வெள்ளானைச் சருக்கம் இவைகளில் கூறியிருக்கிருர்.

அறுபத்து மூன்று நாயன்மார் வரலாற்றிற்குச் சுந்தரர் பாடிய திருத்தொண்டத் தொகையே முதனூலாக இருந்த பெருமையால் சேக்கிழார் சுந்தரருக்குப் பெருஞ் சிறப்புக் கொடுத்தார்.

சுந்தரர் நிலவுலகில் வாழ்ந்த காலம் 18 ஆண்டுகள் தான். அவர் அப்பர். சம்பந்தர் முதலிய எல்லா அடியார்களையும்பற்றிக் கூறியிருப்பதால் அவர்கள் காலத்திற்குப் பிற்பட்டவர் என்பது தெளிவு. "கொடுக்கிலாதானைப் பாரியே என்று கூறினும் பொருள் கொடுப்பாரிலை" என்று பாடியிருத்தலின் பறம்புமலைப் பாரி வள்ளலுக்குப் பின் இருந்தவர் என்பது பெறப்படுகிறது. ஆராய்ச்சியாளர்கள் இவர் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டில் இருந்திருக்க வேண்டுமென்று கருதுகின்றனர்.

சுந்தரரின் பாடல்களை ஏழாம் திருமுறையாக வகுக்கப்பட்டிருக்கிறது. அதில் 100 பதிகங்கள் உள்ளன. அவர் தேவாரத்தில் அவருடைய வரலாற்றுக்குறிப்புக்களுக்கு அதிகமான அகச்சான்றுகள் (Internal evidence) இருக்கின்றன. உலக வாழ்வில் இருந்து கொண்டு எப்படி இறைவனை அடையலாம் என்பது அவர் வரலாற்றால் நாம் தெரிந்து கொள்ளும் பெரிய உண்மை.

இவர் திருவாரூரில் பலகாலம் தங்கியிருந்தபோதிலும் தாம் பிறந்த ஊராகிய திருநாவலூரை மறந்தாரில்லை. 'நாதனூர் நமக்கூர்—நந்திருநாவலூர்', 'நாடெலாம் புகழ் நாவலூராளி', 'நாதகீத வண்டோதுவார் பொழில் நாவலூரன்' என்றெல்லாம் கூறியிருக்கிறார். தாய் தந்தையரை, 'இசைஞானி காதலன்', 'சடையன் சிறுவன்' என்று பாடுகிறார்.

தாய் தந்தையர் இவருக்கு இட்ட பெயர் நம்பி ஆரூரர் என்பது. அவர்களின் முன்னோர்கள் திருவாரூரைச் சேர்ந்தவர்கள் என்ற காரணத்தினாலோ அல்லது திருவாரூர்ப் பெருமானிடம் வைத்திருந்த பேரன்பினாலோ **ஆரூரர்** என்ற பெயரை வைத்திருக்கலாம். சுந்தரர் என்ற பெயர் புராணத்துள் காணப்படவில்லை. இப்பெயர் இவருக்கு எப்பொழுது எப்படி வழங்க வந்தது என்று தெரியவில்லை. திருநாவுக்கரசர் புராணத்துள் "அறந்தரும் நாவுக்கரசும் **ஆலால சுந்தரரும்**" என்று கூறப்பட்டிருக்கிறது. "சுந்தர வேடங்களால் துரிசே செயும் தொண்டன்" என்று இவரே கூறுவதால் இப்பேர் வந்தது என்று கூறலாம் போலும். அவர் தம்முடைய பாடல்களில், '**ஆரூரன்** எம்பெருமாற்காளல்லேனெனலாமே' என்றும், **திருவாரூரன்** உரைத்த தமிழ்" என்றும், "திருவாரூர்ச் சென்னியில் வைத்த **ஆரூரன்**" என்றும் இது போன்றே பலவிடங்களில் கூறிக் கொள்கிறார். '**ஊரன்**' உரைத்த தமிழ்' என்று பேரைக் குறுக்கியும் சொல்கிறார். இறைவனுடன் வன்மைகள் பேசிய காரணத்தால் **வன்றொண்டன்** என்னும் நாமம் பெற்றார். சிவபெருமான் 'தோழமையாக நம்மைத் தந்தனம்" என்று கூறியதால் **தம்பிரான் தோழர்** என்று பேர் வந்தது. சேரமானுடன் நட்புரிமை பூண்டதால் **சேரமான் தோழர்** என்றும் இவர் பேர் வழங்கலாயிற்று. ஆளுடைய நம்பிகள் என்றும் கூறுவர்.

இறைவன் தம்மை நேரே வந்து தடுத்தாட்கொண்டதை

> **'தன்மையினாலடியேனைத்**
> **தாமாட்கொண்ட நாட்சபைமுன்**
> **வன்மைகள் பேசிட வன்றொண்டன்**
> **என்பதோர் வாழ்வு தந்தார்'**

என்று கூறியிருக்கிறார். ஓலைகாட்டி ஆட்கொண்டு மறைந்த அற்புதத்தைப் பல பாசுரங்களில் குறிக்கிறார்.

கோட்புலி நாயனாரின் புதல்வியர் இருவரையும் தன் மக்களாகப் பாவித்த பெற்றியை ஆங்காங்கே வனப்பகையப்பன், சிங்கடியப்பன் என்ற கூற்றுக்களால் அறிவிக்கிறார். இறைவன் திருவருளால் பரவையாரையும் சங்கிலியாரையும் மணந்து இன்ப வாழ்வு பெற்றதை, 'பண்மயத்த மொழிப் **பரவை சங்கிலி**'க்கும் எனக்கும் பற்றாய பெருமானே' என்றும், 'மாழை யொண்கண் **பரவையைத்** தந்தாண்டானை' என்றும், **சங்கிலியொடு** எனைப் புணர்த்த தத்துவனை' என்றும் விதந்தோதுகிறார்.

பொன்னும் பொருளும் பெற்றபோதும் அவைகளின்மேல் பற்றுவைக்கவில்லை. அடியவர்க்காகவும், பரவைக்காகவுமே பெற்றார். திருப்புகலூரில் பொன் வேண்டும் என்ற திரு

பெரியாழ்வார்

"பாண்டியன் கொண்டாடப்
பட்டபிரான் வந்தானென்று
ஈண்டிய சங்க
மெடுத்தூத—வேண்டிய
வேதங்க ளோதி
விரைந்து கிழியறுத்தான்
பாதங்கள் யாமுடைய பற்று"
—பாண்டிய பட்டர் தனியன்.

பாண்டிவள நாட்டிலுள்ளது ஸ்ரீவில்லிபுத்தூர். அவ்வூரில் வேயர் என்னும் அந்தணக்குடியினர் இருந்தனர். அவ்வகுப்பினரில் முகுந்தபட்டர் என்பவர் ஒருவர்; அவர் திருமனைவியார் பதுமவல்லி. இவ்விருவரும் திருமகள் நாதனிடம் நீங்காத பேரன்புடையவர்கள். அவர்களுக்கு கருடாம்சமாய் ஒரு திருமைந்தர் அவரித்தார். அவ்வருமந்த மகவுக்கு **விஷ்ணுசித்தர்** என்னும் திருநாமமிட்டு வளர்த்து வந்தனர். அவரும் பலகலையும் கற்றுணர்ந்தார். எம்பெருமானுக்கு அடிமை செய்வதையே வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டார். திருநந்தனவனம் ஒன்றமைத்து, வடபெருங்கோயிலுடையானுக்கு பூமாலைத்தொண்டு செய்து வழிபட்டு வருவாராயினர். கண்ணனிடம் ஆராத பெருங்காதலுடையவராகவும் விளங்கினர்.

அக்காலத்தே, மதுரையை வல்லபதேவன் என்ற பாண்டிய மன்னன் அர

வுளத்தோடு பாடிய பாடலில் 'பொய்மையாளரைப் பாடாதே எந்தை புகலூர் பாடுமின் புலவீர்காள்' என்று கூறுகிருர். திருமுதுகுன்றத்தில் கிடைத்த பொன்னை ஆற்றில் போட்டார்.

சங்கிலிக்குச் செய்து கொடுத்த சபதத்தினின்றும் தவறியதால் கண்ணிழந்தார். 'சங்கிலிக்காவென் கண்கொண்டாய்', 'பழியதனைப் பாராதே படலமென்கண் மறைப்பித்தாய்' என்று குறிப்பிடுகிருர். கண்ணிழந்து இறைவனை நினைந்து மனம் நொந்து பாடுகிருர். 'ஆளாயிருக்கும் அடியார் தங்கள் அல்லல் சொன்னக்கால் வாளாங்கிருப்பீர் திருவாரூரீர் வாழ்ந்து போதீரே' என்றும், 'எற்றுக்கடிகேள் என் கண் கொண்டீர் நீரே பழிபட்டீர் மற்றைக் கண்தான் தாராதொழிந்தால் வாழ்ந்து போதீரே' என்றும் கூறும் பகுதிகள் கல்நெஞ்சையும் கரைக்க வல்லன.

சிவபெருமான் யானையை அனுப்பிக் கயிலைக்கு அழைத்துக்கொண்டதை 'நாயினேனைப் பொருட்படுத்தி வானெனை வந்தெதிர் கொள்ள மத்தயானை யருள்புரிந்து ஊனுயிர் வேறு செய்தான் நொடித்தான் (கயிலை) மலை உத்தமனே' என்பதைச் சொல்கிருர்.

சம்பந்தர், அப்பர், நாளைப் போவார், சூதநாயனர், சாக்கியநாயனர், கோச்செங்கட் சோழர், கண்ணப்பர், கணம்புல்லர், சண்டேசர் முதலிய அடியவர்களின் திறத்தைப் புகழ்ந்து பாடுகிருர். இறைவன் குணங்களையும், ஆற்றலையும், எப்பொருள்களுடனும் கலந்து நிற்கும் தன்மையையும், தன்னையடைந்தவர்க்குத் திருவருள் புரியும் பெருமையையும், அவனே சமயங்களுக்கெல்லாம் தலைவன் என்பதையும், எவ்வுயிர்க்கும் ஆதாரமானவன் என்பதையும் பல பாசுரங்களில் கூறி யிருக்கிருர், இறைவன் திருவடிகளை எப்போதும் மறவாமையை, 'எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை' என்றும் சொல்கிருர். சுந்தரர் வாழ்க்கையில் கண்ட உண்மைகளை நாம் கைக்கொண்டொழுகி உய்வோமாக,

சாண்டு வந்தான். அவன் ஓரிரவு நகர் சோதனைக்கு வந்தான். ஒரு திண்ணையில் படுத்திருந்த அந்தணரை 'நீர் யார்' என்று கேட்டான். 'கங்கையில் நீராடி சேதுவில் நீராடச் செல்கிறவன் அறம் திறம்பாத பாண்டிய மன்னன் ஆளும் மதுரையில் தங்கினேன்' என்று பதில் மொழிந்தார் யாத்ரீகர். 'நன்னெறிக்குப் பதாகிய ஒரு சுலோகம் சொல்லியருளுங்கள்' என்று வேண்டினான் மன்னன். மழை காலத்துக்கு வேண்டியதை மற்ற எட்டு மாதங்களிலும், இரவுக்கு வேண்டியதைப் பகலிலும், முதுமைக்கு வேண்டியதை இளமையிலும், மறுமைக்கு வேண்டியதை இம்மையிலும் தேடுக என்னும் பொருளுடைய சுலோகத்தைச் சொன்னார். இவ்வறிவுரை அரசன் உள்ளத்தில் ஆழ்ந்து பதிந்தது. மறுமைக்கு வேண்டிய செல்வத்தைத் தேடிக்கொடுக்கும் ஞானகுரு யார் என்பதில் அவன் சிந்தனை சென்றது. தன் புரோகிதர் செல்வநம்பிகளிடம் நிகழ்ச்சிகளைக் கூறி மன அமைதிக்கு வழிகேட்டான். அவரும் சமய ஞானிகளை யெல்லாம் சபை கூட்ட வேண்டும் என்றும், சமய சாரத்தை நன்கெடுத்து உரைக்கும் பெரியாருக்கு ஒரு பொன்முடிப்புக் கொடுக்க வேண்டும் என்றும் கூறினார். அவ்வாறே சபை மண்டபத்தில் பொற்கிழி தொங்கவிடப் பட்டது. நகரில் பறையறைவித்ததுடன் நாடெங்கும் தூதர்கள் மூலம் செய்தி பரப்பப்பட்டது.

வடபெருங்கோயிலுடையான் பெரியாழ்வார் கனவிலே தோன்றி 'நீர் போய்க் கிழியை அறுத்துக்கொண்டு வாரும்' என்று கூறினார். 'கையில் ஏறிய களைகொட்டுத் தழும்பையன்றி நாவிலே நூற்றழும்பு சிறிதும் ஏறப் பெறாத அடியேன் சென்று கிழியறுத்தல் எங்ஙனம் இயலும்' என்று சொன்னார். திருமகள் நாதன் 'அது உம் வயம் அன்று; யாமே அதனை முடிப்போம்; அஞ்சாது செல்க' என்று ஆணையிட்டு மறைந்தனர். ஆழ்வாரும் எம்பெருமானின் திருவருளின் எழுந்த ஆணையின்படி நடக்க எண்ணி மதுரைக்குப் புறப்பட்டுச் சென்றனர். அரசனும் செல்வநம்பிகளும் அன்புடன் வரவேற்றனர். புலவர் சபை கூடியது. காரணமில்லாத காரியமே கிடையாதென்றும், உலகத்திற்குக் காரணப் பொருள் கடவுள் என்றும், அப்பரம்பொருள் திருமால் என்றும், அவனை யடைவதற்குப் பக்தி மார்க்கமே சிறந்ததென்றும், பக்தியின் முடிவு சரணாகதி யென்றும் கூறி பெரியாழ்வார் சித்தாந்தம் செய்து அருளினார். அவ்வளவில் பொற்கிழி அவர்முன் வளைய, அதை ஆழ்வாரும் அறுத்தருளினார்.

அரசனும் புலவர்களும் ஆழ்வார் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினார்கள். அவருக்கு **பட்டர்பிரான்** என்ற திருநாமம் சாத்தி, யானைமேல் ஏற்றி, நகர்வலம் செய்வித்து பல சிறப்புக்களையும் செய்தார்கள். யானையின் கழுத்திலே கிடந்த மணிகளைத் தாளமாகக்கொண்டு **திருப்பல்லாண்டு** பாடியருளினார். பின்னர் ஸ்ரீவில்லிபுத்தூருக்குத்திரும்பினார். கிடைத்த பொற்கிழியை எம்பெருமான் திருவடிகட்குச் சமர்ப்பித்தார். பூமாலைத் தொண்டுடன் பாமாலைத்தொண்டும் செய்தார். எம்பெருமான் கிருஷ்ணாவதாரத்திலே மிகவும் ஈடுபாடுகொண்டார். கண்ணன் குணாதிசயங்களை மிகவும் புகழ்ந்து பாடினார். **பெரியாழ்வார் திருமொழி** என்கிற பிரபந்தத்தையும் அருளிச் செய்து உலகத்தை வாழ்வித்தருளினார்.

கலி 47 (கி. மு. 3056) குரோதன ஆண்டு ஆனித் திங்கள் சுக்கில ஏகாதசி ஞாயிற்றுக்கிழமை சுவாதி நட்சத்திரத்தில் இவ்வாழ்வார் அவதரித்தருளினார்

என்று மூவாயிரப்படி குருபரம்பரைப் பிரபாவம் கூறுகிறது. வடிவழகிய நம்பி தாசர் இயற்றிய பெரியாழ்வார் பிரபந்தத்தில் 'ஆனியெனும் திங்களினில் வளர் பிறையில் அருஞ்சோதிமேனியனுர் சோதியினில்' அவதரித்தார் என்று கூறுகிருர். பெரியாழ்வார் பாசுரங்களில் அபிமான துங்கன் என்றும், கோன் நெடுமாறன் என்றும் கூறி யிருக்கிருர். பொற்கிழி தூக்கிய மன்னன் பெயர் வல்லபதேவன் என்று கூறப்படுகிறது. ஆராய்ச்சியாளர்கள் இவ்வாழ்வார் காலம் கி. பி. எட்டாவது நூற்ருண்டாய் இருக்கலாம் என்று கருதுகின்றனர்.

இவ்வாழ்வாருக்குத் தாய் தந்தையர் இட்ட திருப்பெயர் விஷ்ணுசித்தர் என்பது. தமது பாசுரங்களில் புதுவைக் கோன்பட்டர்பிரான், வேயர் புகழ்விட்டு சித்தன், வில்லிபுத்தூர்ப்பட்டன், வில்லி புத்தூர் விட்டு சித்தன், பட்டர்பிரான் என்று கூறிக் கொள்கிருர். பாண்டியன் அளித்த திருநாமம் பட்டர்பிரான் என்பது.

"மங்களசாசனத்தின் மற்றுள்ள ஆழ்வார்கள், தங்களார்வத்தளவுதானன்றிப்-பொங்கும், பரிவாலே வில்லிபுத்தூர் பட்டர்பிரான் பெற்ருன், பெரியாழ்வார் என்னும் பெயர்" என்று மணவாள மாமுனிகள் உபதேச ரத்தினமாலையுள் விஷ்ணுசித்தருக்குப் பெரியாழ்வார் என்ற பெயர் ஏற்பட்ட காரணத்தை மிக அழகாகக் கூறுகிருர்.

பெரியாழ்வார் அருளிய பாசுரங்களின் தொகை 473. திருப்பல்லாண்டு, பெரியாழ்வார் திருமொழி என்று அப் பகுதியைக் கூறுவர். கண்ணன் திருஅவதாரச் சிறப்பு, திருப்பாதாதிகேசவர்ணனை, பிள்ளைப் பருவங்கள், புறம்புல்கல், பூச்சிகாட்டுதல், காதுகுத்தல், நீராட்டல், பூச்சூட்டல், காப்பிடல் முதலியவற்றைப் பாடி யிருப்பது மிகவும் மகிழ்ந்து அனுபவிக்கத் தக்கது. பக்திக் காதலைத் தாயன்பாகப் பாடிய தனிப் பெருமை இவ்வாழ்வார்க்கே உரியது. தாமே யசோதையாகிப் பாடியிருக்கும் பாசுரங்கள் நம்மைப் பரவசப்படுத்தும் பெற்றியுடையன. 'நோக்கி யசோதை நுணுக்கிய மஞ்சளால் நாக்கு வழித்து நீராட்டு மிந்நம்பிக்கு' என்று கூறுவது நோக்கத்தக்கது. 'குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்தில்' என்ற பழமொழியைச் சிறப்பித் தருளியவர் பெரியாழ்வாரே.

"பனிக்கடலில் பள்ளிகோளைப்
பழகவிட்டு ஓடிவந்தென்
மனக்கடலில் வாழவல்ல
மாயமணாள நம்பீ
தனிக்கடலே தனிச்சுடரே
தனியுலகே யென்றென்று
உனக்கிட மாயிருக்க வென்னை
யுனக்குரித் தாக்கினையே"

—பெரியாழ்வார் திருமொழி.

திருத்தம்

"திருக்கோயில்" ஐப்பசி மாத இதழில் 21-ஆம் பக்கத்தில் "தருமபுர ஆதீனத் தாரால்" என்பதற்குப் பதிலாக "திருப்பனந்தாள் காசி மடத்து அதிபர் ஸ்ரீலஸ்ரீ அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் ரூ. 14,400 செலவில்" என்று வாசித்துக்கொள்ளவும்.

செய்திகள்

சென்னை அற நிலையத்துறை ஆணையாளர் திரு. அ. உத்தண்டராமன் ஐ. ஏ. எஸ். அவர்கள் கீழ்க்காணும் நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டார்கள்:—

14-11-58 **காலை:** சித்தர்காடு ஆலந்துறை அப்பர் கோவில் முன்மண்டபக்கால்கோள்விழா.

ஆணையாளர் பயன்படுத்திய வெள்ளிக்கரணையை திரு. சோமசுந்தரம் செட்டியார் ரூ. 101-க்கு வாங்கிக்கொண்டார்.

மாலை: மூவலூர் மார்க்கசகாய சுவாமி கோயிலில் அப்பர் திருப்பதிகக்கல்வெட்டுத் திறப்புவிழா.

15-11-58: திருமருகல் இரத்தினகிரீசர் ஆலயத்தில் நூல் நிலையத் திறப்புவிழா; அம்மன் சந்நிதி முன்மண்டபத் திறப்புவிழா.

16-11-58 **காலை:** திருச்சேறை சாரநாதப் பெருமாள் கோயிலில் திருமங்கையாழ்வார் அருளிய திருப்பாசுரக் கல்வெட்டுத் திறப்புவிழா. ஒப்பிலியப்பன் கோயிலில் சத்திரம் கால்கோள் விழா.

மாலை: திருவிசநல்லூரில் நூல் நிலையத் திறப்புவிழா; மரநடுவிழா; நந்தவனத்தின் தண்ணீர்க்குழாய்க்கு மின்சார விசையை முடுக்கி வைத்தல்.

17-11-58 **காலை:** திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டை தாயுமானவர் கோயிலிலுள்ள மாணிக்கவிநாயர், திருமுறைக்கோயில் இவைகளின் கும்பாபிஷேக விழாக்கள். ஒரு யானையின் மீது திருமுறைகள் வைத்து இரண்டு யானைகள் உடன்வர, ஆணையாளரும் பெருங்கூட்டமும் வீதி வலம் வந்தது. இரவில், முதன் முறையாகச் செய்யப்பட்ட மாணிக்கவிநாயகர் உற்சவமூர்த்தி சமயபுரம் வெள்ளி ரதத்தில் இரண்டு யானைகளுடன் வீதிவலம் வந்தது.

மாலை: திருவரங்கம் கோயிலில், சென்னை திரு. பாலசுப்பிரமணியம் சமய அறநிலைய டிரஸ்ட்டினர் கொடுத்த ரூ. 215 நன்கொடையைக் கொண்டு உட்பிரகாரச் சுவரில் அமைக்கப்பட்ட ஸ்ரீரங்கத் திருப்பதி ஓவியம் திறந்துவைத்தல். மற்ற 107 திருப்பதிகளுக்கும் ஒவ்வொன்றிற்கும் ரூபா 50 செலவில் இத்தகைய ஓவியங்கள் தீட்டுவதெனத் தீர்மானித்ததில், திருக்கண்ணபுரம், திருக்கண்ணமங்கை இவ்விரு திவ்விய தேசங்களின் ஓவியங்களை வரைய அரியலூர் திரு. வி. ஜி. பி. வீராசாமி நாயுடு அவர்கள் ரூபா 100 அவ்விடத்திலேயே கொடுத்தார்கள்.

18-11-58 **காலை:** தஞ்சாவூர் கொங்கணீசுவரர் கோயிலில் நூல் நிலையத் திறப்புவிழா. தஞ்சை நவநீத கிருஷ்ணன் கோயிலில் பிரசார மண்டபத்தின் கால்கோள் விழா. விழாவில் உபயோகித்த வெள்ளிக்கரணையை திரு. கோபால சுவாமி அய்யர் ரூ. 151-க்கு வாங்கிக்கொண்டார். **மாலை:** விண்ணாற்றங்கரை சிங்கப்பெருமாள் கோயிலில் நூல் நிலையத் திறப்புவிழா.

19-11-58 **காலை:** தஞ்சை. பிரதாப வீர அனுமார் கோயிலின் முன் மண்டபத் திருப்பணிக் கால்கோள்விழா. வெள்ளிக்கரணையை திரு. வைத்தியநாதய்யர் ரூ. 161-க்கு வாங்கிக் கொண்டார்.

20-11-58 **காலை:** மாத்தூர் ஔஷதேசுவரர் கோயில் திருப்பணித் துவக்கக் கால்கோள் விழாவில் பயன்படுத்திய வெள்ளிக்கரணை ஏலம் விடப்பட்டதை திரு. இராஜங்க மூப்பனார் ரூ. 601-க்கு எடுத்துக்கொண்டார். சூலமங்கலம் சௌந்தரராஜப் பெருமாள் கோயிலின் முன் மண்டபத் திருப்பணிக் கால்கோள்விழா. வெள்ளிக்கரணையை திரு. நடேச சேர்வை ரூ. 115-க்கு வாங்கிக்கொண்டார். சுவாமிமலையில் கோயிலுக்கு வெளியில் உணவு விடுதி, சமயலறை இக்கட்டிடங்களின் கால்கோள் விழா. வெள்ளிக்கரணையை திரு. சாரங்கபாணி ஆள்வார் ரூ. 205-க்கு வாங்கிக்கொண்டார். மாலை: தஞ்சைப் பெரிய கோயிலில் வார வழிபாடு கூட்டுப்பிரார்த்தனையுடன் துவக்கப்பெற்று முடிவில் ஒரு சிறப்புக் கூட்டமும் நடைபெற்றது. சில மாதங்களுக்கு முன் மதுரை திருஞான சம்பந்த மட அதிபரால் துவக்கிவைக்கப்பெற்ற இவ்வார வழிபாடு பிரதி வியாழன் தோறும் நடைபெற்று வருகிறது.

கோயிலைப் புதுப்பிக்கும் நேர்முறை

[எஸ். ஆர். பாலசுப்பிரமணியன், எம்.ஏ.எல்.டி]

தமிழகத்தில் முருகனின் வழிபாடே மிகப் புராதனமானது. முருகனின் கோயில்கள் குன்றுகளின் உச்சியில் அமைந்துள்ளன. அநேகமாக மரத்தடியில் அவைகள் இருந்தன. திருமுருகாற்றுப்படை என்ற சங்க நூல் முருகனின் படை வீடுகளையும், அவனுடைய வழிபாட்டையும் விவரிக்கின்றது. பட்டினப் பாலை என்ற மற்றொரு சங்க நூல், அதன் பிற்கால நூலாகிய சிலப்பதிகாரம் என்ற நூல்களின் மூலமாய் சிவன், இந்திரன், மாயோன் முதலியோர்களின் கோயில்கள் புகாரிலும், இதர இடங்களிலும் இருந்தனவாக அறிகிறோம். அவைகள் **கோட்டங்கள்** என்று அழைக்கப் பெற்றன.

பண்டைக்கோயில்கள் மூங்கில், ஓலை, மரம், மண், செங்கல், சுண்ணும்பு முதலிய அழிவுப் பொருள்களால் அமைக்கப்பெற்றிருக்க வேண்டும். முதன்முதல் தென்னுட்டில் மலைக்குகைக் கோயில்களை (குடபோகக் கோயில்) அமைத்தவன் பல்லவ அரசனை மகேந்திர வர்மனுவான் (கி.பி. 600-625).தான் இப்புதுமுறைக் கோயிலை அமைத்ததால் தன்னை 'விசித்திர சித்தன்' என்ற புனை பெயர் புனைந்துகொண்டான். தென்னுர்க்காடு மாவட்டத்தில் விழுப்புரத்துக்கு அருகாமையிலுள்ள மண்டகப்பட்டு என்ற சிற்றூரில் அவனுல் குடையப்பட்ட ஒரு குகைக் கோயில் உள்ளது. அதில் உள்ள கல்வெட்டில் பிரமன், ஈசுவரன், விஷ்ணு, என்ற மூவர்களுக்கு, செங்கல், மரம், உலோகம், சுதா (சுண்ணும்பு) இல்லாமல்தான் ஒரு அரிய '**தேவ ஆயதனம்**' (கோயில்) அமைத்ததாகக் கூறுகிறுன். ஆகவே தென்னுட்டில் முதன் முதல் குகைக்கோயில்களை அமைத்தவன் இப்பல்லவ மன்னனே ஆவான்.

மகேந்திர வர்மனின் காலத்திற்கு நூறு ஆண்டுகளுக்குப் பிறகு (700-கி. பி) அவனுடைய வழித்தோன்றலான இரண்டாம் நரசிம்ம வர்மன் (ஆன இராசசிம்மன்) என்பவன் கற்றளிகளைக் (கற்கட்டிடக் கோயில்கள்—Stone Structural temples) கட்டி வைத்தான். அவைகளில் முக்கியமானவை மாமல்லபுரத்திலுள்ள கடற்கரைக் கோயிலும் (Shore Temple), காஞ்சிமாநகரிலுள்ள கைலாசநாதர் கோயிலும் ஆகும். எட்டாம் நூற்ருண்டு முதல், பதின்மூன்ரும் நூற்ருண்டு வரை, பல்லவ, சோழ, பாண்டிய மன்னர்கள் அரிய பல கோயில்களை எடுப்பித்துள்ளார்கள். அவைகளே தமிழ் மக்களின் கலைக்கும், பண்பாட்டிற்கும் சிரிய சான்ருகும்.

உருவெடுத்த எதுவும் அழிவது இயல்பு. காலப் போக்கினுல் பழைய கோயிலும் அழியும், புதியன புகும். நம் முன்னுேர்கள் பழைய கோயில்களைப் புதுப்பிக்கும் காலத்தில் முந்திய கோயில் அமைப்பை மாற்ருமல் புதிய கோயிலை அமைத்தனர்.

மேலும், கோயில், ஊர் இவைகளின் நிர்வாகத்தைத் **தல நிர்வாக சபையாரே** நடத்தி வந்தனர். இந்நிர்வாகக் குழுவினரைப் பொது மக்கள் **குடவோலை** முறைப்படி தேர்ந்தெடுத்தனர். இச்சபை, அல்லது இக்குழுவினரின் ஆணைப்படியே எல்லா அலுவல்களும் நடைபெற்றன. இவர்களுடைய தீர்மானங்கள் கோயில் கற்சுவர்களில் பொறிக்கப் பெற்றன. கோயில் புதுப்பிக்க வேண்டி யிருந்தால் இக்குழுவினரின் அனுமதி வேண்டும். ஒவ்வொரு முக்கிய கோயிலுக்கும் ஒரு '**ஸ்தபதி**' (கோயில் கட்டடக் கலைவல்லோன்) உண்டு. கோயிலைப் புதுப்பிக்கும் முன்பு ஸ்தபதியைக் கொண்டு அக்கோயிற் சுவர்களிலுள்ள **கல்வெட்டுக்**களைச் சரியான பிரதி(படி) எடுத்து ஒப்பம் பார்த்து இந்த நகலைக்கோயில் பண்டாரத்தில் (கருவூலம்) ஒடுக்கி வைப்பது வழக்கம். கோயிலைப் புதுப்பித்த பிறகு தகுந்த மேற்பார்வையோடு பழைய கல்வெட்டுக்களைப் புதிய கற்சுவர்களின் மீது பொறித்தனர்.

தென்னார்க்காடு மாவட்டம் திருவெண்ணெய் நல்லூரில் வைகுந்தப் பெருமாள் கோயில் உளது. இக்கோயில் விமானம் பிந்திய பல்லவ மன்னனான கோப்பெருஞ்சிங்கனின் 11-ஆம் ஆண்டில் (கி. பி. 1254-இல்) புதுப்பிக்கபபட்டது. அவ்வாண்டே பழைய கல்வெட்டுக்கள் புதிய கோயில் சுவர்களின் மீது பொறிக்கப் பெற்றன. அக்கல்வெட்டு வாசகம் பின் வருமாறு :

"இஸ்ரீ விமான மிழிச்சி எடுக்கிறபோது படியெடுத்த படிப்படி"

நம் முன்னோர்களின் மற்றொரு சீரிய முறை கவனிக்கத்தக்கது. கோயிலோ, மண்டபமோ, திருச்சுற்று மாளிகையோ எடுப்பித்தால் அப்பொழுதே அவைகளின் புதுக்குமைக்கும் (Repairs) முதல் உதவி வந்தனர். இதன் வட்டி (பலிசை)யைக்கொண்டு புதுப்பிப்பது வழக்கம். இம்முறைக்குப் **புதுக்குப் புறம்** என்று பெயர். ஒரு கல் வெட்டால் இதைவலி யுறுத்துவோம்.

செங்கற்பட்டு மாவட்டத்தில் மதுராந்தகம் தாலுகாவில் திருமுக்கூடல் என்ற ஊரில் வேங்கடேச விண்ணகரம் என்ற விஷ்ணுகோயில் உள்ளது. சோழ மன்னனான வீரராசேந்திரனின் ஆறும் ஆண்டில் பல நிபந்தங்களுக்கும், திருவிழாக்களுக்கும், திருப்பணிகளுக்கும், கல்லூரிக்கும், ஆதுலர்சாலைக்கும் (Hospital) ஓர் மாபெருந்தானம் செய்யப்பட்டது. இவைகளுக்கு உடலாக (உடல் — முதல் = Capital endowment) ஆண்டுதோறும் 3243 கலம் நெல்விளையக் கூடிய நிலங்களும், $216\frac{1}{2}$ காசும் உதவப்பட்டன. இவைகளில் **திருச்சுற்றுமாளிகைப் புதுக்குப்புறத்துக்கு** நெல் நாற்பதின் கலமும் **ஜனநாதன் மண்டபத்துக்குப் புதுக்குப்புறத்துக்கு** நெல்நாற்பதின் கலமும்"... ஒதுக்கப்பெற்றன.

ஆங்கில ஆட்சி காலத்தில் 'கர்ஸன் பிரபு' (Lord Curzon)தான் முதன்முதல் புராதனக் கட்டிடங்களையும், தொல்கலைப் பொருள்களையும் பாதுகாக்கச் சட்டம் வகுத்தவர் ஆவர். தொல்கலை இலாக்காவை அமைத்து, அவ்விலாக்காத் தலைவராக **'ஸர்-ஜான்மார்ஷல்'** என்பவரை நியமித்தார். இவர் பாதுகாப்பு முறையில் அதிகாரிகள் கையாள வேண்டிய பொதுவிதிகளை அறிவித்தார். கட்டிடங்கள், சிற்பங்கள் இவைகளின் பழைய அமைப்பையோ, உருவத்தையோ, மாற்றக் கூடாதென்று வற்புறுத்தினர்.

சீரிய முறையில் கோயில் கட்டிடங்களைப் புதுப்பித்த பெருமை உலாந்த நாட்டு (The Dutch)க் கலைஞர்களைச் சாரும். ஜாவா முதலிய கீழிந்தியத் தீவுகளில் பல இந்து, பௌத்த கோயில்கள் இருக்கின்றன. சென்ற நூற்றாண்டில் பல கோயில்கள் இடிந்தும், சீர்குலைந்த நிலையிலும் இருந்தன. உலாந்தக் கலைஞர்கள் புத்த ஸ்தூபியான 'போரோபூதூர்' என்ற மாபெரும் கலைக்கோயிலைப் பழுது பார்த்து பழைய பெருமையும், அமைப்பும் கெடாமல் திருத்தி அமைத்தனர். இந்து கோயில்களும் தக்க முறையில் நிர்மாணம் செய்யப்பட்டன. அரிய பெரிய கலை நூல்களும், அறிக்கைகளும் பிரசுரம் செய்யப்பட்டன. உலாந்தர்கள் கீழ் நாட்டுக் கலைகளுக்குச் செய்துள்ள தொண்டு போற்றற்பாலது.

இவ்வரிய முறையை பிரஞ்சுக் கலைஞர்களும் கர்ம்பேர்சம், சம்பா, முதலிய இந்தோ

நார்த்தாமலை—விஜயாலயசோழீஸ்வரம்

சீன நாடுகளிலும் கையாள முயன்றனர். 'பாந்தேஸ்ரீ' (Banteay Sri) என்ற ஒரு கோயில் சம்பந்தமாய் பிரஞ்சுக் கலைஞரான மர்ச்சல் (M. Marchal) கையாண்ட முறையைக் கூறுவோம். கோயில் மிகவும் சீர்குலைந்த நிலையில் இருந்தது. கோயில் சம்பந்தமான கற்கள் அடிவாரத்தில் குவிந்து கிடந்தன. நின்ற கட்டிடத்தின் சம்பந்தமாய் உருவப்படமும், புகைப்படமும் எடுக்கப்பட்டன. தனித்தனியாக கற்களின்மீது வரிசையாக எண்கள் பதிவு செய்யப்பட்டன. பிரித்த கற்களைத் தரைமீது பழைய உருவத்தைத் தழுவி ஒரு கட்டிடப் பகுதியாக அமைத்தார். இவ்விதம் எல்லாப் பகுதிகளையும் பிரித்து பிறகு சுண்ணம்பு செமண்டுமுதலிய பொருள்களின் உதவியால் அஸ்திவாரத்தைப் பலப்படுத்திக்கொண்டு கட்டிடத்தை ஒவ்வொரு நிலையாகப் பழைய அமைப்புப்படியே நிறுவினார். கட்டிடம் பழைய உருப்பெற்றது. புதிய பொலிவோடு திகழ்ந்தது.

நம் நாட்டில் இப்புதுக்கு முறையைக் கையாண்டுள்ள சில உதாரணங்களைக் கூறுவோம். முந்திய சோழர் காலக்கோயில்கள் (Early Chola Temples) சம்பந்தமாய்நான் ஆராய்ச்சி செய்த காலத்தில் அவைகள் பல புதுக்கோட்டை சமஸ்தானத்தில் கண்டேன். தஞ்சை விசையாலய வம்சத்துச் சோழர்களின் மிகப் புராதனக் கோயில் நார்த்தாமலை (நகரத்தார் மலை)யிலுள்ள விசையாலய சோளீச்சுவரம் ஆகும். இதற்கு முன்பாக உள்ள ஓர் பாறையில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டின் மூலம் இக்கோயிலின் பெயர் அறியக்கிடப்பதாலும், இதர சான்றுகளைக் கொண்டும் இக்கோயில்தான் விசையாலய சோழன் காலத்திய முக்கிய கோயில் என்று நிலை நாட்டினேன்.



மூவர் கோயில்—புதுப்பித்தபின்



கொடும்பை மூவர் கோயில்—புதுப்பிக்குமுன்

இக்கோயிலின் சிகரமும், சுற்றுக்கோயில்களும் சீர்குலைந்திருந்தன. அப்பொழுது புதுக்கோட்டை கண்காட்சிச்சாலைத் தலைவரும் என் நண்பருமான கே. வி. ராசு என்பவர் அதிகாரிகளின் அனுமதி பெற்று நல்ல முறையில் இக்கோயிலைப் புதுப்பித்தார்.

கொடும்பாளூர் என்றது மிகப் பழம் பெருமை பெற்ற ஊர். வேளிர் என்ற குறுநில மன்னர் இவ்வூரைத் தலை நகராகக் கொண்டு ஆண்டு வந்தனர். சோழர்களுக்கும், பாண்டியர்களுக்கும், இடையிலுள்ள பகுதியில் ஆண்டதால் இத்தலைவர்கள் செல்வாக்கும், பலமும் படைத்தவர்களாய் இருந்தனர். சோழ நாட்டின் தலை நகரான புகாருக்கும் (காவிரிப்பூம்பட்டினம்) பாண்டிய நாட்டுத்



கண்ணனூர் கோயில் விமானம்

தலை நகரான மதுரைக்கும் இடையிலுள்ள பெரு வழியில் புகழ்பெற்று விளங்கிய மாநகர் இது என்று சிலப்பதிகார நூலிலிருந்து அறிகிறோம். கண்ணகி இவ்வழியாகத்தான் மதுரை சென்றாள். இந்நகரைப் பெரிய புராணம் 'கோனாட்டுக்கொடி நகரம்' என்று கொண்டாடுகின்றது. இப்பெருமை வாய்ந்த குறுநில மன்னனின் தலை நகரில் 10-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பூதிவிக்கிரமகேசரி என்ற சிற்றரசன் தன் பேரிலும், தன் இரு மனைவிகளான கற்றளி, வரகுணை, என்ற இராணிகள் பேரிலும் மூன்று விமானங்களை அமைத்தான். இது கொடும்பை மூவர்கோயில் என்று புகழ்பெற்றது. மூன்று கோயில்களில் ஒன்று அழிந்துபோய்விட்டது. மற்றவை இரண்டும் அதே கதியை அடைந்திருக்கும். ஆனால் அவை சீரிய முறையில் புதுப்பிக்கப் பெற்று புத்துயிரும் பெற்றுத் திகழ்கின்றன.

மற்றொரு உதாரணம் கூறி முடிப்போம். புதுக்கோட்டைக்குத் தென் மேற்கே 23மைல் தூரத்தில் கண்ணனூர் என்ற ஓர் சிற்றூர் உளது. அதில் பாலசுப்பிரமணியக் கடவுளின் கோயில் உள்ளது. பலவிதத்தில் இக்கோயில் முக்கியமானது. இது ஒரு கற்றளி. ஜகதிப் படை முதல், ஸ்தூபிவரையில் கற்களால் கட்டப்பெற்றது. வட்டமான சிகரத்தை யுடையது. முருகனுடைய ஊர்தி சேவல். ஆனால் யானையும் அப்பெருமையைப் பெற்றுள்ளது என்று பரிபாடல், புறநானூறு, திருமுருகாற்றுப்படை, என்ற சங்க நூல்களால் அறிகிறோம். இக்கோயில் யானையை முருகனின் ஊர்தியாக உடைய பெருமை வாய்ந்தது. இக்கோயிலை ஆராயும் காலத்தில் கருப்பகிரகமும், அதற்கு அடுத்துள்ள அந்தராளமும்தான் பழைய கோயிலின் பாகங்கள் என்றும், அதனுடைய முகமண்டபம் பாண்டிய காலத்தைச் சேர்ந்ததென்றும் தெரிய வந்தது. சற்று ஊன்றிப் பார்த்தபொழுது பழைய பாகத்தின் வாசல் இரு மருங்கிலும் பழைய கல்வெட்டுக்கள் தென்பட்டன. அவை விசையாலயனின் மகனான ஆதித்தசோழனின் கல்வெட்டுக்கள். ஆகவே அக்கோயில் ஆதித்த சோழன் காலத்திய கற்கோயில் என்றும், அக்கோயில் பாண்டிய நாட்டின் பண்டைய எல்லையான தென் வெள்ளாற்றின் தென் பகுதியில் அமைந்துள்ளதால் அவன் மகனான பராந்தகன் (மதுரை கொண்ட பரகேசரி) காலத்திற்கு முன்னமேயே பாண்டிய நாட்டின் ஒரு பகுதியை ஆதித்த சோழன் வென்று சோழப் பேரரசை ஓங்க அடிகோலியவன் என்றும் அரிய செய்திகள் ஊகிக்க இடம் பெற்றது. இக்கோயிலின் சிகரக்கற்கள் ஆடியும், நழுவியும் நின்றன. சர்க்கார் ஆதரவு பெற்று இக்கோயில் நேர்முறையில் புதுப்பிக்கப் பெற்றுள்ளது போற்றத்தக்கது.

இதுகாறும் கூறியதிலிருந்து சீரிய புதுக்கு முறை அவசியமென்றும், அம்முறையையே கையாளுதல் கலைக்கும் நம் நாட்டின் பண்பாட்டிற்கும் ஏற்றது என்றும் எளிதில் அறியலாம். ஆகவே பண்டைக் கோயில்களைப் புதுப்பிக்கும் காலத்தில் இச்சீரிய முறையை நாம் கையாளுவோமாக.

நாதசுவர வகுப்பு, பழனி

2-11-58 காலை 10-30-மணிக்கு பழனியில் அறநிலையத்துறை அமைச்சர் கனம் எம். பக்தவத்சலம் அவர்கள் நாதசுவரப் பயிற்சி வகுப்பைத் தொடங்கி வைத்தார்கள். சென்னை அறநிலையத்துறை ஆணையாளர், துணை ஆணையாளர், உதவி ஆணையாளர், தேவஸ்தானக் குழுவினர் முதலியோர் வந்திருந்தனர். தேவஸ்தானக் குழுத்தலைவர், கோயில் அபிவிருத்திக்காக குழு செய்திருக்கும் வேலைகளைப்பற்றியும், நாதசுவரப் பயிற்சி வகுப்பு பழனியில் நடத்த வேண்டிய அவசியத்தைப்பற்றியும் எடுத்துச் சொன்னார். கனம் மந்திரி அவர்கள் வகுப்பைத் துவக்கி வைத்து, நாதசுவரக் கலையின் சிறப்பையும், ஆலயங்களில் நாள்தோறும் பூசை வேளைகளிலும், திருவிழாக்களிலும் வாசிக்க வேண்டிய நாதசுவர இராகங்களையும் பற்றியும் எடுத்துரைத்தார்கள். சென்னை மாநில பல மாவட்டங்களிலிருந்தும் 26 பேர்கள் நாதசுவரப் பயிற்சி வகுப்பிற்கு வந்தார்கள். சுவாமிமலை பயிற்சி வகுப்பை நடத்திய நாதசுவர வித்துவான் திரு. டி. என். சோமசுந்தரம் பிள்ளை அவர்கள் பழனியிலும் ஆசிரியராக இருந்து நடத்திவைக்கிறார்கள். நாதசுவர வித்துவான் இஞ்சிக்குடி திரு. பிச்சைக்கண்ணு அவர்கள் அன்று வந்திருந்ததுடன் தாம் அவ்வப்போது வந்து வகுப்பின் நடை முறைகளைக் கவனித்துக் கொள்வதாகவும் வாக்களித்தார்கள். கீழ்க்காணும் முறைப்படி வகுப்பில் பயிற்சி நடைபெறும்:—

அ. தினசரி பூஜாகாலங்களில் நாதசுரம் வாசிக்கும் முறைகள்

கால்சந்தி, உச்சிக்காலம் முதலிய பூஜா காலங்கள் நடக்கும்பொழுது அந்தக்காலங்கள் நடக்கும் நேரத்தை (மணியை) அனுசரித்த கீழே குறிப்பிட்டிருக்கும் இராகங்களையும், அந்த இராகங்களில் அமைந்த கீதம், வர்ணம், கீர்த்தனை முதலிய உருப்படிகளையும், காலபூஜை முடிவில், கற்பூர ஹாரத்தியின் போது தேவாரம், திருப்புகழ் முதலியவைகளையும் வாசிக்கவேண்டும். இரவு அர்த்தஜாம பூசையில் சுவாமி பள்ளியறைக்கு எழுந்தருளும்போது ஆனந்தபைரவி, நீலாம்பரி, கேதாரகௌளை, புன்னாகவராளி ராகங்கள் வாசிக்கவேண்டும். பள்ளியறை பூஜைக்கு பிறகு பள்ளியறை கதவு சாத்தியதும், பள்ளி அறைக்காக ஏற்பட்ட கதவடிப்பாட்டு வாசிக்க வேண்டும். [பாடுகிறவர்களும் பாடலாம்.]

தேவாலயங்களில் பூஜா காலங்களில் வாசிக்கவேண்டிய இராகங்கள்

1. காலை மணி 4 முதல் 6 வரை

பூபாளம்
பௌளி
மலயமாருதம்
வலசி
நாதநாமக்ரியை
மாயாமாளகௌளை

2. காலை மணி 6 முதல் 8 வரை

பிலஹரி
கேதாரம்
கௌளிபந்து
ஜகன்மோஹினி
சுத்ததன்யாசி

3. காலை மணி 8 முதல் 10 வரை

தன்யாசி
அஸாவேரி
சாவேரி
ஆரபி
தேவகாந்தாரி
தேவமனோகரி

4. காலை மணி 10 முதல் 12 வரை

சுருட்டி
ஸ்ரீராகம்
மத்தியமாவதி
மணிரங்கு
பிருந்தாவனசாரங்கா
தர்பார்

5. பகல் மணி 12 முதல் 2 வரை

சுத்தபங்காளா
பூர்ணசந்திரிகா
கோகிலதிலகம்
முகாரி
கௌடமல்லார்

6. பகல் மணி 2 முதல் 4 வரை

நாட்டைக்குறிஞ்சி
உசேனி
ரவிசந்திரிகா
வர்த்தனி
ஹம்சாநந்தி
மந்தாரி

7. மாலை மணி 4 முதல் 6 வரை

பூர்விகல்யாணி
பந்துவராளி
வசந்தா
லலிதா
சரஸ்வதி
சிலாங்கி
கல்யாணி

8. மாலை மணி 6 முதல் இரவு 8 வரை

சங்கராபரணம்
பைரவி
கரகரப்பிரியா
பைரவம்
நாராயணி
ஹம்சத்வனி
கௌளை

9. இரவு மணி 8 முதல் 10 வரை

காம்போதி
ஷண்முகப்ரியா
தோடி
நடபைரவி
ஹரிகாம்போதி
கமாஸ்
ரஞ்சனி

10. இரவு மணி 10 முதல் 12 வரை

சிம்மேந்திரமத்தியமம்
சாருகேஸி
கீரவாணி
ரீதிகௌளை
ஆனந்தபைரவி
நீலாம்பரி
யதுகுலகாம்போதி

11. இரவு மணி 12 முதல் 2 வரை

அடாணா
கேதாரகௌளை
பியாகடை
சாமா
வராளி
தர்மவதி

12. இரவு மணி 2 முதல் அதிகாலை மணி 4 வரை

ஹேமவதி
இந்தோளம்
கர்நாடக தேவகாந்தாரி
ரஸாவளி
பாகேஸ்வரி
மோஹனம்

ஆ. உத்சவ காலங்களில் வாசிக்கவேண்டிய முறைகள்

மண்டகப்படி தீபாராதனை :

தளிகை நைவேத்யம் எடுத்துவர தீபாராதனை சமயம்—மிஸ்ர மல்லாரி இராகம் தேவாரம், திருப்புகழ்

புறப்பாடு:

புறப்பாட்டிற்கு முன்—நாட்டை ராகம்

புறப்பாடு ஆனதும், யாகசாலை வரை—த்ருபுடை தாளமன்னியில் மற்ற தாளங்களில் மல்லாரிகள்,

யாகசாலை தீபாராதனை சமயம்—ஒத்து, நாதசுரம், மிருதங்கம் மாத்திரம்.

யாகசாலை முதல் கோபுரவாசல் வரை—த்ருபுடை தாள மல்லாரி.

கோபுரவாசல் முதல் தேரடிவரை—இதர மல்லாரிகளும் வர்ணமும்.

தேரடியிலிருந்து தெற்கு ரதவீதி பாதி வரை—ராகம்.

தெற்கு ரதவீதி பாதி முதல், மேல ரதவீதி பாதி வரை—ராகம் பல்லவி.

மேல ரதவீதி பாதி முதல் ஈசான்ய மூலை வரை—கீர்த்தனைகள்.

ஈசான்ய மூலை முதல் தேரடி வரை—தேவாரம், திருப்புகழ்.

தேரடி முதல் கோயில் பிராகாரம் வரை—நட்டுமுட்டு, சின்னமேளம் (அல்லது முகவீணை)

கோயிலுக்குள்—துரிதகால த்ரிபுடை தாள மல்லாரி.

தட்டு சுற்று சமயம்—தேவாரம், திருப்புகழ்.

யதாஸ்தானத்திற்கு எழுந்தருளும்போது—எச்சரிக்கை.

இ. உத்ஸவ த்வஜ ஆரோகண திக்பந்தனத்தன்றும், அவரோகண திக்விஸர்ஜனத்தன்றும், நவஸந்திகளில் வாசிக்க வேண்டிய இராகங்கள் விபரம்

சந்திகளின் பெயர்.	இராகம்.
பிரும்மசந்தி, மத்தி	பைரவி
இந்திரசந்தி, கிழக்கு	குர்ஜரீ
அக்னிசந்தி, தென்கிழக்கு	நாட்டை
இமயசந்தி, தெற்கு	தசாக்ஷரீ
நிருதிசந்தி, தென்மேற்கு	குண்டக்ரிய
வருணசந்தி, மேற்கு	வராளி
வாயுசந்தி, வடமேற்கு	வேளாவளி
குபேரசந்தி, வடக்கு	ராமகலீ
ஈசானசந்தி, வடகிழக்கு	பிலஹரி

குறிப்பு:—வைஷ்ணவ ஆலயங்களில், தேவாரம், திருப்புகழ் இவைகளுக்குப் பதிலாக, அஷ்டபதி, திருப்பாவை முதலியன வாசிக்கலாம்.

ஒப்பிலியப்பன் சந்நிதியில் யாத்ரீகர் விடுதி

கால்கோள் விழா

ஒப்பிலியப்பன் கோவில் ஸ்ரீ வெங்கடாசலபதி சுவாமி தேவஸ்தானத் தாரால் சுமார் ரூ. 20,000 செலவில் கட்டப்படவிருக்கும் **யாத்ரீகர் விடுதி கால்கோள் விழா** சென்னை மாநில அறநிலையப் பாதுகாப்பு இலாக்கா கமிஷனர் ஸ்ரீ A. உத்தண்டராம பிள்ளை B. A., B. L., I. A. S., அவர்களால் 16—11—58 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நடத்தி வைக்கப்பட்டது.

கல் வெட்டுக்கள்

இந்தியக் கல் வெட்டு இலாக்காவினர் மதுரை ஜில்லா மேலூர் தாலுக்கா திருவாதவூர் திருமறை நாதசுவாமி கோயிலின் இரண்டாவது பிரகாரத்தின் வடக்குச் சுவரிலிருந்து கீழ்க்காணும் தமிழ்க் கல்வெட்டுக்களுக்கு நகல் எடுத்திருக்கின்றனர்.

பாண்டியன் கோனேரின்மை கொண்டான் —நிலதானம்

பாண்டியன் திரிபுவனச் சக்கரவர்த்தி, சுந்தரபாண்டியன்—(சிதைந்துபோய்விட்டன)

ஜடாவர்மன் பராக்கிரம பாண்டியன் —நந்தவனம், குளம் விடப்பட்டது.

விநாயகப் பிரபாவம்*

[திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள்]

உலகத்திலுள்ள மக்களனைவரும் உயர்வையே விரும்புகிறார்கள். மக்களின் உயர்வு அவர்கள் ஊக்கத்தின் அளவினதாகும். "வெள்ளத்தனைய மலர் நீட்டம் மாந்தர்தம் உள்ளத் தனைய துயர்வு" என்ற திருக்குறளை நோக்குக. எடுத்துக் காட்டுவமையணி வாயிலாகத் திருவள்ளுவர் ஊக்கமே உயர்வுக்குக் காரணம் என்பதை இனிது விளக்குகிறார். ஊக்கமுடன் முயற்சிப்போரைத் தடை செய்து அவர்கள் மனதைக் கலங்கவைப்பது இடுக்கண். இவ்விடுக்கண் தெய்வத்தால், பொருளின்மையால், மெய் வருத்தத்தால் வருதல் கூடும். "வெள்ளத்தனைய இடும்பை அறிவுடையான் உள்ளத்தின் உள்ளக்கெடும்" என்ற குறட்குப் பரிமேலழகர் உரை கூறுமிடத்துத் "தன் உள்ளத்தான் ஒன்றனை நினைக்க அத்துணையானே கெடும்" என்று குறிக்கிறார். எவ்வொன்றனை நினைக்க அதன் துணையால் இடும்பை கெடும்? அவ்வொன்றே விக்நேஸ்வரர் என்ற விநாயகர். 'பிடியதனுருவுமை கொள மிகு கரியது வடிகொடு தனதடி வழிபடு மவர் இடர்கடி கணபதி" என்று திருஞான சம்பந்தரும் "என்னை நினைந்தடிமை கொண்டென் இடர் கெடுத்துத் தன்னை நினையத் தருகின்றான்...அத்தி முகத்தான்" என்று நம்பியாண்டார் நம்பிகளும் பிறரும் திருமுறைகளுட் கூறுவனவற்றை நோக்குக.

இனி விநாயகர் என்ற சொல்லின் பொருளைச் சிறிது கவனிப்போம். வி+நாயகர்= நாயகனில்லாதவன் (விமலன்=மலமில்லாதவன் என்பதைப்போல). அதாவது தம்மை நடத்துபவரில்லாதவர், சுதந்திரர். ஈண்டு கடவுட்டன்மைகள் எட்டனுள் ஒன்றாகிய தன்வயத்தனாதல் வலியுறுத்தப் படுதலை நோக்குக. விநாயகருடைய அஷ்டோத்தர சஹஸ்ர நாமங்களுள் ஒன்று "ஓம் அநீஸ்வராய நம" என்பது. இதன் பொருள் தன்னை நடத்தும் ஈசுவரன் அல்லது நாயகன் இல்லாதவன் என்பதாகும். மேலும் "முதாகராத்த மோதகம் சதாவி முக்திதாயகம் கலாதராவதம்ஸகம் விலாச லோக ரக்ஷகம் அநாயகைக நாயகம் விநாசி தேபதைத் யகம் நதாசுபாசு நாசகம் நமாமிதம் விநாயகம்" என்ற சுலோகத்தில் அநாயகைக நாயகம் என்ற தொடரை ஆராய்க. அநாயக+ஏக+நாயகம் என்ற பதங்களாக இத்தொடர் பிரிகின்றது. அதாவது தமக்கு ஒரு நாயகன் இல்லாத அநாயக நிலையிலும் தாமே எல்லா நாயகர்கட்கும் நாயகராகிய விநாயகர் என்று இத்தொடர் பொருள் தருகின்றது. வி+நாயகர்=விசேஷமான, எல்லோருக்கும் மேலான நாயகர் என்றும் பொருளுண்டு. இவ்விரு பொருளும் முடிவில் ஒரு கடவுளையே குறித்தலை நோக்குக.

சிவஞான சுவாமிகள் கலைசைச் செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத் தமிழில் இவ்வுண்மையை அழகாகக் கூறுகிறார்.

"ஏர் கொண்ட தன்னைத் தளைப்பவரும்
ஊருநரும் இலரென்பதுலகு தேறற்கு-எடுத்த
வெம் பாசமோ டங்குசந்தன் கரத்தேந்தி மத
தாரை சிதறிப், பார்கொண்ட எண் திசைத்
தறுகட் களிற்றுடல் பனிப்பச் செவிக்கா
லெழீஇ-பகிரண்ட முற்றும் புகுந்துலாய்க்
கலைசையிற் பதியுமோர் களிறு".

இப்பாடலில் விநாயகர் கையிலுள்ள பாசம் அங்குசம் ஆகிய இரண்டும் குறிக்கும் உண்மை அழகாக விளக்கப்படுகிறது. பாசமும் அங்குசமும் யானைப்பாகன் கையிலிருப்

---

* கோவூர் ஸ்ரீ சுந்தரேசுவரர் ஆலயத்தில் நடந்த பிரஹ்மோத்ஸவத்தில் முதல் நாள் (22-5-'39-ல்) நிகழ்ந்த உபந்நியாசத்தின் சுருக்கம். திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் குறிப்பெடுத்து எழுதியது.

பவை. ஆனால் இங்கு யானையிடம் உள்ளன. எனவே இந்த யானையை அடக்கும் பாகர் (அல்லது நடத்தும் நாயகர்) இல்லை, இந்த யானை நாயகனில்லாத விநாயக யானை. பாசமும் அங்குசமும் பாகனிடத்துள்ளவை, இங்கு விநாயகரிடமுண்மையால் இவர் ஒரு பாகராகின்றார். இவர் நடத்தும் யானைகள் யாவை. உயிர்களாகிய யானைகளை நடத்துகிறார். இக்கருத்தை மிக அழகாக,

"மும்மை மலமா மத முற்றுப்போத
முழுத்தறியற வீசி
முகிழ்த்தலர் அன்பின் சங்கிலியுதறி
முதிர்ந்த அருட்கூடத்
திம்மென நீங்கி வெளிக்கொடு
புவன மெனுங்கடு வனமோடி
எப்பாகர்க்கு மடங்கலவாகி
யியங்கும் உயிர்க்கரிகள்
தம்மை விடாது தொடர்ந்து
பிணிப்பத் தரும் அங்குசபாசம்
தாங்குதல் கண்டும்"

என்று ஷை பிள்ளைத் தமிழில் மற்றொரு பாடல் கூறுவதை நோக்குக.

சாதாரண வழக்கத்தில் பெண் தன் கணவனை நாயகன் என்கிறாள், வேலைக்காரன் எஜமானனை நாயகன் என்கிறான், வன்னிய குலத்தவர்கள் நாயகர் என்றே பட்டப்பெயர் வைத்துள்ளார்கள். இவ்வாறு கூறப்படுவோரெல்லாரும் உடல் பற்றிய நாயகம் செலுத்துபவர்களே யாவர். உயிரைச் செலுத்தும் நாயகம் விநாயகருக்கே உரியது. ஒரு பாகன் யானையை மேடுபள்ளம் தவிர்த்துச் சம பூமியில் நடத்துவான். அஃதே போல் விநாயகரும் உயிர்க்கரிகளை, மேடாகிய விருப்பம் பள்ளமாகிய வெறுப்பு என்பவற்றைத் தவிர்த்துச் சமபூமியாகிய இருவினை யொப்பின் வழிநடத்துகிறார்.

இத்தகைய நாயகரை நாம் அறிந்து கொள்ள வேண்டாமா? "தம்மானை யறியாத சாதியாருளரே" என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் கூறுவதை மறக்கலாமா? விநாயகருடைய பெருமைகளைப் பல உபநிடதங்கள் விரிவாகக் கூறுகின்றன. கணபதி உபநிஷத்தில் "த்வம் ஆநந்தம யः த்வம் ப்ரஹ்மமய: த்வம் சச்சிதாநந்த அத்விதீயோஸி" என்றும் "த்வம் குணத்ரயாதீத:, த்வம் தேஹத்ரயாதீத:, த்வம் காலத்ரயாதீத:" என்றும், "சர்வம் ஜகத் இதம் த்வத்தோ ஜாயதே, சர்வம் ஜகத் இதம் த்வத் தஸ்திஷ்டதி, சர்வம் ஜகத் இதம் த்வயிலய மேஷ்யதி" என்றும் கூறப்பட்டுள்ளன. இவற்றின் பொருள் சுருக்கமாகக் கீழ் வருமாறு:—விநாயகர் ஆநந்த மயமாயிருப்பவர், பெருமையுடையவர், சச்சிதாநந்த ஸ்வரூபி, குணங்கடந்தவர், தேகங் கடந்தவர், காலங் கடந்தவர், முத்தொழில் நடத்துபவர் என்பதாம். இப்பெருங் கடவுளை வழிபடுமாறு இவ்வுப நிடதம் இறுதியில் "யஏவம் வேதா மஹாவிக் நாத் பிரமுச் சதே மஹா தோஷாத் பிரமுச்சதே சர்வ வித்பவதி சர்வ வித்பவதி" என்று கூறுகிறது.

விநாயகரைப் பிரணவ ஸ்வரூபி என்று கூறுவது அனைவரும் அறிந்த தொன்று. "ஓம் ப்ரண வானன தேவாயநம:" என்ற மந்திரம் அவர் நாமாவளியிலிருப்பதை யறிக.

ஓம் என்ற பிரணவம் தமிழ் நாட்டில் பிள்ளையார் சுழியாக மாறிச் சுருங்கிப் பழைய வழக்கில் சாசனங்கள் முதலியவற்றின் முதலிலும் இறுதியிலும் எழுதப் பெற்றது. பழைய காலத்தில் வேதம் ஓதுவோர் ஓம் என்றே தொடங்குவர். இக்காலத்தில் ஹரி ஓம் என்கின்றனர். பதினோராந் திருமுறையில் மூத்த பிள்ளையார் திருமும்மணிக்கோவையுள் (அ-வது பாட்டில்) அதிராவடிகள் "மொழியின் மறை முதலே... எங்கள் கணபதியே" என்று கூறுவதை மறத்தலாகாது. பிரணவத்துக்கு வரிவடிவமும் ஒலி வடிவமும் உண்டு. வரி வடிவம் விநாயகர் உருவத்திலும் ஒலி வடிவம் அவருடைய ஆற்றலிலும் திகழ்கின்றன. ஓம் என்பது சமஷ்டிப் பிரணவம், அகார உகார மகாரங்களாகப் பிரித்தறிவது வியஷ்டிப் பிரணவம். அ+உ=ஓ என்பது வட மொழியிற் குணசந்தி யெனப்படும். (பாத+உதகம் = பாதோதகம் என்புழிப் போல), ப்ர+நவ=ப்ரணவ(=என்றும் புதியது) என்று வடமொழியிற் புணரும். பிரணவ சப்தம் "முன்னைப் பழம் பொருட்கு முன்னைப் பழம் பொருளே பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனே" என்ற திருவெம்பாவை வாக்கியத்தின் கருத்தை நினைவூட்டுகிறது. "ஓம் இத்யேகாக்ஷரே மந்த்ரஸ்தித:

ஸர்வகத சிவ:'', ''ஓம் இத்யேகாக்ஷரம் ப்ரஹ்ம வஸந்தே யோகின: பிரணவம் சர்வ வர் நானும் ஜீவபீஜ முதாஹ்ருதம்'', ஓம் ''நமோ ஹம்பதார்த்தாய சர்வவேதா யத்பத மாமநந்தி தபாம்ஸி சர்வாணிச யத்வதந்தி யதிச்சந்தோ பிரஹ்மசரியம் சரந்தி தத்தே பதம் சங்க்ரஹேண ப்ரிவீமி ஓம் இத்யேதத்'', ''ஹரஸ்ஸர்வஸ்ய ஹரணாத் விபுத்வாத் விஷ்ணுருச்யதே பகவான் சர்வ விக்னநாத் அவநாதோமிதிச்ம்ருத:'' என்ற வேதாகம வாக்யங்கள் பிரணவத்தை ஒரு சிறிது விளக்குவன.

விநாயகருக்குப் பிரணவமேயன்றி விநாயக காயத்ரி என்ற மந்திரமுமுண்டு. பதினாறு வகை மூர்த்தங்கள் விநாயகருக்குண்டு. கலியாணமாகாத ஒருவனைப் பார்த்து நம்மவர் ''விநாயகருக்குப் பெண் பேசி முடித்தால் இவனுக்கும் முடியும்'' என்று கேலி செய்கின்றனர். இது பெரும் பாவம். விநாயகருக்கு சித்தி, புத்தி, வல்லபை என்ற மூன்று சக்திகள் உண்டு. பல ஆலயங்களில் தேவிமார்களுடன் விநாயகர் காட்சி யளிக்கிறார்.

விநாயகருடைய உருவத் திருமேனியை உற்று நோக்கினால் பல அரிய உண்மைகள் புலனாகும். அவர் ஆணுமல்லர், பெண்ணுமல்லர், அலியுமல்லர். தலை யானைத்தலை, உடல் தேவ வுடல், கால் பூதக்கால், ஒற்றைக் கொம்பு முதலிய உறுப்புக்கள் உணர்த்தும் உண்மையை மிக அழகாகச் சிவஞானசுவாமிகள் அமுதாம்பிகை பிள்ளைத் தமிழ் காப்புச் செய்யுளில்,

''மணிகொண்ட கோடொரு
மருங்குண்மையாற் பெண்மைவடி
வென்றுமஃ தின்மை யோர்
மருங்குண் மையாலாண்
மைவடிவென் றுமீதுகீழ்
மாறியதிருக் காட்சியால்
அணிகொண்ட உயர்திணையதென்று
மஃறிணை யென்றும்
யார்க்கும் கிளக்க அரிதாம்
ஐங்கரச் சிந்துரத்தின்
கழற்செஞ் சரணம்
அஞ்சலித்துத் துதிப்பாம்''

என்று விவரித்தலைக் கண்டு மகிழ்க.

யானைக்குக் கன்னத்தில் மதஜலம் கசிவது வழக்கம். அஃதேபோல் விநாயகருக்கும் கன்னத்தில் மதம் பொழிகின்றது. என்ன மதம்? வலப்பக்கம அறக்கருணையும் இடப்பக்கம் மறக்கருணையுமாகிய மதங்கள். ''கருணையென்னும் வெள்ள மதம் பொழி சித்தி வேழத்தை நினைந்து வருவினைகள் தீர்ப்பாம்'' என்று பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணத்துட் கூறுவதையும் ''மதப்பேர் பெற்ற அருள்'' என்று செந்தில் நிரோட்டக யமக அந்தாதி காப்புச் செய்யுள் கூறுவதையும் நோக்குக.

விநாயகருக்குள்ள பல பெயர்களுள் தமிழ் நாட்டில் தாழ்ந்த அறிவுடைய மக்களுக்கும் தெரிந்தது **பிள்ளையார்** என்பது. முதலியார், செட்டியார், சாஸ்திரியார் என்ற சாதிப் பெயர்களுள் வரும் ஆர் விகுதி பிள்ளைமார் என்றவிடத்துக் காணப்படுவதில்லை. பிள்ளையார் என்ற சொல் பிள்ளைமாரைக் குறிக்காது விநாயகரையே குறிக்கும். முருகன் வீரபத்திரன், விநாயகன் ஆகிய மூவரும் சிவ குமாரர்களாயினும் பிள்ளையார் என்ற சொல் விநாயகரையே குறிக்கும். பிள்ளையார் கோயில் என்றால் விநாயகர் கோயில் என்று பொருள் படுமே தவிர முருகன் கோயில் வீரபத்திரன் கோயில் என்று பொருள் படுவதில்லை. இதிலிருந்து விநாயகரே சிறந்த பிள்ளையாகக் கருதப்படுதல் விளங்கும். இதற்குத் தகுந்த காரணமு முண்டு. சிறந்த பிள்ளை தாய் தந்தையரை வணங்கும், வழிபடும். அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம். குருவும் கடவுளும் பின்னறி தெய்வங்களே. பிள்ளையாருக்கு ஐந்து கைகளுண்டு. துதிக்கையில் குடங்கொண்டு நீர் திரட்டித் தமது அம்மையப்பரைப் பூசிக்கிறார். சதுர்புஜங்களுள் பின்னுள்ள இரண்டினில் உயிர்களாகிய நமக்காகப் பாசாங்குசங்களை வைத்துள்ளார். முன் கைகளுள் வலதுகையில் ஒடித்த கொம்புகொண்டு கயமுகாசுரனைக் கொன்று தேவர்களைக் காப்பாற்றுகிறார். இடதுகையில் மோதகம் தமக்கென வைத்திருக்கிறார். எனவே ஐந்து கைகளுள் தமக்கொன்று, தேவர்க்கொன்று, தாய் தந்தையர்க்கொன்று, நமக்கென்றிரண்டு உபயோகிக்கிறார். இவ்வுண்மையை அழகாகக் கச்சியப்ப முனிவர் தணிகைப் புராணத்துள்,

"பண்ணியம் ஏந்தும் கரம் தனக் காக்கிப் பானிலா மருப்பமர் திருக்கை, விண்ணவர்க்காக்கி யரதனக்கலச வியன் கரம் தந்தை தாய்க்காக்கிக், கண்ணி லாணவ வெங்கரி பிணித்தடக்கிக் கரிசி னேற் கிருகையுமாக்கும், அண்ணலைத் தணிகை வரைவளர் ஆபத் சகாயனை அகந்தழீ இக்களிப்பாம்"

என்று கூறுகிறார்.

தமக்கும் தாய் தந்தையர்க்கும் தேவர்க் கும் ஒவ்வொரு கையையும் நமக்கு மட்டும் இரண்டு கைகளையும் உபயோகிக்கும் விநாய கர் நமக்கு வேண்டுவன வெல்லாம் தருவார். நமக்கு வேண்டுவன இவையென்பதை நாமறி யோம். நாம் விரும்புவனவற்றையே வேண்டு கிறோம். இது தவறு. நமது பக்குவமறிந்து வேண்டுவனவற்றை நாம் கேளாமலே அவர் தருவார். "கூடும் அன்பினிற் கும்பிடலே யன்றி வீடும் வேண்டா விறலின் விளங் கினர்" என்ற திருவாக்கின்படி வழிபா டொன்றே நமக்குரியது. பிள்ளையார் பூசை நாடோறும் செய்து வழி படுவோரிடத்திலே இலக்குமி என்று மிருப்பாள்.

"நல்லார் பழிப்பில்...விநாயகனே
என்று மெய்ம்மகிழ
வல்லார் மனத்தன்றி மாட்டாள்
இருக்க மலர்த்திருவே"

என்று கபிலதேவ நாயனார் மூத்த நாயனார் திரு விரட்டை மணிமாலை இறுதிச் செய்யு ளுட் கூறுவதை என்றும் ஞாபகத்து வைக்கவும்.

நமக்குள்ள ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களையும் விநாயகரே போக்கு வார். விநாயகரை வழிபடும் அன்பர்களை ஆணவமலம் துன்புறுத்த எண்ணுவது நெருப்பைக் கடித்துத் துன்புறுத்த எறும்பு எண்ணுவதற்குச் சமானம் என்று நம்பி யாண்டார் நம்பிகள் உவமைச் சுவை மலியக் கூறுகிறார்.

"மருப்பை யொருகைக் கொண்டு நாரை யூர் மன்னும் பொருப்பை யடிபோற்றத் துணிந்தால்—நெருப்பை அருந்த எண்ணு கின்ற எறும்பன்றே அவரை வருந்த எண்ணு கின்ற மலம்"

அவ்வாறே கன்ம மலமும் நசிக்கும் செய் தியைக் கபிலதேவ நாயனார்,

"கணங்கொண்ட வல்வினைகள் கண் கொண்ட நெற்றிப் பணங்கொண்ட பாந்தட் சடைமேல்-மணங்கொண்ட தாதகத்த தேன் முரலுங் கொன்றையான் தந்தளித்த போத கத்தின் தாள்பணியப் போம்"

என்று கூறுகிறார்.

மாயாமலம் அகல்வதை அதிராவடிகள் "மணிசிந்து கங்கைதன் மாணக்குருளையை... பிடித்தோர்க்கில்லை பேதுறலே" என்று கூறு கிறார். ஔவையார் அகவலுள் "மாயாப் பிறவி மயக்கம் அறுத்து" என்பதும் நினை தற்பாலது.

விநாயகருடைய நிறம் சிவப்பு. சில கோயில்களில் சிவப்புப்பொடி பூசிய விநாயக உருவங்களைக் காணலாம். சிவப்பு வஸ்திரம் சிவப்பு புட்பங்கள் முதலியன விநாயகருக்குப் பிரீதியானவை என்று நூல்கள் கூறுகின் றன. விநாயகருக்குரிய நைவேத்திய வகை களை அருணகிரிநாதர் "இக்கவரை நற்கனி கள் சர்க்கரை பருப்புடன் நெய் எள் பொரி யவல் துவரை இளநீர் வண்டெச்சில் பயறப்ப வகை பச்சரிசி பிட்டு வெளரிப்பழம் இடிப்பல் வகை தனிமூலம் மிக்கஅடி சிற்கடலை பக்ஷ ணம்" என்றும், "முப்பழம் அப்பமும் நிகழ் பால் தேன் நெடியவளை முறி இக்கொடு லட்டு கம் நிரவில் அரிசி பருப்பவல் எள்பொரி நிக ரில் இனி கதலிக்கனி வர்க்கமும் இளநீரும்" என்றும் கூறுகிறார். விநாயக சதுர்த்தி முத லிய சிறந்த நாட்களில் ஆயிரம் மோதகம் நிவேதனம் செய்வது சிறந்ததென நூல்கள் கூறுகின்றன.

விநாயகர் குருவாக வந்து உபதேசம் செய்து அருள் புரிவதை ஔவையார்,

"குருவடிவாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளி"

என்று கூறுகிறார். முத்தி தருவதையும் "இருத்தி முத்தி இனிதெனக் கருளி" என்று குறிக்கிறார். ஔவையாரைத் தும்பிக்கையாற் றூக்கித் திருக்கோவலூரிலிருந்து விண்ணுல கிற் சேர்ப்பித்த விநாயகர் உதவியும் மறத் தற் பாலதன்று. நாமும் விநாயகரை வழி பட்டு மேல் நெறி சேருவோமாக.

—சித்தாந்தம்.

குறிப்பு:—விஷ்வக்சேனரைப் பற்றிய கட் டுரை அடுத்த இதழில் வரும்.

சிவாகம சித்தாந்த பாடப் பயிற்சி வகுப்பு

திருவெண்காடு

30—10—57-ல் பேட்டை வாய்த்தலையில் மதுரை திருஞான சம்பந்தர் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் அவர்களின் தலைமையில் திருச்சிராப்பள்ளி அறநிலைய உதவி ஆணையர் திரு. ஜனார்த்தனம் அவர்களால் சிவாகம சித்தாந்தப் பயிற்சி வகுப்பு தொடங்கப்பட்டது. . 60 பேர்கள் வகுப்பில் சேர்ந்து பயின்றார்கள். திருவாடானை திரு. M. ஐயாமணிக் குருக்கள் அவர்களைத் தலைமையாகக் கொண்ட ஆசிரியக்குழு வகுப்புக்களை நடத்தினார்கள். பல அறிஞர் பெருமக்களும் சிறப்புச் சொற்பொழிவு நடத்தினார்கள். 8—12—57-ல் வகுப்பு முடிந்தது. பயின்றவர் அனைவருக்கும் பரீட்சை வைக்கப்பட்டது. விடைத்தாள்களை திருவாளர்கள் V. விருத்தகிரீசன் M. A., M. Litt. L. T., வித்துவான் இராம கோவிந்தசாமிப் பிள்ளை, வித்துவான் அல்லூர் விசுவநாத சிவாச்சாரியார் இவர்கள் பரிசோதித்து உதவினார்கள். 8-12-57-ல் அறநிலையப் பாதுகாப்புத் துறை ஆணையர் திரு. A. உத்தண்டராமன் I. A. S. அவர்களால் தேர்ச்சி பெற்றவர்களுக்குத் தகுதிப் பத்திரம் வழங்கப்பட்டது.

பேட்டை வாய்த்தலையில் நடந்த வகுப்பில் பயிற்சிபெற முடியாமற் போன பலர் இன்னும் ஒரு வகுப்பு நடத்தவேண்டுமென்று தெரிவித்தனர். அதற்கிணங்க திருவெண்காடு தேவஸ்தான ஆதரவில் மற்றொரு வகுப்பு நடத்த ஏற்பாடாயிற்று. 28-3-58-ல் திருவெண்காட்டில் அறநிலையப் பாதுகாப்புத் துறை ஆணையர் திரு. A. உத்தண்டராமன் அவர்களால் சிவாகம சித்தாந்தப் பயிற்சி வகுப்பு தொடங்கி வைக்கப்பட்டது. 59 குருக்கள்மார் வகுப்பில் சேர்ந்து பயின்றனர். திரு. ஐயாமணிக் குருக்களும், அவருக்கு உதவியாக சாக்கோட்டை பைரவ குருக்களும் ஆசிரியர்களாக இருந்து வகுப்பை நடத்தினார்கள். நாள்தோறும் தல ஓதுவா மூர்த்திகள் திரு. சுப்பிரமணிய முதலியார் அவர்களால் தேவாரத் திருமுறைப் பயிற்சியும் செய்து வைக்கப்பட்டது. நாகர் கோயில் திரு. ஆறுமுக நாவலர் அவர்கள் சிறப்புச் சொற்பொழிவுகள் செய்தார்கள். 30—5—58-ல் வகுப்பு முடிவடைந்தது. பரீட்சை நடத்தித் தேர்வுத் தாள்களை திரு. V. விருத்தகிரீசன் M.A., M. Litt. L.T., பரிசோதித்து உதவினார்கள். அன்று அறநிலையப் பாதுகாப்புத் துறை ஆணையர் திரு. A. உத்தண்டராமன் I. A. S. அவர்களால் தேர்ச்சி பெற்றவர்களுக்கு தகுதிப் பத்திரம் வழங்கப்பட்டது.

பேட்டை வாய்த்தலை, திருவெண்காடு இந்த இரண்டு இடங்களிலும் வகுப்புக்கள் சிறப்பாக நடைபெறுவதற்கு ஏற்பாடுகள் செய்த அங்குள்ள இரு ஆலய தருமகர்த்தர்களின் முயற்சி பெரிதும் போற்றத்தக்கது.

பாஞ்சராத்திர ஆகமப் பயிற்சி

திருவரங்கம்

திருவரங்கத்தில் 16—7—58 பாஞ்சராத்திர ஆகமப் பயிற்சி வகுப்பு அறநிலையப் பாதுகாப்புத் துறை ஆணையர் திரு A. உத்தண்டராமன் I. A. S. அவர்கள் தொடங்கி வைத்தார்கள். 39 பட்டர்கள் பயிற்சி வகுப்பில் சேர்ந்தார்கள். 30—8—58-ல் வகுப்பு முடிந்தது. பரீட்சை நடத்தியதில் முதல் வகுப்பில் 12 பேர்களும், இரண்டாவது வகுப்பில் 14 பேர்களும், மூன்றாம் வகுப்பில் 13 பேர்களும் தேர்வு பெற்றார்கள். புதுக்கோட்டை அரசினர் பயிற்சிக் கல்லூரிப் பேராசிரியர் திரு. V. விருத்தகிரீசன் M. A., M. Litt. L. T., விடைத் தாள்களைப் பரிசோதித்து உதவினார்கள். 26—7—58-ல் திருவரங்கப் பெருமாளைச் சேவிக்க வந்த மாநில கவர்னர் அவர்களும் வகுப்பைப் பார்வையிட்டு மகிழ்ச்சி தெரிவித்தார்கள். 30—8—58-ல் அறநிலைய அமைச்சர் கனம். M. பக்தவத்சலம் அவர்கள் தேர்ச்சி பெற்றவர்களுக்கு தகுதிப் பத்திரங்களை வழங்கினார்கள். தேர்வில் முதலிடம் இரண்டாமிடம் பெற்ற திரு. N. அரங்கராஜ பட்டர், திரு. C. இராமசாமி பட்டர் இவர்களுக்காக மன்னார்குடி திரு A. சீனிவாசய்யங்கார் அவர்கள் ரூ 100 நன்கொடை வழங்கினார்கள். பயிற்சி வகுப்பை ஆசிரியர்களாக இருந்து நடத்திய திரு. R. இராகவபட்டர், திரு. விசுவநாத குருக்கள் இவர்களுக்கும் தென் இந்திய அர்ச்சக சங்கத்தாரால் உதவப்பட்ட இரண்டு பதக்கங்கள் வழங்கப்பட்டன.

கந்தர் சஷ்டி

நம்நாட்டில் மக்கள் பற்பல விரதங்களை மேற்கொள்ளுகின்றனர். அவைகளுள் சைவர்கள் முக்கியமாக அனுஷ்டிப்பவை விநாயக சதுர்த்தி, நவராத்திரி (சரஸ்வதி பூஜை), கந்த சஷ்டி, சிவராத்திரி என்பன. இவை முறையே கணபதி, அம்பிகை, முருகன், சிவபெருமான் குறித்து செய்யப்படுபவை. இந்த விரதங்களை முன்னிட்டு சிவாலயங்களில் திருவிழாக்கள் நடைபெறுகின்றன.

முருகப்பெருமானுக்குரிய விரதங்களை மூன்று வகையாக அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. அவை வார விரதம், நட்சத்திர விரதம், திதி விரதம் என்பன. சம்பந்தசரணாலய சுவாமிகள்,

“ வெள்ளியெ னுந்தின மாரல
தன்றியும் வென்றி யுறுந்துலையா
மொள்ளிய திங்களி லிந்து
வளர்ந்திட வோங்குமுன் வைகன்முறு
வெள்ளரி தாமறு நாளு
மெழ்ற்பர சேந்திய வேந்தறரும்
வள்ளன் மகிழ்ந்தருள் விரத
மெனப்புகழ் மாதவ ஞேதியரோ ”

என்று கந்தபுராணச் சுருக்கம் என்ற நூலில் கூறியுள்ளார். ஒவ்வொரு வாரத்திலும் வரும் வெள்ளிக்கிழமையன்று முருகப்பெருமானை வழிபட்டு விரதமிருப்பது வாரவிரதம். ஒவ்வொரு மாதத்திலும் வருகிற கார்த்திகை நட்சத்திரத்தன்று அனுஷ்டிப்பது நட்சத்திர விரதம். திதி விரதமாவது ஐப்பசி மாதத்தில் வரும் வளர்பிறைச் சஷ்டி யன்று மேற்கொள்வது. முருகப்பெருமான் சூரபன்மனை அழித்த நாள் இந்த நாள்தான். இதனையே கந்தபுராணம் கந்தவிரதப் படலத்தில்.

“ வெற்பொடும் அவுணன்தன்னை
வீட்டிய தனிவேல் செங்கை
அற்புதன் தன்னைப் போற்றி
அமரரும் முனிவர் யாரும்
சொற்படு துலையின் திங்கள்
சுக்கில பக்கந் தன்னில்
முற்பகல் ஆதி யாக
மூவிரு வைகல் நோற்றுர் ”

என்று கூறப்பட்டிருக்கிறது. ஐப்பசி மாதம் வளர்பிறைச் சஷ்டியைக் கடைசி நாளாகக் கொண்டு திருவிழாக்கள் நடைபெறுகின்றன. இந்த நாளில்தான் விழாவை நடத்தவேண்டுமென்பதை ஸ்கந்தோத்சவ விதிப் படலத்திலும், கௌசிகப் பிரச்ன குமாரதந்திரத்திலும் கூறப்பட்டிருக்கிறது.

சைவர்கள் பொதுவாக ஒவ்வொரு மாதத்திலும் வருகிற வளர்பிறைச் சஷ்டியிலும், கார்த்திகை நட்சத்திரத்திலும் உபவாசமிருக்கின்றனர். சிறப்பாக ஐப்பசிமாதக் கந்த சஷ்டியில் ஆறு நாட்கள் உணவருந்தாதிருந்து விரதத்தை அனுஷ்டிக்கின்றனர். இந்த ஆறு நாட்களிலும் முருகன் புகழ்நூல்களான திருமுருகாற்றுப்படை, கந்தர் கலிவெண்பா, கந்தர் அனுபூதி, கந்தர் அலங்காரம், கந்த சஷ்டிக் கவசம் முதலிய நூல்களை ஆசாரத்துடன் ஓதிவரும் வழக்கமும் நம் நாட்டில் இருந்து வருகின்றது. இதுவன்றி கந்தபுராணம், கந்தபுராணச் சுருக்கம் இவைகளையும் பெரியோர்கள் படிக்கக் கேட்டும், தாமே படித்தும் விரத நாட்களைக் கழிப்பதும் உண்டு. மேற்சொன்ன எல்லாவகை விரதநாட்களிலும் மக்கள் காலையில் நீராடி நித்தியக்கடன்களை முடித்து, ஆலயம் சென்று முருகப்பெருமானை வழிபட்டால் இம்மையில் எல்லா நன்மைகளையும் பெற்று, மறுமையில் பேரானந்தப் பெருவாழ்வை அடைவார்கள் என்று கந்தபுராணம் கூறுகிறது. ஒருவர், புலவர் ஒருவரைப் பார்த்து குடம், சட்டி இவைகளை வைத்து ஒரு பாடல் பாடச் சொன்னார். முருக பக்தரான புலவர் “குக்குடத்தைப் பிடித்தவன் சட்டியை நோக்கக் குறைவில்லையே ” என்று முடியும் செய்யு

நக்கீரர்

முருகப்பெருமானின் திருத்தொண்டர்களுள் முதன்மையாக வைத்தெண்ணப்படுபவர் நக்கீரர். ஏன் அவர் பழைமையான அடியவரும்கூட. அவர் பாடியருளிய திருமுருகாற்றுப்படை யென்னும் சிறந்த நூல் இலக்கிய உலகிலும் சமய உலகிலும் என்றும் நின்று நிலவும் பெற்றியுடையது. இப்புலவர் பெருமானின் வரலாறு பல நூல்களில் பலவாறாகக் காணப்படுகிறது. அவரைப்பற்றி ஆராய்ச்சியாளர்கள் பற்பல விதமான கருத்துக்களை வெளியிட்டிருக்கின்றனர். இவர் வரலாற்றை பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணத்தில் தருமிக்குப் பொற்கிழி அளித்தது, கீரனைக்கரையேற்றியது, கீரனுக்கு இலக்கணம் உபதேசித்தது, சங்கத்தார் கலகந் தீர்த்தது என்ற நான்கு படலங்களிலும், பெரும்பற்றப்புலியூர் நம்பியின் திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்தில், கிழியறுத்தது, கீரனைக்கரையேற்றியது, குறுமுனிக்குத் தமிழ் உரைத்தது, ஊமை தமிழறிந்தது முதலிய படலங்களிலும், நிரம்ப அழகிய தேசிகர் செய்த திருப்பரங்கிரிப் புராணம் நக்கீரச் சருக்கத்திலும், சிவப்பிரகாச சுவாமிகள் அருளிய சீகாளத்திப் புராணத்தின் நக்கீரச் சருக்கத்திலும் காணலாம்.

இவருடைய பிள்ளைத் திருநாமம் பாலப்பன் என்பர். நக்கீரர் என்று திருப்பரங்கிரிப் புராணம் கூறுகிறது. மற்ற நூல்களில் நக்கீரர் என்றே காணப்படுகிறது. ந+பின்னை = நப்பின்னை, ந+செள்ளை=நச்செள்ளை என்றாற்போல ந+கீரர்=நக்கீரர் என்று கொள்ள வேண்டும். இவர்வாழ்ந்த காலத்தை மூன்றாம் தமிழ்ச்சங்கமிருந்த இரண்டாம் நூற்றாண்டின் இடைப்பகுதியான காலம் என்று கொள்ளலாம். இவருடைய சமயம் சைவ சமயம் என்பதை ஆராய்ச்சியாளர் பலரும் ஒப்புக்கொள்கின்றனர். ஆனால் இவர், திருமால், இந்திரன், முருகன், வாலியோன் முதலிய எல்லோரையும் புகழ்ந்து பாடியிருக்கிறார். 'பொய்யடிமை இல்லாத புலவர்க்கும் அடியேன்' என்ற சுந்தரர் கூற்று இவருள்பட சங்கப்புலவர்களைக் குறிக்கும் என்பது ஒரு சாரார் கருத்து. நம்பியாண்டார் நம்பி, "தரணியிற் பொய்மை இலாத் தமிழ்ச் சங்கமதில் கபிலர் பரணர் நக்கீரர் முதல் நாற்பத்தொன்பது பல் புலவோர்" என்பது இதனை வலியுறுத்துகிறது. "பொய்யற்ற கீரன் முதலாம் புலவோர் புகழ்ந்த ஐயன்" முருகன் என்று கச்சியப்ப சிவாச்சாரியார் கூறுகிறார். மேலும் நக்கீரர் பாடிய திருமுருகாற்றுப்படை, கைலைபாதி காளத்தி பாதி யந்தாதி முதலிய நூல்கள் பதினோராந் திருமுறையில் சேர்த்திருப்பது இதற்கு இன்னும் ஆதரவு அளிக்கிறது. இப்புலவர் மணி

ளைப் பாடினார். குக்குடம் கோழி. கோழிக் கொடியைப் பிடித்த முருகனின் சஷ்டியை அனுஷ்டித்தால் ஒருகுறையும் வாராதென்பது அதன் பொருள்.

கந்தபுராணம் நம்முடைய சொந்தபுராணம். நம்மிடத்தேயுள்ள சூரபன்மாதியரான ஆணவ கன்ம மாயா மலங்களில் உழன்று அல்லற் படாமல் அவைகளினின்றும் விடுபட்டு வீடடைய வேண்டுமென்ற தத்துவத்தையே கந்தபுராணம் அடிப்படையாகக் கொண்டுள்ளது. ஆகையால் நாம் எல்லோரும் கந்தசஷ்டி விரதத்தை முறைப்படி அனுஷ்டித்து பரங்கருணைத் தடங்கடலான அறுமுகச் செவ்வேளின் திருவருளுக்குப் பாத்திரமாவோமாக.

"முடியாப் பிறவிக் கடலில்
புகார்முழு துங்கெடுக்கும்
மிடியார் படியில் விதனப்
படார்வெற்றி வேற்பெருமாள்
அடியார்க்கு நல்ல பெருமாள்
அவுணர் குலமடங்கப்
பொடியாக் கியபெரு மாள்திரு
நாமம் புகல்பவரே"

—கந்தரலங்காரம்

சிவனடியார் மட்டும் அன்றி முருகன் திருத் தொண்டர் ஆகவும் விளங்குகிருர்.

அருணகிரிநாதர் 'பழுத்தமுது தமிழ்ப் பலகையிருக்கு மொருகவிப்புலவன் இசைக் குருகி வரைக்குகையை இடித்து வழிகாணும்' என்று புகழ்கிருர். இவர் பிறந்து வளர்ந்து வாழ்ந்த ஊர் மதுரை, இவரை **மதுரைக்கணக் காயனூர் மகனூர் நக்கீரனூர்** என்று நூல்களில் கூறப்பட்டிருக்கிறது.

இவர் திருமுருகாற்றுப்படையைப் பாடு வதற்குக் காரணமாக இருந்த நிகழ்ச்சிகளை ஒருவாறு தொகுத்துக் கூறலாம். சண்பக மாறன் என்னும் பாண்டியன் நிலாமுற்றத்தில் தேவியுடன் இருந்தான். அரசியின் கூந்தலி னின்றும் நறுமணம் வீசியது. அது இயற்கை மணமா அல்லது செயற்கை மணமா என்ற ஐயம் பிறந்தது. தன் கருத்திலுள்ள ஐயத்தை நீக்குபவர்க்கு ஆயிரம் பொற்காசு கள் கொடுப்பதாகச் சொல்லி தமிழ்ச் சங்க மண்டபத்தில் பொன் முடிப்பைக் கட்டினுன். தருமி என்ற அந்தண இளைஞன் தனக்கு அப் பொற்கிழி கிடைக்குமாறு அருள் செய்ய வேண்டி ஆலவாயண்ணலிடம் குறையிரந் தான். சொக்கநாதர் திருவருளால் 'கொங்கு தேர் வாழ்க்கை' என்று தொடங்கும் பாசுரம் கிடைத்தது. பெண்களின் கூந்தல் மணத்தை விட வாசனையுள்ள பூக்களை நீ அறிவாயோ என்று வண்டைப் பார்த்துக் கேட்கும் கூற் ருக அமைந்தது அப்பாட்டு. தருமி அரச னிடம் பாட்டைக்காட்டினுன். தன் கருத்தி லுள்ள ஐயத்தை நீக்கியதால் பொன் முடிப்பை எடுத்துக்கொள்ள ஆணையிட்டான். சங்கத்தில் சென்று பொற்கிழியை எடுக்க தருமி முயன்றபோது நக்கீரர் தடுத்தார்; பாட்டு குற்றமுடையது என்று காரணம் கூறி ஞர். தருமி வருந்தி இறைவன் திருக்கோயில் சென்று முறையிட்டான். அவன் நிலைமைக் கிரங்கிய சுந்தரேசக் கடவுள் ஒரு புலவர் உருக் கொண்டு சங்க மண்டபத்தைச் சார்ந்தார். தம்முடைய கவிக்குக் குற்றம் கூறியது யார் என வினவினுர். நானேயென்று நக்கீரர் பதி லுரைத்தார். 'என்ன குற்றம் உடையது அப்பாடல்' என்று கடவுட்புலவர் கேட்டார். 'சொற் குற்றமில்லையெனினும் பொருட் குற்ற முடையது; பெண்கள் கூந்தலுக்கு செயற்கை **மணமேயன்றி இயற்கை மணம்** இல்லை' என்று நக்கீரர் கூறினுர். 'கற்புடைப் பெண் டிர் கூந்தலும் அத்தகையதோ' என இறைய ஞர் கேட்க, 'ஆம்' என்ருர் நக்கீரனுர். 'தேவ மகளிர், இந்திராணி, கலைவாணி, திருமகள் இவர்களுடைய கூந்தலும் அப்படிப்பட் டதோ' என மேலும் கேட்டார் சொக்கநாதப் புலவர். "அப்படியேதான்" என்ருர் நாவலர் நக்கீரர். 'நீ வழிபடும் கடவுளான ஞானப் பூங்கோதையின் கூந்தலும் அத்தன்மை த்தோ' என்று மீண்டும் ஆண்டவன் கேட் டார். 'அதுவும் அத்தன்மைத்தே' என அஞ் சாது பதிலுரைத்தார் புலவர் சிங்கம். சினங் கொண்ட இறைவன் நெற்றிக்கண்ணைத் திறந் தார். 'நெற்றிக்கண் காட்டினும் குற்றம் குற் றமே; உடல்முற்றும் கண்ணுனுலும் யான் அஞ்சேன்" என்று வீரம் பேசினுர் புலவரேறு. ஆனுல் நெற்றிக்கண் வெம்மையால் நக்கீரர் உடல் வெந்தது. அதை ஆற்ருது பொற்ரு மரைக்குளத்தில் வீழ்ந்தார். இறைவன் மன மிரங்கி அவரைக் கரையேற்றினுர். உடலில் தொழுநோய் காணப்பட்டது. 'சென்று நீ கயிலைகாணில் தீரும் இக்கொடு நோய்' என்று சிவபெருமான் கூறினுர். கயிலையைக் காண நக்கீரர் புறப்படுகிருர். நட்பினரைப் பிரிய மனம் இல்லாமல் நொந்து சொல்கிறதாக வரும் சீகாளத்திப் புராணத்தின் பாடல்கள் கீழ்வருவன:—

"என்றினி மதுரை காண்பேம் எப்பகல்
சவுந்தரேசன்
தன்திருவடிகள் காண்பேம் தாயை
எஞ்ஞான்று காண்பேம்
வென்றிவேல் தருமவேந்தர் வேந்தனை
எந்நாட் காண்பேம்
ஒன்றுயிர்த் துணையாம் சங்கத்துறவை
எப்பொழுது காண்பேம்"

நுணங்குமா ணறிவின் மிக்க நூல் வலார்
மறப்பர் கொல்லே
வணங்குதேர்த் தானைமன்னர் மணிமுடி
உழுகழற்கால்
அணங்குடை அரிமான்துப்பின் அரசர்கோன்
நினையான் கொல்லோ
இணங்குநாற் புலவர் நாற்பா னெழுவர்
என்றுரைக் குங்கொல்லோ."

மனத்தை உருக்கவல்ல இப்பாடல்களைப் படித்துப் படித்து நினைத்து நினைத்து இன்புறும் பான்மையுடையவை. புலவர்களிடம் பிரியாவிடை பெற்று மதுரையைவிட்டகன்ற நக்கீரப் பெருந்தகையார் தண்பரங்குன்றின் சாரலையடைந்தார்; சரவணப் பொய்கையில் படிந்தார்; கரையிலுள்ள ஆலமர நிழலில் அமர்ந்து சிவபூசை மேற்கொண்டார். ஆலிலை யொன்று தண்ணீரில் பாதியும், தரையில் பாதியுமாக வீழ்ந்து ஒவ்வொரு பாதியும் மீனும் பறவையுமாகி ஒன்றையொன்று இழுத்தது. நக்கீரர் இவ்வதிசயத்தைப் பார்த்து நகத்தினால் அவைகளை வெவ்வேறாகக் கிள்ளினார். சிவபூசை தடைபட்டு அதினின்றும் வழுவினார். அப்படிச் செய்தவர் ஆயிரவரை ஒருங்குண்ண விரதம் பூண்ட பூதம் ஒன்று முன்னாலேயே அப்படிச் செய்த 999 பேர்களை அம்மலைக்குகையில் அடைத்து வைத்து ஒருவருக்காகக் காத்திருந்தது. நக்கீரரைப்பிடித்துக்கொண்டு போய்க் குகையில் அடைத்தது. அங்குள்ளோர் நக்கீரரை "ஒரு குறை நீக்க வந்தாய்" என்றனர். இதில் இரு பொருள்படச் சிகாளத்திப் புராணம் கூறியிருப்பது மிகவும் போற்றத்தக்கது. 'ஆயிரத்தில் ஒன்று குறைவாக இருந்ததால் நாங்கள் இதுகாறும் உயிருடன் இருந்தோம்; நீர் ஒருவர் வந்ததால் ஆயிரம் பேர் பூர்த்தியாகி பூதத்திற்கிரையாகப் போகிறோம்' என்பது நேரே கொள்ளப்படும் பொருள். ஆனால் நக்கீரர் திருமுருகாற்றுப்படை பாடி அவர்களைக் காப்பாற்றியதால் 'ஒருகுறை நீக்க வந்தாய்' என்ற பொருளும் தொக்கி நின்று உணர்த்துகிறது. நக்கீரர் குகையில் அடைபட்டிருப்பவர்களின் நிலைமைக்கிரங்கி குன்றக்குமரன் மேல் திருமுருகாற்றுப்படைப் பாடினார். செவ்வேளும் வேலால் மலையைப் பிளந்து நக்கீரர் உள்பட எல்லோரையும் விடுவித்தருளினர். பூதத்தின் பேர் கற்கிமுகி, உக்கிரன் அண்டாபரணன் என்று கூறப்படுகிறது.

திருமுருகாற்றுப் படையைப் பற்றிக் கொஞ்சம் அறிந்துகொள்வது அவசியம். ஆற்றுப்படையென்பது அரசர் முதலியோரிடம் பரிசில் பெற்றுச் செல்பவன் அதை விரும்பிச் செல்கிற ஒருவனுக்கு வழி துறைகளைக் கூறுவது. கூத்தராற்றுப்படை (மலைபடுகடாம்), சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, பொருநாற்றுப்படை இவைகள் திருமுருகாற்றுப்படையுடன் காணப்படும் பத்துப்பாட்டு நூல்கள். முருகாற்றுப்படை யென்பதற்கு 'முருகன் பால் வீடு பெறுதற்கு விரும்பிய ஓர் இரவலனை ஆற்றுப்படுத்தியது' என்று பொருள் கொள்ளவேண்டும். மற்றைய ஆற்றுப்படைகள் ஆற்றுப்படுத்தப்பட்டார் பெயரால் அமைந்திருக்க, முருகாற்றுப் படை பாட்டுடைத் தலைவனான முருகன் பெயரால் அமைந்திருக்கும் சிறப்புடையது. அது பத்துப்பாட்டிற்குக் கடவுள் வாழ்த்து போலும் முதலிடம் பெற்றிருக்கிறது. முருகன் தங்கிய சிறந்த பதிகளை ஆறுபடை வீடுகளாக வகுத்துப் பாடியவர் நக்கீரர். அதில், மாடங்கள் நிறைந்த தெருக்களையுடைய மதுரையின்மேற்கிலுள்ள **திருப்பரங்குன்றத்தில்** முருகன் எழுந்தருளியிருக்கிறார் என்று கூறுகிறார். யானைஊர்ந்து, ஆறுவகையான செயல்களை இயற்றும் ஆறு முகங்களும் பன்னிரண்டு கைகளும் விளங்க வான் வழியே சென்று **திருச்சீரலைவாய்** என்ற திருச்செந்தூரில் தங்குதலும் முருகனுக்கு இயல்பு என்கிறார். தெய்வயானை யம்மையாருடன் **திருவாவினன்குடியிலும்** வீற்றிருப்பர்; தேவரும், மூவரும், யாவரும் தத்தம்குறைகளை நீக்கிக்கொள்ள ஆகாய வழியே வந்து தெரிசிப்பார்கள் என்று சொல்கிறார். **திருவேகரத்தில்** எழுந்தருளிய முருகனை அந்தணாளர் நீராடி மலரேந்தி வழிபடுகின்றனர் என்று மேலும் நவில்கிறார். மேலும் **குன்றுதோறும்** விளையாடுவது அக்குமரன் இயல்பென்றும், குன்றிலுள்ள வேடர்கள் குரவைக் கூத்தாடுதலும், வெறியாட்டயர்தலுமான செயல்களால் வணங்குவார் என்று விரிவாகப் பேசுகிறார். இன்னும், காடு, சோலை, அரங்கம், ஆறு, குளம், சதுக்கம், சந்தி, கடப்பமரம், மன்றம், பொதியில், எல்லா இடங்களிலும் முருகன் எழுந்தருளியிருப்பார் என்றும், அவ்விடங்களுக்குள் எங்கே சென்று துதித்து வணங்கினாலும் **பழமுதிர்சோலைக்** குரியான முருகவேள் தோன்றி வீடுபேறு தருவர் என்றும் கூறுகிறார். திருப்பரங்குன்றம் மூலாதாரம், திருச்செந்தூர் சுவாதிஷ்டானம், திருவாவினன்குடி மணிபூரகம், திருவேரகம் அநாகதம், பழமுதிர்சோலை விழுத்தி, குன்றுதோறாடல் ஆக்கினேயம் என்று ஆறு ஆதாரத் தலங்களாகவும் கூறுவர்.

"ஆல்கெழு கடவுள் புதல்வ; மால்வரை
மலைமகள் மகனே; மாற்றோர் கூற்றே;
வெற்றிவெல் போர்க் கொற்றவைசிறுவ;
இழையணி சிறப்பிற் பழையோள் குழவி;
வானோர் வணங்கு வில் தானைத்தலைவ;
மாலைமார்ப; நூல்அறி புலவ;
மங்கையர் கணவ; மைந்தர்ஏறே;
வேல்கெழு தடக்கைச் சால்பெருஞ் செல்வ;
அரும்பெறன் மரபின் பெரும்பெயர் முருக;"

என்ற அடிகள் கவனிக்கற்பாலன. இந்த திருமுருகாற்றுப்படை தொன்றுதொட்டுப் பாராயண நூலாக இருந்து வருவது யாவரும் அறிந்ததொன்று. இதைப் பதினோராந் திருமுறையில் சேர்க்கப்பெற்றிருக்கிறது. இது வல்லாமல் கைலை பாதி காளத்தி பாதி அந்தாதி, திருஈங்கோய்மலை யெழுபது, திருவலஞ்சுழி மும்மணிக்கோவை, திருவெழு கூற்றிருக்கை, பெருந்தேவபாணி, கோபப்பிரசாதம், காரெட்டு, போற்றித் திருக்கலிவெண்பா, கண்ணப்பதேவர் திருமறம் என்ற ஒன்பது நூல்களும் நக்கீர தேவநாயனார் பெயரால் பதினோராந் திருமுறையில் இடம் பெற்றிருக்கின்றன. இன்னும் நெடுநல்வாடை, அகநானூற்றில் 17 செய்யுட்கள், புறநானூற்றில் 3 செய்யுட்கள், குறுந்தொகையில் 8 பாட்டுகள், நற்றிணையில் 7 பாடல்கள், களவியலுரை, அடிநூல், நாலடி நானூறு முதலிய நூல்களும் இவர் பெயரால் வழங்குகின்றன. பதினோராந் திருமுறையில் அடங்கிய நூல்களுள் திருமுருகாற்றுப்படை யொழிய ஏனையவெல்லாம் சங்க காலத்துக்குப்பிற்பட்ட நூல்கள் என்று ஆராய்ச்சியாளர் கண்ட முடிபு. இவ்வாராய்ச்சி இலக்கிய வரலாற்றுக்குத் தேவையானவை. சமயக் கண்கொண்டு பார்ப்பவர்களுக்கு அவ்வாராய்ச்சியில் முட்டுப்பட்டு இடர்ப்பட வேண்டாமென்றே தோன்றும். சிறந்த சங்க இலக்கியக் கருவூலமான திருமுருகாற்றுப்படை பண்டுதொண்டுப் பாராயண நூலாகவும், முருகன் புகழ் நூலாகவும் விளங்கிய காரணத்தால் திருமுறை வகுத்த பெரியோர்கள் இந்நூலைப் பதினோராம் திருமுறையில் சேர்த்திருக்கின்றார்கள். அவ்வான்றோர் அடிச்சுவடு பற்றி குமரவேளின் குன்றுப்புகழ்பாடி நாமும் அவன் திருவருளுக்குப் பாத்திரமாவோமாக.

"குன்றம் எறிந்தாய் குரைகடலில் சூர் தடிந்தாய்
புன்தலைய பூதப் பொருபடையாய்—என்றும்
இளையாய் அழகியாய் ஏறூர்ந்தான் ஏறே
உளையாய்என் உள்ளத் துறை."

❋❋❋

தென்கரை முருகன் கோயில் வாகன மண்டபத் திறப்பு விழா

மதுரை ஜில்லா, பெரிய குளம் தாலூகா, பெரிய குளம் தென்கரை ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி கோயிலுக்கு சென்னை அறநிலைய பாதுகாப்புத்துறை அமைச்சர் கனம் ஸ்ரீ எம். பக்தவத்சலம் அவர்கள் 14-10-58உ காலை 7-மணிக்கு விஜயம் செய்து இந்த தேவஸ்தானத்தில் சென்னை சர்க்காரால் மானியமாக அளிக்கப்பட்ட தொகையிலிருந்து கட்டப்பட்ட வாகன மண்டபத்தைத் திறந்து வைத்தார்கள்.

❋

மங்களாம்பிகை மாளிகை

கும்பகோணம் ஸ்ரீ ஆதி கும்பேசுவர சுவாமி தேவஸ்தானத்துக்குச் சேர்ந்தமான டையூர் சோமேஸ்வரர் சன்னதி டி. எஸ். 920-ல் சுமார் ரூ. 12500 செலவில் நிர்மாணிக்கப்பட்ட "மங்களாம்பிகை மாளிகை" என்ற புதிய கட்டிடத்தை சென்னை அறநிலைய இலாகா கமிஷனர் உயர் திரு. ஏ. உத்தண்டராமன், பி. ஏ. பி. எல்., ஐ. ஏ. எஸ்., அவர்கள் 8-10-58-ந் தேதி காலை 8-மணிக்கு திறந்து வைத்தார்கள்.

❋

இந்து அறநிலைய ஆட்சி ஆணையாளர் அலுவலகம், சென்னை

14 - 10 - 58

சுற்றறிக்கை 31930/58

பொருள் : இந்து அறநிலைய ஆட்சித்துறை- கோயில்கள், விக்கிரகங்கள் இவைகளைத் தூய்மையாக வைத்துக் கொள்ளல் - சுற்றறிக்கை.

கோயில்களின் உட்புறங்கள், சுற்றுப் புறங்கள், விளக்குகள், பாத்திரங்கள், விக்கிரங்களுக்குச் சார்த்தும் ஆடைகள் முதலியவைகளைத் சுத்தமாக வைக்க வேண்டிய அவசியத்தைப் பற்றியும், ஆலய நிர்வாக அலுவல்களில் முக்கிய அம்சங்களைப் பற்றியும், நிர்வாக அதிகாரிகளுக்குச் சுற்றறிக்கைகள் மூலமும், கோயில்களைப் பார்வையிடும்போது நேரில் சொல்லியும் அடிக்கடி வற்புறுத்தப்பட்டிருந்த போதிலும் சில நிர்வாக அதிகாரிகள் அந்தக் காரியங்களில் இன்னும் கவனம் செலுத்தாமலிருக்கிறார்கள். இந்தச் சுற்றறிக்கை மூலம் மறுபடியும் அவர்களுடைய முக்கிய கடமைகளை அவர்கள் கவனத்துக்குக் கொண்டுவரப் படுகிறது.

1. கோயில்களைத் தூய்மையாகவும் ஒழுங்கான முறையிலும் வைத்துக் கொள்வதில் அதிகக் கவனம் செலுத்த வேண்டும். கேமாக்சின் (Gamaxine) லைசால் (Lysol) பென்சயின் (Benzoin) முதலியவைகளைக் கொண்டு வௌவால் உபத்திரவத்தை அகற்ற வேண்டும்.

2. கோயில்களுக்குப் போதுமான வகையில் விளக்குகள் போடவேண்டும். கர்ப்பக் கிரகம், அர்த்த மண்டபம், இவைகளில் எண்ணெய் விளக்குகள் மாத்திரம்தான் போட வேண்டும். அவ்விரண்டிடங்களிலும் மின்சார விளக்குகள் போடக்கூடாது.

3. கர்ப்பக் கிரகத்தில் அல்லது மண்டபங்களில் உள்ள மூர்த்திகள் பேரில் மின்சார விளக்குகளின் நேர் வெளிச்சம் படாதவாறு மின்சார விளக்குகளை அமைக்க வேண்டும். வழிபடுவோர்க்கு பிம்பங்கள் நன்றாகத் தெரியும் படியாக எண்ணெய் விளக்குகளை அமைக்க வேண்டும்.

4. திருவிழாக் காலங்களில் உத்சவ மூர்த்திகளை எழுந்தருளச் செய்து வெளியே கொண்டுவரப்படும் வாகனங்கள், கேடகங்கள், இரதங்கள், பல்லக்குகள் முதலியவற்றின் மேல் மின்சார விளங்குகள் உபயோகிக்கக் கூடாது.

5. கோயில்களில் கோபுரங்கள், விமானங்கள், மதில்கள் இவைகளில் செடிகொடிகள் முதலியவை வளர வொட்டாமல் தடுப்பது கோயில் நிர்வாகிகளின் முக்கிய கடமையாகும். இதில் அவர்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும். அவைகளை முளையிலே அழிக்க முற்பட வேண்டும். செடிகொடிகள் மரங்கள் வளர்ந்திருந்தால் குளோப் மரங் கொல்லி (Globe tree killer) முதலிய ரசாயனப் பொருள்களைக் கொண்டு அவைகளை உடனுக்குடன் அழித்து விடவேண்டும்.

6. கோயில் பிரகாரங்களில் முள்செடிகள் இருந்தால் அவைகளை அகற்றி, அவ்வப்போது புல், பூண்டுகள் முதலியவற்றைச் செதுக்கி யெறியவேண்டும்.

7. கருங்கல் சுவர்கள், கருங்கல் தூண்கள் இவைகளிலுள்ள கல்வெட்டுக்கள், அழகிய சிற்பங்கள் முதலியவற்றின் மேல் வெள்ளையடிக்கவோ, வர்ணம் தீட்டவோ கூடாது. அப்படிச் செய்திருந்தால் அவைகளை நன்றாக அலம்பிப் பழைய உருவம் தெரியும்படி செய்து விடவேண்டும். கூடுமான வரையில் கல்வெட்டுக்களுக்கு நகல் எடுத்து வைக்கவேண்டும். சில கோயில்களில் எழுத்துக்களுள்ள கற்கள் படிகளாகவும், திண்ணைகளாகவும் அவைகள் இருக்க வேண்டிய இடத்தில் இல்லாமல் தனித்தும் கிடக்கின்றன. அவைகளைப் பாதுகாக்க வேண்டும். அவைகளுக்கு நகல் எடுத்து வைக்கவேண்

டும். திருப்பணி செய்யும்போது கல்வெட்டுக்களையும், சிற்பங்களையும் பாதுகாத்து இருந்த இடங்களிலேயே மீண்டும் அமைக்க வேண்டும்.

8. சிறிய அளவில் பழுதுபார்க்கவேண்டிய மராமத்து வேலைகளை உடனுக்குடன் நல்ல முறையில் செய்து விடவேண்டும்.

9. கோயில் கோபுரங்கள் முதலியவற்றிற்கு வர்ணம் பூசும்போது கவர்ச்சிகரமானதும் அழியாததுமான வர்ணங்களைப் பயன்படுத்த வேண்டும். இல்லாவிட்டால் சிவப்பு அல்லது மஞ்சள் காவியடித்தாற்போதும்.

10. கோயில்களிலுள்ள திருக்குளங்களில் பாசி முதலியவற்றை அவ்வப்போது எடுத்துவிடவேண்டும். அவைகளிலுள்ள தண்ணீர் பயன்படும் முறையில் வைக்க வேண்டும். சுகாதார இலாகா அதிகாரிகள் உதவி பெற்று நீரைச் சுத்தமாக வைத்துக் கொள்ளவேண்டும்.

11. உலோக விக்கிரகங்கள் சுத்தமாகவும், பளபளப்பாகவும் இருக்கும்படி புளிக்காப்பு முதலியன செய்யவேண்டும்.

12. நடராஜர் விக்கிரகங்களுக்கு சாஸ்திர முறைப்படி புலித்தோல் போன்ற துணியை அரைக்கசைத்து அலங்காரம் செய்து வைக்கவேண்டும். மற்ற விக்கிரகங்களுக்குச் சுத்தமான ஆடைகளை உபயோகிக்க வேண்டும்,

13. விக்கிரகங்களுக்கு (அதிலும் அடிக்கடி அபிஷேகம் செய்யப்படும் மூர்த்திகளுக்கு) நல்ல தூய ஆடை சாத்தியிருக்க வேண்டும். அந்த ஆடைகளைத் தினமும் துவைத்து உலர்த்தி வைக்கவேண்டும்.

14. ஆழ்வார்கள், நாயன்மார்கள் இவர்களின் உருவங்கள் முறைப்படி வரிசையில் அமைந்திருக்க வேண்டும். அவ்வுருவங்களுக்குப் பின்புறமுள்ள சுவரின் மேல் அவர்கள் பெயர்களும் திருநட்சத்திரங்களும் எழுத்துப் பிழைகளில்லாமல் எழுதப்படவேண்டும்.

15. ஒவ்வொரு மூர்த்தியின் சன்னதி வாயிலிலும் அம் மூர்த்தியின் பெயர் எழுதப்பட வேண்டும்,

16. பித்தளை விளக்குகள், பூசை சர்மான்கள் முதலியவைகளை நாள்தோறும் விளக்கிப் பளபளப்பாக வைத்திருக்கவேண்டும்.

17. சிவன் கோயில் சன்னதிகளில் தொங்கவிடப்படும் திரைகளில் இலிங்கம், நந்தி உருவங்கள் இருக்கவேண்டும். விஷ்ணு கோயில்களில் சங்கு, சக்கரம், திருநாமம் இவைகள் உடையதாய் இருக்க வேண்டும்.

18. நல்ல விபூதி, குங்குமம், சந்தனம், பன்னீர், புஷ்பம், வில்வம், துளசி இவைகள் கோயில்களிலேயே முறைப்படி தயாரிக்கப்பட்டு, அர்ச்சனை அபிஷேகம் முதலியவற்றிற்குக் கிடைக்கும்படி செய்யவேண்டும்.

19. தெரிசனத்துக்கு வருபவர்கள் பயன்படுத்துவதற்காக மண்டபங்களில் மடல் அல்லது கிண்ணம் போன்றவைகளில் விபூதி, குங்குமம், வைத்திருக்க வேண்டும்.

20. மந்திரங்கள், பூசைகள், பாராயணங்கள் இவைகளை முறைப்படி செய்விக்க வேண்டும்.

21. கோயில்களின் வருமானத்திற்கேற்ப, அனுமதி பெற்று ஓதுவார்கள், அத்யாபகக் கோஷ்டியினர், வேத பாராயண கோஷ்டியினர் முதலியவர்களை நியமிக்கவேண்டும.

22. திருவிழாக் கர்லங்களில், சமயச் சொற்பொழிவுகள், கதாக் காலட்சேபங்கள், திருமுறை திவ்வியப் பிரபந்த வேத பாராயணங்கள் இவைகளை ஏற்பாடு செய்யவேண்டும்.

23. மார்கழி மாதத்தில் திருப்பாவை-திருவெம்பாவை பாராயணம் செய்யவும் ஒலி பெருக்கி மூலம் ஒலி பரப்பவும், மாநாடுகள் சொற்பொழிவுகள் நடைபெறவும் ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

24. திருவிழாக் காலங்களில் திருவிழாக்களைப் பற்றிய விவரங்களும், அவைகளைப் பற்றிய தத்துவ விளக்கங்களும் சுருக்கமாக எழுதி வெளியிடப்படவேண்டும்.

25. ஒவ்வொரு ஸ்தலத்தைப் பற்றிய வரலாறும் அச்சிட்டு வெளியிடவேண்டும். அதில் கேர்யில்களின் சொத்துக்கள், வருமா

னங்கள், செலவுகள், கட்டளைகள், உபயங்கள் இவைகளைப் பற்றிய விவரங்கள் இருக்க வேண்டும்.

26. பூசைக் காலங்களைப் பற்றிய விவரங்கள், அர்ச்சனை முதலிய வழிபாட்டுக் கட்டணங்கள் பற்றிய விவரங்கள், திருவிழாக்கள் பற்றிய விவரங்கள் கரும்பலகைகளில் எழுதித் தொங்கவிடப்பட்டு அந்தந்தக் காலங்களில் ஒழுங்காகப் பூசைகள் நடைபெற வேண்டும்.

27. ஆழ்வார்கள், நாயன்மார்களால் பாடப்பெற்ற தலங்களில் அப்பாடல்களைக் கற்களில் பொறித்து வைக்கவேண்டும். மற்ற தலங்களிலும் வழிபாட்டுக்குரிய பாடல்களைச் சுவர்களில் அல்லது பலகைகளில் எழுதி வைக்கலாம்.

அ. உத்தண்டராமன்,
ஆணையாளர்.

***

நாதசுர வகுப்பு, சுவாமிமலை

திருக்கோயில்களில் நாதசுவரம் வாசிக்கும் முறைகளைப் பயிற்றுவிப்பதற்காக, சுவாமிமலையில் 30-3-58-ல் அறநிலைய அமைச்சர் கனம் எம். பக்தவத்சலம் அவர்களால் ஒரு வகுப்பு தொடங்கிவைக்கப்பட்டது. அதில் 13 பேர்கள் பயிற்சி பெற்றனர். நாதசுர வித்துவான் திருப்பாம்புரம் திரு. டி. என். சோமசுந்தரம் பிள்ளை ஆசிரியராக இருந்து பயிற்சியை நடத்தினர். நாதசுர வித்துவான் திருவிடைமருதூர் திரு. பி. எஸ். வீருசாமிப் பிள்ளை அவர்கள் அடிக்கடி வந்து பயிற்சி வகுப்பை மேற்பார்வையிட்டு ஆவனபுரிந்தார்கள். பயிற்சி வகுப்பின் நிறைவுவிழா 7-10-58 இல் முடிவடைந்தது. நாதசுர வித்துவான்கள் திருவிடைமருதூர் திரு. பி. எஸ். வீருசாமிப் பிள்ளை, திருவீழிமிழலை திரு. எஸ். சுப்பிரமணிய பிள்ளை, இஞ்சிக்குடி திரு. கே. பிச்சைக்கண்ணு இவர்களைக் கொண்ட குழுவினர் பயிற்சி பெற்றவர்களின் திறமையைப் பரீட்சை செய்தார்கள். பயிற்சி வகுப்பின் நிறைவுவிழா 7-10-58-ல் அறநிலைய அமைச்சர் கனம் எம். பக்தவத்சலம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அறநிலைய ஆணையர் திரு. ஏ. உத்தண்டராமன் ஐ. ஏ. எஸ். அவர்களும் கலந்துகொண்டார்கள். பயிற்சி பெற்றவர்களுக்கு அமைச்சரவர்களால் சர்ன்று பத்திரங்களும் வழங்கப்பட்டன.

இந்த வகுப்பில் ஆலயங்களில் நாள் தோறும் பூசை நடக்கும் வேளைகளிலும், திருவிழாக் காலங்களிலும் நாதசுவரத்தில் வாசிக்கவேண்டிய இராகங்களைக் குறித்த விவரங்கள் அடங்கிய ஒரு வெளியீடும் வழங்கப்பட்டது. அதை வேறோரிடத்தில் காண்க.

卐卐卐

கோயிலின் உள்ளே குடிசெய்து வாழ்ப்வர்
தாயினும் நல்லார். —திருமூலர்.